REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஓகஸ்ட் 11 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 189 | Friday 11, August, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## நூறு அடி பள்ளத்தில் வீழ்ந்து ஆட்டோ விபத்து

### குழந்தை உட்பட நால்வர் படுகாயம்



ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் பயணித்த முச்சக்கர வண்டியொன்று வீதியை விட்டு விலகி, நூறு அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

06

## தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

### சட்ட ரீதியாக பல நடவடிக்கைகள் முன்னெடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சட்ட ரீதியில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் பேச்சுவார்த்தையின் போது மலையகப் பகுதியில் உபயோகப்படுத்தப்படாத காணிகளை மீண்டும் அரசுடமையாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மலையக அரசியல் பிரதிநிதிகள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில்

06

அமைச்சர்களைக் குறை கூறுவதே சிலரது இலக்கு

## மலையக மக்களது பிரச்சினைகளை தீர்க்க ஒத்துழைப்பதே கிடையாது

### ஜனாதிபதியுடனான சந்திப்பையும் புறக்கணித்துவிட்டு குறைகூறல்

அமைச்சர் ஜீவன் சபையில் பதிலடி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களுக்கு அக்கறை கிடையாதென கூறுபவர்கள், ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்தது ஏன்? என அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று மலையக மக்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்கள் தெரிவித்த

06

இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் சபையில்

## நாட்டுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் திட்டங்களை அரசு மேற்கொள்ளாது

### கண்களை மூடிக்கொண்டு எதையும்செய்ய மாட்டோம் –அமைச்சர் அலி சப்ரி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்தியாவுடன் இலங்கை செய்துள்ள ஒப்பந்தங்களை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் அனுமதியுடன் சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டுக்கு நட்டம் ஏற்படும் எந்த செயற்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுக்காதென தெரிவித்த அவர், எந்த விடயத்திலும் கண்ணை மூடிக்கொண்டு செயற்பட முற்பட மாட்டோமென்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தயாசிறி ஜயசேக்கர எம் பி, இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் கைச்சாத்திட்டுள்ள

06

உலகில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளான

# இந்தியா, UK முறைமையில் பொலிஸ், அதிகாரப் பகிர்வு

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்த TNA குழு தெரிவிப்பு

**மாவட்டக் குழுக்களின், சில ஆளுநர்களின் தீர்மானங்கள், நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களை களைவதற்கு 13ஆவது திருத்தம் அமுல்படுத்த வேண்டிய தேவை உள்ளதாகவும் TNA சுட்டிக்காட்டு**




பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட அதிகாரப் பகிர்வு தொடர்பில் இங்கிலாந்து, இந்தியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் முறைகளை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த முடியுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் விளக்கமளித்தனர்.

13ஆவது திருத்த சட்டத்தில் பொலிஸ் அதிகாரம்

06

துரித பொருளாதார வளர்ச்சியை நோக்கி

## நாட்டை முன்னேற்ற, வலுவான நிதி, மனித மூலதனம் அவசியம்

### பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப உதவியோருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு



வலுவான நிதி மற்றும் மனித மூலதனம் இல்லாமல் ஒரு நாட்டை துரித பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்ல முடியாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட போட்டிப் பொருளாதாரமாக கட்டியெழுப்பப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் (09) நடைபெற்ற இலங்கை தொழிற் சங்க அமைப்பின் 36 ஆவது வருடாந்த மாநாட்டில்

06

## நல்லூர் ஆலய வருடாந்த விழா காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று (10) காலை நடைபெற்றது. நல்லைக் கந்தன் ஆலயத்திலிருந்து மாட்டுவண்டியில் கல்வியங்காட்டுக்கு காளாஞ்சி எடுத்துச் செல்லப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

Passport பெற்றுக்கொள்வதற்காக

## Online மூலமாக நேற்று வரை 50,330 விண்ணப்பங்கள் பதிவு

### திணைக்கள கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவிப்பு




குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு ஒன்லைன் முறை மூலம் நேற்று வரை 50,330 விண்ணப்ப படிவங்கள் கிடைத்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று 10 ஆம் திகதி காலை 08.30 மணி வரை கிடைத்துள்ள 50,330 விண்ணப்பப் படிவங்களில் 41,588 விண்ணப்பங்கள் சாதாரண சேவையின் கீழ் கிடைத்துள்ளன. இவை அனைத்திலும் ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப

06

## பிரமிட் திட்டங்களில் மக்களை ஈடுபட வேண்டாமென வலியுறுத்து

### மத்திய வங்கி பொது மக்களுக்கு அவசர அறிவிப்பு



பிரமிட் திட்டங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு, இலங்கை மத்திய வங்கி, மக்களுக்கு மீண்டுமொரு அவசர அறிவிப்பை வழங்கியுள்ளது.

பிரமிட் திட்டங்களைச் செயல்படுத்தும் மோசடியாளர்கள் தொடர்பில், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

பிரபல விளையாட்டுக்கள், மதம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்குவதன் மூலம் சமூகத்தில் இவர்கள் நல்லவர்களாக தோன்றுவதற்கு முயற்சிப்பதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பிரமிட் திட்டங்களில் பங்கேற்பது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, இதில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

06



**குருந்தூர்மலை பொங்கல் விழாவை தடுத்து நிறுத்தவும்**
ஜனாதிபதியிடம் சரத் வீரசேக்கர வலியுறுத்து
03



**சட்ட விரோத காணி அபகரிப்பில் ஈடுபட்டுள்ளோர் வெளியேற கால அவகாசம்**
வாழைச்சேனை பொலிஸார் எச்சரிக்கை
03



**சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு**
கடந்த 06 நாட்களில் 30,303 பேர் வருகை
03



'அஸ்வெசும' நலன்புரித் திட்டம்
**மேன்முறையீடு, ஆட்சேபனை மீதான பரிசீலனை நிறைவுக்கு**
03



**13ஆவது திருத்தம் திருப்தி தரும் ஒரு தீர்வு அல்ல**
அரசுக்கு த.தே.ம.முன்னணி கடிதம்
03

## மலையக மக்களுக்கு மிக விரைவில் 10 பேர்ச் காணி

### ஜனாதிபதி, அமைச்சர்களுடனான பேச்சில் இணக்கம் –அமைச்சர் ஜீவன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையக மக்களுக்கு மிக விரைவில் பத்து பேர்ச் காணிக்கான உரிமை வழங்கப்படும் என்றும் அது தொடர்பாக ஜனாதிபதி உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில்

06

## கடும் அறிவித்தல்களையும் மீறி தாமரை கோபுரத்தை சேதப்படுத்தியோர் கைது



கொழும்பு தாமரை கோபுரத்தில் பல எச்சரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் இருந்த போதிலும், தாமரை கோபுரத்தின் கண்காணிப்பு தளத்துக்கு சேதம் விளைவித்த இளைஞர்கள் சிலர், கைதுசெய்யப்பட்டதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மருதானை பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்து நடவடிக்கை எடுத்ததுடன், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பொலிஸ்

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்:

## நௌபர் மௌலவி உள்ளிட்ட 24 பேர் மீது 7,721 குற்றச்சாட்டுகள்

### மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலை வகிப்பு



உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களை நடத்த சதி செய்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நௌபர் மௌலவி உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் குற்றச்சாட்டுக்கள் (09) மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வாசிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக 7,721 குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்டன. அவற்றில் ஒரு குற்றச்சாட்டை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான தமித் தொட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள்

06

மலையக மக்களது முன்னேற்றத்தில்

## இந்திய அரசு போன்று பிரிட்டன் அரசினதும் அக்கறை அவசியம்

### பாராளுமன்றில் மனோ எம்பி வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்திய அரசாங்கத்தைப் போன்றே பிரிட்டிஷ் அரசாங்கமும் மலையக பெருந்தோட்ட சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உதவ முன் வர வேண்டுமென, மனோ கணேசன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதே வேளை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள 3000 கோடி ரூபாவை, மலையக பெருந்தோட்ட சமூகத்தின் கல்வி முன்னேற்றத்திற்காக செலவிட அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மலையக மக்கள்

06





# தினகரன் 91 ஆவது ஆண்டை முன்னிட்டு பேருவளையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்...











படங்கள்: பீ.எம்.முக்தார்









தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 11 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.45
லுஹர் - 12.17
அஸர் - 03.35
மஃரிப் - 06.27
இஷா - 07.40

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆடி 26
ராகுகாலம் : காலை : 10.32 - 12.04வரை
சுபநேரம் : காலை : 6.04 - 7.34வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்

# ஆசியான் அங்கத்துவத்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

## பேச்சுக்களை ஆரம்பிக்க திட்டமென்கிறார் ஜனாதிபதி

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவில் (RCEP) அங்கத்துவம் பெற்று, ஏனைய ஆசியான் நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்துபசுபிக் பிராந்தியம் தொடர்பான 'ஆசியான்' அமைப்பின் தொலைநோக்கு பார்வைக்கு, தான் உடன்படுவதாகவும், அந்த தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதற்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்தோனேசிய தூதரகத்தில் கடந்த (08) நடைபெற்ற 56ஆவது




"ஆசியான்" தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

1967 ஆகஸ்ட் (08) தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ஆசியான்) இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கையொப்பத்துடன் தாய்லாந்தின் பெங்கொக்கிலுள்ள வெளியுறவு அமைச்சுக் கட்டிடத்தில் உருவாக்கப்பட்டது. புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மியான்மார்,

06

'அஸ்வெசும' நலன்புரித் திட்டம்

# மேன்முறையீடு, ஆட்சேபனை மீதான பரிசீலனை நிறைவுக்கு



'அஸ்வெசும' நலன்புரி திட்டத்துக்கு கிடைத்துள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் மீதான பரிசீலனை, இம்மாதம் நிறைவடையுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (09) உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டார். 'அஸ்வெசும' நலன்புரி திட்டம் தொடர்பில் இதுவரையில் 24,059 மேன்முறையீடுகளும், 24,495 ஆட்சேபனைகளும் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் 20 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகளை வழங்குவதே 'அஸ்வெசும' ஆறுதல் நலன்புரி திட்டத்தின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 13ஆவது திருத்தம் திருப்தி தரும் ஒரு தீர்வு அல்ல

## அரசுக்கு த.தே.ம.முன்னணி கடிதம்



13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர்களிடம் கோரியிருந்தார்.

இதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு எழுத்து மூலம் கடந்த (08) கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கையெழுத்திட்ட கடிதம் நேற்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

13ஆவது திருத்தம், இனப்பிரச்சினைத் தீர்வின் தொடக்கப் புள்ளியாகவோ இறுதித் தீர்வாகவோ ஏற்றுக்கொள்ள முடியாது. 1987ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்புக்களால் 13ஆவது திருத்தம் நிராகரிக்கப்பட்டதாகவும் அக்கடித த்தில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ்த் தேசம். இறைமை, சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த சமஷ்டி அரசியல் யாப்பின் மூலம் மட்டுமே,இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

75 வருடங்களாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண இதுவே வழி என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம்,1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டபோது அதனைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தொடக்கப்புள்ளியாகக் கூட ஏற்றுக் கொள்ள முடியாதெனக் குறிப்பிடப்பட்டது.

இதனைச் சட்டமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாமென்றும், இதைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட் டது.

அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம், செயலாளர் அமிர்தலிங்கம் சிரேஸ்ட உபதலைவர் இரா சம்பந்தன் ஆகியோர் ஒப்பமிட்டு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதமும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து தயாரித்த தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டித்தீர்வு யோசனை வரைபையும் இணைத்து நேற்று முன்தினம் (09) கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்பியால் கடிதம் கையளிக்கப்பட்டது.

தென் கொரிய கானுன் சூறாவளி

## இலங்கை சாரணர்கள் குழு பாதுகாப்பாக வெளியேற்றம்

உலக சாரணர் 25ஆவது ஜம்போரியில் பங்கேற்கச் சென்றுள்ள இலங்கை சாரணர் குழுவினர் (08) தென் கொரியாவின் சேமன்ஜியம் ஜம்போரி தளத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தென் கொரியா ஊடாக நேற்று முன்தினம் (09) க ரையைக் கடக்கவுள்ளதாக எதி ர்வு கூறப்பட்டுள்ள கானுன் சூறாவளியைக் கருத்திற்கொண்டு, இலங்கை சாரணர் குழுவினர் சேமன்ஜியம் ஜம்போரி தளத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இக் குழுவினர் சியோலின் புறநகரிலுள்ள சியோனனில் உள்ள டாங்கூக் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டனர். தமது புதிய தங்குமிடத்துக்கு பாதுகாப்பாக சென்றடைந்த இலங்கை

06

# அனைத்து சவால்களுக்கும் தீர்வு நவீன தொழில்நுட்ப முன்னேற்றமே

## அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

அனைத்து சவால்களுக்கும் தீர்வு நவீன தொழிநுட்பத்தின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஹோமாகம பனாகொட பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பயன்பாட்டு நுண்ணுயிர் ஆய்வு, அபிவிருத்தி மற்றும் பயிற்சி ஆய்வு கூடத்தை அமைச்சர் பந்துல குணவர்த்தன திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சார பூமி லங்கா பயோ ப்ராடக்ட்ஸ் தனியார் நிறுவனத்தால் சேதன விவசாயம் மற்றும் அது தொடர்பான பல ஆய்வுகளை

06



# குருந்தூர்மலை பொங்கல் விழாவை தடுத்து நிறுத்தவும்

## ஜனாதிபதியிடம் சரத் வீரசேக்கர வலியுறுத்து

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியு ள்ளது. இந்த நிகழ்வை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர கேட்டுக் கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் (09) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொருளாதார வீழ்ச்சிக்கு நாம் முகம் கொடுத்துள்ள இவ்வேளையில், இதனைப் பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகள் பிரிவினைக்கு முற்படுகின்றனர்.

குருந்தூர்மலை என்பது வடக்கிலுள்ள பௌத்த மத்தியஸ்தலமாகும். இதனை புராதனச் சின்னமாக அடையாளப்படுத்த நடவடிக்கை எடுத்தபோது, தமிழ் அடிப்படைவாதிகள் இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி, இந்த செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளார். இந்நிலையில், சில குண்டர்கள் அங்கு நுழைந்து புராதனச் சின்னத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது. எமது



நாட்டில் பல கோயில்கள் உள்ளன. பௌத்தர்களும் அங்கு சென்று வழிபடுகிறார்கள்.

06

# சட்ட விரோதமாக காணி அபகரிப்பில் ஈடுபட்டுள்ளோர் வெளியேற கால அவகாசம்

## வாழைச்சேனை பொலிஸார் எச்சரிக்கை

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கொழும்பு வீதி நாவலடி தொடக்கம் ஜெயந்தியாலை பிரதேசம் வரையிலான ரயில் தண்டவாளத்துக்கும் கொழும்பு வீதிக்குமிடையிலான 28 ஏக்கர் அரச காணிகளை, சட்ட விரோதமாக அபகரித்து ள்ளவர்களை அங்கிருந்து வெளியேற 02 நாள் அவகாசம் வழங்கியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில், கொழும்பு வீதிக்கும் ரயில் தண்டவாளம் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிக்கும் இடையிலான கொழும்பு வீதியை அண்டிய பகுதியிலுள்ள 28 ஏக்கருக்கு மேற்பட்ட அரச காணிகளை,

சிலர் ஆக்கிரமித்துள்ளனர்.இப்பிரதேசத்துக்குள் சட்டவிரோதமாக உள் நுழைந்து காட்டு மரங்களை வெட்டி கம்பி வேலிகள் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுவந்தனர்.

இக்காணி அபகரிப்பு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சம்பவ இடத்துக்கு சென்று, அபகரிப்பில் ஈடுபடுவதைக் கைவிட்டு,அரசாங்கத்திடமிருந்து சட்ட ரீதியாக காணியை பெறுமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தலைமையிலான பொலிஸார் அப்பகுதிக்குச் சென்று. அரச காணியில்




அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை அகற்றி உடனடியாக வெளியேற வேண்டும் இல்லாவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். எனவே இவைகளை அகற்றிச் செல்வதற்கு 02 நாள் கால அவகாசம் வழங்குவதாக தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

## கடந்த 06 நாட்களில் 30,303 பேர் வருகை



நாட்டுக்கு இம்மாதத்தின் முதல் 06 நாட்களில் சுமார் 30,303 சுற்றுலாப் பயணிகள் வந்தடைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள வாரந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவிலிருந்து 4,608 பேரும் அமெரிக்காவி லிருந்து 4,254 சுற்றுலாப்பயணிகளும் வந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. சீனாவிலிருந்து 2,246 பேரும், பிரான்ஸிலிருந்து 1,842 பேரும் ஜேர்மனியிலிருந்து 1,791 பேரும் நாட்டுக்கு வந்தடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

# அங்கஜன் எம்பிக்கு பாராளுமன்ற சபை அலுவல் குழுவில் அங்கத்துவம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி அங்கஜன் இராமநாதனுக்கு பாராளுமன்ற சபை அலுவல்கள் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளதாக, ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பி.யுமான தயாசிறி ஜயசேகர பாராளுமன்ற தெரிவுக்குழுக்களில் தமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என தெரிவித்த கூற்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் தயாசிறி ஜயசேக்கர எம்.பி. சபையில் தெரிவிக்கையில்: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த புதன்கிழமை சபையில் உரையாற்றுவதற்கு ஏழு நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டது. இறுதியில் இரண்டு மூன்று நிமிடங்களே பேசக் கிடைத்தது.

06

# வறிய குழந்தைகளுக்கு புலமைப் பரிசில்கள்

**(அநுராதபுரம் தினகரன் நிருபர்)**

அநுராதபுர மாவட்டத்திலுள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகள் ஐம்பது பேருக்கு நாட்டில் காணப்படும் முன்னணி செயற்கைப் பசளை தயாரிப்பு நிறுவனமான DAYONE நிறுவனத்தினால் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு அநுராதபுரம் அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்டேர்லிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

உடலில் உள்ள உரோமம் நீக்கப்பட்டால் உயிர் வாழாது கவரிமான் என்பார்கள். அதுபோல் மானம் அழிய நேர்ந்தால் உயர்ந்த மனிதர்கள் உயிரையே விட்டுவிடுவார்கள்.

# போதைப்பொருளில் இருந்து நாட்டை மீட்பது அவசியம்!

இலங்கையில் ஐஸ், புகையிலைப் பாவனை உட்பட போதைப்பொருட்களின் பாவனையும் விற்பனையும் அதிகரித்துள்ளன. அதனை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறானதொரு பரவுதலையும் வளர்ச்சியையும் போதைப்பொருட்களின் பாவனையும் அது தொடர்பான குற்றச் செயல்களும் முன்னொரு போதுமே இந்நாட்டில் பெற்றதில்லை.

இதன் விளைவாக போதைப்பொருள் குற்றங்கள் அற்ற பிரதேசங்களை இன்று விரல் விட்டெண்ணி விடக்கூடியளவுக்கு நிலைமை நிலைமை காணப்படுகிறது. இது ஆரோக்கியமான நிலைமை அல்ல.

இந்நாட்டில் ஐஸ் போதைப்பொருள் அறிமுகமாகி சில வருடங்கள்தான் கடந்துள்ளன. ஆனால் இந்நாட்டில் காணப்படும் ஏனைய போதைப்பொருட்களை விடவும் அதிகளவில் பரவியுள்ள போதைப்பொருள் என்ற இடத்தை இப்போதைப்பொருள் பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்கள் முதல் வளர்ந்தவர்கள் வரை ஆண், பெண் என எல்லா மட்டத்தினர் மத்தியிலும் பாவனையாளர்களைக் கொண்டுள்ள ஐஸ் போதைப்பொருளும் உடல் உள ஆரோக்கியத்திற்கு எவ்விதத்திலும் உகப்பானதல்ல.

மனித ஆரோக்கியத்திற்கும் சமூக, கலாசார விழுமியங்களுக்கும் நாட்டின் நலன்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய போதைப்பொருள் குற்றங்கள், ஆரோக்கிய ரீதியிலான கெடுதல்களுக்கும் சமூக கலாசார ரீதியிலான சீரழிவுகளுக்கும் பெரிதும் பங்களிக்கக் கூடியனவாகும்.

இந்நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் ஐஸ் போதைப்பொருள் பாவனை பரவியுள்ள போதிலும் புகையிலைப் பாவனை தான் அவர்கள் மத்தியில் அதிகரித்து காணப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ள தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் சட்டத்தரணி சக்கிய நாணயக்கார இலங்கையில் 15 இலட்சம் பேர் சிகரெட் அல்லது புகையிலையைப் பாவிக்கக்கூடியவர்களாவும் மேலும் 15 இலட்சம் பேர் புகைக்காமல் புகையிலையைப் பயன்படுத்தக்கூடியவர்களாகவும் உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகையிலைப் பாவனை அதிகரித்துக் காணப்படுவதை இவரது கூற்று எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது. அதேநேரம் புகையிலையை சுண்ணாம்புடன் கலந்து வாயில் வைத்துக் கொள்ளக்கூடிய மாணவர்களும் பாடசாலைகளில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பதையும் அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அதிகாரியொருவரும் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த செயற்பாடும் கூட புகையிலைப் பாவனை அதிகரித்துக் காணப்படுவதையே எடுத்துக்காட்டுகிறது.

ஆனால் புகையிலைப் பாவனையும் உடல், உள ரீதியில் கெடுதல்களை ஏற்படுத்தக்கூடியதே. அதனை மருத்துவ நிபுணர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இந்நாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களைச் சேர்ந்த மக்கள் வாழுகின்ற போதிலும் அவர்கள் மத்தியில் புகையிலை, ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களின் பாவனை அதிகரித்து காணப்படுவது பலரையும் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கியுள்ளன. இது பல மட்டங்களதும் அவதானத்தை ஈர்த்த விடயமாக உள்ளன.

தெற்காசியப் பிராந்தியத்திலேயே சமய, கலாசார ரீதியிலும் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுரிமை அடிப்படையிலும் தனித்துவ பெறுமானங்களைக் கொண்டிருக்கும் இந்நாட்டில் தான் ஆரோக்கிய ரீதியில் கெடுதல்களையும் சமூக கலாசார விழுமியங்களுக்கு பாதிப்புக்களையும் ஏற்படுத்தக்கூடிய இப்போதைப்பொருட் குற்றங்கள் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்நாட்டின் வரலாறே கண்டிராத மோசமான நிலை இது.

இந்த நிலையில் இருந்து நாட்டையும் மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து பிரஜைகளையும் புகையிலை, ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட் பாவனையில் இருந்து விடுவிப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் போதைப்பொருள் குற்றங்கள் குறித்தும் அவற்றின் உடல், உள ரீதியிலான கெடுதல் குறித்தும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கென ஒரு தொகுதி ஆசிரியர்களுக்கு விஷேட பயிற்சி அளிக்கப்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, இக்குற்றங்களுக்கு உள்ளாகியுள்ள இளம் பராயத்தினர் உள்ளிட்ட வளர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள் குற்றங்களில் இருந்து ஒவ்வொரு பிரஜையையும் விடுவிப்பதே இத்திட்டங்களின் எதிர்பார்ப்பும் இலக்குமாகும்.

அதனால் போதைப்பொருள் பாவனையின் விளைவான கெடுதல்கள் மற்றும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இது அவரவர் பொறுப்பாகும். அது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமைவதோடு போதைப்பொருட் குற்றங்கள் அற்ற சமூகத்தை உருவாக்கவும் வழிவகுக்கும். இதன் ஊடாக சமூக, கலாசார பிரச்சினைகள் பல தானாவே நீங்கிவிடும். அதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு நினைவிடத் திறப்புவிழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால நிகழ்வின் முக்கிய அங்கமாக நூற்றாண்டு நினைவிடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான அதிகாரிகள் பலர் கலந்து சிறப்பித்தனர். பிரதம விருந்தினராக ஆசிரியர் கல்விக்கான பிரதம ஆணையாளர் டொக்டர் புண்ணியதாஸவும், சிறப்பு விருந்தினராக ஆசிரியர் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீமா தசநாயக்காவும், கௌரவ விருந்தினராக யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி சு. பரமானந்தமும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ், கலாசாலையின்

முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணைலிங்கம் மற்றும் வடமாகாணத்தில் உள்ள அனைத்து ஆசிரிய மத்திய நிலையங்களின் முகாமையாளர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

யாழ் பல்கலைக்கழக முதுமாணிக் கற்கை நெறி உள்ளக பயிற்சியினை மேற்கொள்ளும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

முதல் நிகழ்வாக கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து விருந்தினர்கள் பண்பாட்டு ஆற்றுகைகளுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.அவற்றில் குதிரை ஆட்டம், காவடி ஆட்டம், ஒயிலாட்டம் போன்றவை ஆசிரிய மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. பிரதம ஆணையாளர் நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ரதி லட்சுமி மண்டபத்தில் நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி நடைபெற்றன. திருக்குறள் வழிபாட்டினை தொடர்ந்து வரவேற்புரையினை பிரதி அதிபர் க. செந்தில்குமரனும் தலைமை உரையினை அதிபர் ச. லலீசனும் ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து அதிதிகள் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். அதிதிகள் உரைகளும் இடம்பெற்றன.







நூற்றாண்டு தொடர்பாக கலாசாலையில் ஆசிரிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட கலாசாலை தொடர்பான மற்றும் ஆசிரியர் கல்வி தொடர்பான பொதுஅறிவுப் போட்டியில் முதல் 20 இடங்களையும் பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வுகளை திருமதி தர்மினி ரஜீவன் தொகுத்து வழங்கினார். நினைவிடத்திற்கான அனுசரணையை நவமங்கை நிவாச நிறுவுநரும் முன்னாள் ஆசிரிய கல்விப் பணிப்பாளருமாகிய சுவர்ணா நவரட்ணம் வழங்கியிருந்தார்.

கலை நிகழ்வுகளாக இந்து,பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களின் வழிபாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து தமிழ், சிங்கள இஸ்லாமிய பண்பாடுகளை வெளிப்படுத்தும் பல்கலாசார நடன நிகழ்வும் இடம்பெற்றது.

# இலங்கை ஆசிய மன்றத்தினால் மருதமுனை அல்-மனாருக்கு ஒன்றரை மில்லியன் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்பு

இலங்கை ஆசிய மன்றத்தின் பூரண அனுசரணையில் சுமார் ஒன்றரை மில்லியன் ரூபா பெறுமதியான நூல்கள் மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டன.

ஆசிய மன்றத்தின் முன்னாள் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகரும், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனம் மற்றும் சி.ஜி.ஐ. நிறுவனம் ஆகியவற்றின் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம்.வலீத் இலங்கை ஆசிய மன்றத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, கல்முனை தமிழ், சம்மாந்துறை கோட்டங்களைச் சேர்ந்த 16 பாடசாலைகளுக்கு இந்நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எம்.ஐ.எம்.வலீத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிய மன்றத்தின் புத்தகங்கள் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் அன்டன் டீ நல்லதம்பியின் பிரசன்னத்துடன் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், ஏனைய அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளரும்,கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி.





பாத்திமா நஸ்மியா சனூஸ், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம்.சரிபுதீன், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே.டேவிட்,கல்முனை தமிழ்ப்பிரிவு கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சரவணமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் ஆசியமன்ற திட்ட இணைப்பாளர் எம்.ஐ.ஜாவாஹிர், பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளின் அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், ஆசிய மன்ற அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வினை கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் உறுப்பினர் நூறுல் குதா உமர் தொகுத்து வழங்கினார். இந்த நிகழ்வில் ஆசிய மன்றத்தின் புத்தகங்கள் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் அன்டன் டீ நல்லதம்பி, கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், ஆசிய மன்றத்தின் முன்னாள் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகரும், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனம் மற்றும் சி.ஜி.ஐ. நிறுவனம் ஆகியவற்றின் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம்.வலீத் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# வத்தளையில் விபத்துக்குள்ளான சிங்கள தம்பதியருக்கு பரோபகாரி தியாகேந்திரன் ரூபா ஒரு இலட்சம் உதவி

கொழும்பு, வத்தளை பிரதேசத்தில் பஸ் சாரதியால் ஏற்படுத்தப்பட்ட விபத்தினால் ஆதரவற்றுப் போயுள்ள சிங்கள குடும்பம் ஒன்றுக்கு தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் அவர்களுக்கு உடனடி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 10 ஆம் திகதி வத்தளை பிரதேசத்தில் பஸ் சாரதியொருவரின் கவனயீனம் காரணமாக ஸ்ரீயானியும் அவரது கணவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் ஸ்ரீயானியின் கால்கள் பலத்த சேதமடைந்ததுடன், முதுகுத்தண்டு மற்றும் இடுப்புப் பகுதியும் சேதமடைந்தது. ஆனால், நிறை மாதக்கர்ப்பிணியான ஸ்ரீயானியின் வயிற்றிலிருந்த குழந்தைக்கு எந்த ஆபத்துமில்லை என்பதைக் கண்டறிந்த வைத்தியர்கள், அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைப் பிரசவிக்க முடிவு செய்தனர்.

ஸ்ரீயானி 2 மாதங்களுக்கும் மேலாக மருத்துவமனையிலிருந்ததால், அவரது கணவர் குழந்தையைக் கவனித்து வந்துள்ளார். விபத்தில் பலத்த காயமடைந்த 27 வயதான ஸ்ரீயானிக்கு தற்போது கணவரின் உதவியுடன் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. விபத்தை ஏற்படுத்திய சாரதி பற்றிய எந்தத் தகவலும் இதுவரை தெரியாத நிலையில், சட்டத்தின் மூலம் தங்களுக்குரிய இழப்பீடு கிடைக்கவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வந்த இந்திக, தனது மனைவி மற்றும் குழந்தையைக் கவனிக்க ஆளில்லாததால் வேலையை இழந்துள்ளார். இவர்களுக்கான நேசக்கரத்தை



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் நீட்டியுள்ளார். ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் மூலம் அக்குடும்பத்தின் உண்மை நிலைலவரத்தை அறிந்து கொண்ட அவர், அக்குடும்பத்தை உடனடியாகப் பார்வையிட்டு அவர்களுக்கான முதற்கட்ட உதவியாக ஒரு இலட்சம் ரூபா நிதியினை வழங்குமாறு பாரிஸுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். இதற்கமைவாக இவ்வுதவித்தொகை நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. இவ்வுதவித்தொகை நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் சேகர மற்றும் ஊடகவியலாளர் எம்.ரீ.எம். பாரிஸ் ஆகியோரினால் இவ்வித்துக்குள்ளானவரின் கணவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன, மத, மொழி வேறுபாடுகளற்று மனிதாபிமான உதவிகளை மேற்கொண்டு வரும் வாமதேவன் தியாகேந்திரன் அவர்களது பணிகளை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# அக்கரைப்பற்றில் ரமழான் மாத குர்ஆன் விளக்க பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்

அக்கரைப்பற்று பிரதேச செயலக முஸ்லிம் கலாசார அலுவல்கள் பிரிவினால் வருடாந்தம் ரமழான் மாதத்தில் நடத்தப்பட்டு வரும் புனித ரமழான் மாத குர்ஆன் விளக்க கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் வழிகாட்டலில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் உதவி பிரதேச செயலாளர் ராசித் யஹ்யா தலைமையில் முஸ்லிம் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.எம். முக்தார் ஹுசையின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுடன் இணைந்து நடைபெற்ற இக்கற்கைநெறியில் 49 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், உதவி வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம். நிஹ்மதுள்ளாஹ், அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ், செயலாளர் அப்துல் ஹமீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் தாஹிர், கலாசார உத்தியோகத்தர்களான தௌபீக், றிஸ்வான், நவப்பிரியா மற்றும் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஜெய்னுதீன், முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் இப்றாலெப்பை, மத்தியஸ்த சபை உத்தியோகத்தர் அமீற், பலநோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கீதன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இஸ்மத், அந்நூர் நிறுவன செயற்பாட்டாளர் ஜனூஸ் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.





மேற்படி நிகழ்வை நடாத்துவதற்கு அனுசரணை வழங்கிய அக்கரைப்பற்று பறகத் பவுன்டேஷன் நிறுவனர்களான பைசால், நைசல், வர்த்தக சங்க தலைவர் அப்துஸ்ஸலாம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் முஸாதிக், பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜலால்தீன், வர்த்தகர் அனஸ் உள்ளிட்ட வளவாளர்கள், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

**எம்.எப். நவாஸ்...**
*(திராய்க்கேணி தினகரன் நிருபர்)*

# இஸ்லாம் கூறும் சக வாழ்வு

இஸ்லாம் மானிடர்க்கு அன்பையும், நேசத்தையும், சகோதரத்துவ வாஞ்சையையும் போதிக்கின்றது. ஒவ்வொரு முஸ்லிமும் அடுத்த மனிதனுக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் அருளாகத் திகழ வேண்டும் என்றும் அது எதிர்பார்க்கின்றது. இன, மொழி, நிற, கலாசார வேறுபாடுகளைத் தாண்டி எவருக்கும் ஆபத்தோ நெருக்கடியோ இன்னலோ ஏற்படக் கூடாதென்பதும், ஒவ்வொருவருக்கும் அடுத்தவர் மூலம் பாதுகாப்பும், அமைதியும், நிம்மதியும் கிட்ட வேண்டும் என்பதும் இஸ்லாத்தின் கட்டளையாகும். அந்த வகையில் பல்லின சமூகங்களுக்கு இடையில் சக வாழ்வை கட்டி எழுப்புவதற்கான அடிப்படையாகக் கருதப்படுகின்ற அம்சம் பன்மைத்துவம் பற்றிய தெளிவு எம்மிடையே இருக்க வேண்டும்.

குறித்த ஒரு பிரதேசத்திலோ, நாட்டிலோ உள்ள சமூகமானது இனத்தாலோ, மதத்தாலோ, மொழியாலோ வேறுபட்ட மக்களைக் கொண்டிருப்பின் அதனை பன்மைத்துவ சமூகம் எனக் குறிப்பிடலாம். பன்மைத்துவம் இயற்கையானது, யதார்த்தமானது. அதனை அல் குர்ஆன் பின்வருமாறு விபரிக்கின்றது, **'உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும், ஏற்படுத்தியுள்ளோம். அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம். ஆனால் அவன் உங்களுக்குக் கொடுப்பதைக் கொண்டு உங்களைச் சோதிப்பதற்காகவே இவ்வாறு செய்திருக்கிறான். எனவே நன்மையானவற்றின்பால் முந்திக் கொள்ளுங்கள்'**

**(சூறா அல் மாஇதா – 48)**

மேற்குறிப்பிடப்பட்ட வசனத்திலிருந்து பன்மைத்துவ சமூகம் என்பது அல்லாஹ்வின் திட்டமிடலாகும். அவன் நாடியிருப்பின் உலக மாந்தர்கள் அனைவரையும் ஒரே இனத்தையும், மதத்தையும் சேர்ந்தவர்களாக ஆக்கியிருக்கலாம். என்றாலும் இவ்வுலகின் சீரான இயக்கத்திற்கும், சமநிலையான போக்கிற்காகவுமே பல்லின சமூக அமைப்பை அவன் தோற்றுவித்துள்ளான் என்பது தெளிவாகின்றது.

இதன் மூலம் பன்மைத்துவம் என்பது தவிர்க்க முடியாத நம் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள சமூக அமைப்பியலாகும். பல்லின மக்கள் வாழும் சமூக அமைப்பொன்றில் குறிப்பிட்ட ஒரு சமூகம் பெரும்பான்மையாக இருப்பதோடு ஏனைய சமூகங்கள் சிறுபான்மையாக இருப்பதே நியதியாகும். பன்மைத்துவம் என்பது தனி மனித வாழ்க்கையிலும் கூட்டு வாழ்க்கையிலும் பரஸ்பரக் கலந்துரையாடலை ஏற்படுத்திக் கொள்வதாகும். மனிதர்களின் கூட்டுப்பண்பே சமூக நல்லிணக்கத்தின் அடிப்படை எண்ணக்கருவாக அமைகிறது. அந்த வகையில் பன்மைத்துவ சமூகத்துடனான உறவு குறித்து அல் குர்ஆன் மற்றும் சுன்னா பலமான அடித்தளங்களை இட்டுள்ளன.

ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான கலாசார அம்சங்களும், பழக்கவழக்கங்களும் உள்ளன. அத்தனித்துவங்களே அவ்வினத்தை அடையாளப்படுத்துகின்றன. ஒவ்வொரு இனமும் தத்தமது இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும், தம்மை அடையாளப்படுத்தும் தனித்துவங்களை காத்துக்கொள்ளவும் முயற்சிக்கின்றன. அவற்றுக்கெதிரான சவால்கள் தோன்றுகையில் அதற்கெதிராகக் குரல் கொடுப்பதோடு அது போராகவும் உருப்பெறுகின்றது. இவ்வாறான சமூக அமைப்பொன்றில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது தொடர்பாக அல்குர்ஆனிலும் நபி (ஸல்) அவர்களது போதனைகளிலும் முழு மனித சமூகத்திற்கும் வழிகாட்டுதல்கள உள்ளன.

அல்லாஹ் ஒரே மூலக்கூறிலிருந்து மனித இனத்தை படைத்து பரவச் செய்தாலும், அவர்களுக்கு மத்தியில் நிற, மொழி, இன வேறுபாடுகளை அவனது அத்தாட்சியாக ஏற்படுத்தியதாக குறிப்பிடுகின்றான். மேலும் இவ்வேறுபாடுகளின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் பரஸ்பர அறிமுகத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவே அவர்களை கோத்திரங்களாகவும், கிளைகளாகவும் படைத்துள்ளதாக அல்குர்ஆன் பறைசாற்றுகின்றது.

அல்லாஹ்வால் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்புக்களும் பன்மைத்துவம் என்ற ஓர் அழகிய அடையாளத்தால் அலங்கரிக்கப்பட்டு காணப்படுகிறது. பல்வேறு வர்ணங்கள், தோற்றங்கள், தன்மைகள், பண்புகள், இயல்புகள், மொழி, பால், இனத்துவ வேறுபாடுகள், கலாசார, நாகரிக பண்பாட்டு பழக்கவழக்கங்கள், சிந்தனாசக்தி, ஆற்றல், ஆளுமை, காலநிலை, புவியியல் பிரிகை என எங்கும், எதிலும் பல்வகைமை எனும் கலைத்துவம் வியாபித்துக் காணப்படுகிறது. இதற்கு மனித இனமும் விதிவிலக்கன்று. இவை படைப்பினங்களுக்கு அருளாகவும் இப்பிரபஞ்சத்தின் முறையான இயங்குநிலைக்கான அடிப்படையாகவும் கணிக்கப்படுகின்றது.

இந்த உண்மையை உள்வாங்கி தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தும் போது அங்கே மனிதம் மிளிர்வதனையும் சக வாழ்வும் சௌஜன்யமும் மலர்வதையும் காணலாம்.

மனிதர்கள் இனங்களாக, குழுமங்களாக, கோத்திரங்களாக வாழ்வது தவிர்க்கமுடியாத இயல்பாகும். எனினும் அது மனிதனாகக் கூடி வாழ்வதற்கு ஒரு போதும் தடையானதன்று. அது மனித ஐக்கியத்திற்கு ஏற்புடைய பலமான காரணியாகும். அதாவது, ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைக்கப்பட்ட மனிதர்கள், தங்களிடையே காணப்படுகின்ற இரத்த உறவைப் பேணி இணைந்து வாழ்வதில் தமக்கிடையே காணப்படுகின்ற குல மரபுப் பேதங்கள் துணை செய்கின்றன.

பிற சமூகங்களின் உறவு என்பது அல் குர்ஆனின் பேசுபொருள்களில் ஒன்றாகும். நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான அடிப்படைகளை அது உலகின் யதார்த்தம் என்ற வகையில் தெளிவாக முன்வைக்கின்றது. இஸ்லாத்தின் பிரதான மூலாதாரமான அல்குர்ஆனை ஆழ்ந்து கற்கும் போது அது சமாதானத்தினதும், சக வாழ்வினதும் மார்க்கம் என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். யுத்தத்தைக் குறிக்கும் 'ஹர்ப்' எனும் சொல் அல்குர்ஆனில் ஆறு இடங்களிலும், சமாதானத்தைக் குறிக்கும் 'சில்ம்' எனும் பதமும் அதிலிருந்து பிரிந்த சொற்களும் சுமார் 100 இடங்களிலும் இடம் பெறுகின்றன. இஸ்லாம் அடிப்படையிலேயே சமாதானத்தின் மார்க்கம் என்பதையே அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது. நபியவர்களின் வாழ்வியலும் இக்கருத்தையே பிரதிபலிக்கிறது. மதம், இனம், மொழி, கலாசாரம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து அனைவரும் மனிதர்களாக வாழ்வதற்கு இஸ்லாம் தூண்டுதல் அளிக்கின்றது.

முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் வாழும் போது மோதல்களைத் தவிர்த்து இணக்கமாக சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் பணிக்கின்றது. அதற்கப்பால் நன்மையான விடயங்களில் பரஸ்பரத்துடன் ஒத்துழைக்குமாறு அல்குர்ஆன் மனிதகுலத்தை அழைக்கின்றது, அத்துடன் உதவுதல், ஒத்துழைத்தல், விட்டுக்கொடுத்தல் என்பன நல்லிணக்கத்திற்கு இஸ்லாம் அளித்துள்ள விழுமியங்களாகும்.

இவ்வடிப்படைகள் தவிர மனித சமத்துவம், தங்கி வாழுதல், சார்ந்திருத்தல், கலந்து வாழுதல், சமூக நீதி, கருத்துச் சுதந்திரம் என இன்னும் பல உயர்ந்த விழுமியங்களையும் நல்லிணக்கத்தின் வேர்களாகக் குர்ஆன் முன்வைக்கின்றது.

பல்லின மக்கள் வாழ்கின்ற இந்நாட்டில் மத உரிமை, மொழி உரிமை, அரசியல் உரிமை, அபிவிருத்தி உரிமை என்ற நான்கு தூண்களில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும். சிறுபான்மை மக்களது தனித்துவங்கள் மதிக்கப்பட்டு அவர்களின் உணர்வுகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும், அரசியல் கட்சிகளுக்கிடையிலும் சகவாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை மிக அவசரமாகவும் அவசியமாகவும் எழுந்துள்ளது.

எனவே இனங்களுக்கிடையில், சக வாழ்வை நிலைநாட்ட உழைக்கும் நல்ல மனிதர்களாக எம்மை அல்லாஹ் ஆக்கியருளட்டும்.

கலாநிதி அல் ஹாபிழ்
எம்.ஐ.எம்.சித்தீக்...
(அல்–ஈன்ஆமி) B.A.Hons, (Al Azhar university, Egypt)
M.A.& PhD (International Islamic university, Malaysia)

எஜமானர்கள் அடிமைகளிடம் கனிவாகவும், அன்பாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்வதும் இறை நம்பிக்கையே. இந்த இறைநம்பிக்கை உடல் சார்ந்ததாக இருப்பதினால் எஜமானர்களின் உடல் ரீதியான எந்தத் தொந்தரவுகளும், மனித உரிமை மீறல்களும் அடிமைகளைப் பாதிப்புக்குள்ளாகி விடக்கூடாது.

அடிமைகளிடம் மோசமாக நடந்து கொள்வது இறைநம்பிக்கைக்கு எதிரானது. இறைநம்பிக்கைக்கு எதிரான எந்தவொரு செயலும் இறை நம்பிக்கையாளரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது குறித்த எச்சரிக்கையை நபி (ஸல்) அவர்கள் கடின வார்த்தைகளால் எடுத்தியம்பியுள்ளார்கள். 'கஞ்சனும், மகா மோசடிக்காரனும், தன் அடிமைகளை மோசமாக நடத்துகின்ற உரிமையாளனும் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: அஹ்மது).

மனிதரை (எனது அடிமையை) ஏசிவிட்டு, அவரின் தாயையும் குறை கூறிவிட்டேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'அபூதர், அவரையும், தாயையும் சேர்த்து குறை கூறி விட்டீரே. நீர் அறியாமைக் காலத்துப் பழக்கம் குடி கொண்டிருக்கும் மனிதராகவே இருக்கிறீர். உங்களது அடிமைகள் உங்களின் சகோதரர்கள் ஆவர். இறைவன் தான் அவர்களை உங்களின் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கிறான். எனவே ஒருவரின் சகோதரர் அவரின் அதிகாரத்தின் கீழ் இருந்தால், அவர் தாம் உண்பதிலிருந்தே அவருக்கும் புசிக்கக் கொடுக்கட்டும். தாம் உடுத்துவதிலிருந்தே அவருக்கும் உடுத்தக் கொடுக்கட்டும். அவர்களின் சக்திக்கு மீறிய பணிகளைக் கொடுத்து அவர்களைச் சிரமப்படுத்த வேண்டாம். அவ்வாறு அவர்களை நீங்கள் சிரமமான பணியில் ஈடுபடுத்தினால், நீங்கள் அவர்களுக்கு உதவியாயிருங்கள்' என கூறினார்கள். 'இதனால்தான் நான் அணிவது போல் என் அடிமைக்கும் உடை அளித்தேன்' என அபூதர் (ரழி) கூறினார். (ஆதாரம்: புஹாரி)

# சுவர்க்கத்தை இழக்கச் செய்யும் தவறான பண்புகள்

அடிமைகளை மோசமாக நடத்துகின்ற உரிமையாளர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்' என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது, ஒருவர் 'இறைவனின் தூதரே, இச்சமுதாயம் அடிமைகளும், அநாதைகளும் நிறைந்த சமுதாயம் என்று எங்களிடம் கூறினீர்களே?' என்று கேட்டார். 'ஆம், அவர்களை உங்களின் பிள்ளைகளைப் போன்று கண்ணியப்படுத்துங்கள். நீங்கள் உண்பதிலிருந்து அவர்களுக்கும் உண்ணக்கொடுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: அஹ்மது)

'நான் அபூதர் (ரலி) அவர்களை (மதீனாவிற்கு அருகிலுள்ள) 'ரபதா' என்ற இடத்தில் சந்தித்தேன். அப்போது அவரின் மீது ஒரு ஜோடி ஆடையும், அவ்வாறே அவரின் அடிமை மீது ஒரு ஜோடி ஆடையும் இருப்பதைப் பார்த்தேன். நான் ஆச்சரியப்பட்டு அதைப்பற்றி அவரிடம் கேட்டதற்கு, நான் ஒரு தடவை ஒரு

எஜமானரின் கனிவான நடத்தையையும், அடிமைகளின் உரிமைகளையும் இந்த நபிமொழி அழகாக போதிக்கிறது. அடிமையை என்ன வேண்டுமானாலும் செய்யலாம், கேட்பதற்கு ஆள் கிடையாது என நினைத்து எஜமான் வரம்பு மீறி நடக்கலாகாது. நாளை மறுமையில் இதை தட்டி கேட்பதற்கு இறைவன் இருக்கிறான். அடிமைகளின் உரிமை விஷயத்தில் இறைவனை அஞ்சி நடக்க வேண்டும். அத்தோடு அடிமைகளும் எஜமானர்களிடம் நன்மதிப்புடன் நடந்து கொள்ளவும் தவறலாகாது. அப்போது ஈடு இணையில்லாத நற்கூலியை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்ளலாம்.

அபூமதீஹா...

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

(கடந்த வாரத் தொடர்)

இருந்த போதிலும் உலக மாயையும் ஆசாபாசங்களும் இந்த உண்மைகளை அறிந்து தெரிந்து வாழ்வை அமைத்துக்கொள்ள மனிதனுக்கு இடமளிப்பதாக இல்லை. மனிதன் தன் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து செயற்பட அவை பெரும் இடையூறாக இருந்து கொண்டிருக்கின்றது. அதனைப் பெரும்பாலானவர்கள் அறிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் அச்சவாலை எதிர்கொண்டு வாழ்வின் அர்த்தத்தை புரிந்து கொள்ளும் போது வாழ்வு பெறுமதியானதாகவும் அர்த்தபூர்வமானதாகவும் அமையும். அதற்கேற்ப வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்ளவும் முடியும்.

அந்த வகையில் 2023.06.18 ஆம் திகதி டைடான் என்ற நீர்மூழ்கியில் டைட்டானிக் கப்பலின் சிதைவுகளைப் பார்க்கவென சுற்றுலா சென்ற ஐந்து கோடீஸ்வரர்களும் உயிரிழந்தமை உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. அது பெரும் பேசுபொருளாகவும் அமைந்திருந்தது.

டைட்டானிக் என்ற அதிசொகுசு வசதிகளுடனான கப்பல் பிரித்தானியாவிலிருந்து அமெரிக்காவுக்கு 2400 பேருடன் பயணித்து கொண்டிருந்த போது 1912 ஏப்ரல் 14 இல் வட அத்திலாந்திக் கடலில் பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது. அதன் விளைவாக அக்கப்பலில் பயணித்த 1600 பேர் உயிரிழந்தனர். 600 பேர் மீட்கப்பட்டனர். என்றாலும் இக்கப்பலின் சிதைவுகளைத் தேடி மேற்கொள்ளப்பட்டு வந்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் கனடாவுக்கு அண்மையில் வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் 12,500 அடிகள் ஆழத்தில் இக்கப்பலின் சிதைவுகள் காணப்படுவது கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இக்கப்பலைப் பார்வையிடுவதற்காக உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்லும் நோக்கில் விசேட நீர்மூழ்கி உருவாக்கப்பட்டது. அதற்கேற்ப ஒருவருக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் படி (3 கோடி ரூபா) செலுத்தி கடந்த இரு வருடங்களில் 46 பேர் டைட்டானிக் கப்பலின் சிதைவுகளைப் பார்வையிட்டுள்ளனர். அத்தோடு டைட்டானிக் கப்பல் தொடர்பான திரைப்படத்தின் தயாரிப்பாளர் 30 தடவைக்கும் மேல் அக்கப்பலின் சிதைவுகளைப் பார்வையிட்டு வந்துள்ளார்.

அந்தடிப்படையில் டைடான் நீர்மூழ்கியும் டைட்டானிக் கப்பலின் சிதைவுகளை பார்வையிடவென பல தடவைகள் சென்று வந்துள்ளன. இவ்வாறான பின்புலத்தில் 2023.06.18 அன்று 5 கோடீஸ்வரர்களுடன் 96 மணித்தியாலயங்களுக்கு போதுமான ஒட்சிசனுடன் டைட்டானிக்கை பார்க்கப் புறப்பட்ட டைடான் நீர்மூழ்கி ஒரு மணித்தியாலமும் 45 நிமிடங்களும் கடந்த நிலையில் தாய்க் கப்பலுடனான தொடர்பை இழந்தது. இதைத் தொடர்ந்து தீவிர தேடுதல் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அந் நீர்மூழ்கியில் பயணித்தவர்களில் எவரையும் மீட்கக் கிடைக்கவில்லை. ஆழ்கடலின் அழுத்தம் காரணமாக டைட்டான் நீர்மூழ்கி வெடித்து சிதறி ஐவரும் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர்கள் பயணித்த நீர்



# மரணம் நிர்ணயிக்கப்பட்டுள்ள மனித வாழ்வு

மூழ்கியின் பாகங்கள் டைட்டானிக் கப்பலின் சிதைவுகள் காணப்படும் இடத்திலிருந்து 1600 அடிகள் தூரத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க கடலோரக் காவல் படையினர் அறிவித்தனர். இது முழு உலகிலும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தின.

ஆனால் இந்நீர்மூழ்கியில் பயணித்த இவர்களுக்கு மரணம் சம்பவிக்கும் இடமாக ஆழ்கடலில் பல்லாயிரம் அடிகள் ஆழத்தில் நீருக்குள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் தான் அவர்கள் அந்த இடத்திற்கு தாமாகவே விரும்பி சென்றிருக்கின்றார்கள். அதுவும் பணம் செலுத்தி சென்றுள்ளார்கள். இவர்களும் எல்லோரையும் போன்று தமக்கு இவ்வாறு இந்த இடத்தில் தான் மரணம் நிகழும் என்பதை முன்கூட்டியே அறிந்திராதவர்களாவர். இவர்களுக்கு ஏற்பட்ட மரணமும் ஆல இம்ரானின் 154 வசனத்தையே நினைவுக்கு கொண்டு வருகிறது.

அதேநேரம் மற்றொரு வசனத்தில் **'நம்பிக்கையாளர்களே.... நிராகரிப்பாளர்களைப் போன்று நீங்களும் ஆகிவிட வேண்டாம். அவர்கள் வெளியூருக்கோ அல்லது போருக்கோ சென்று (இறந்து) விட்ட தங்கள் சகோதரர்களைப் பற்றி 'அவர்கள் நம்மிடமே இருந்திருந்தால் அவர்கள் இறந்திருக்கவும் மாட்டார்கள். கொல்லப்பட்டும் இருக்க மாட்டார்கள்' என்று கூறுகின்றனர். அவர்களுடைய உள்ளங்களில் (என்றென்றுமே) இதை ஒரு கடும் துயரமாக்குவதற்காகவே இவ்வாறு (அவர்கள் நினைக்கும் படி) அல்லாஹ் செய்கிறான். அல்லாஹ்வே உயிருடன் வாழச்செய்பவன். மரணிக்கச் செய்பவன். நீங்கள் செய்பவற்றை எல்லாம் உற்று நோக்கியவனாகவே இருக்கிறான்' (03:156)** என்று குறிப்பிட்டிருக்கிறான்.

இந்த இரண்டு வசனங்களும் உஹது போரில் ஏற்பட்ட நிலைமையின் பின்னணியில் அருளப்பட்டிருந்தாலும் அது உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் அறிவுரை வழங்கும் உயிரோட்டம் மிக்க வசனங்கள். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆகவே வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு அமையவும் வாழ வேண்டும். அதுவே பூமிக்கான அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற பொறுப்பை நிறைவேற்றியதாக அமையும். அதற்கு மாற்றமாக வாழ்வை அமைத்துக் கொள்வது நஷ்டத்தையும் கைசேதத்தையுமே தேடித்தரும். அதனால் இம்மையிலும் மறுமையிலும் சுபீட்சத்தை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

முற்றும்.

மர்லின் மரிக்கார்...

# முக்கியத்துவம் உணரப்படாத நேர முகாமைத்துவம்

உலகில் எல்லோருமே ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஓட்டம் பிறக்கும் போதே ஆரம்பித்து விடுகிறது. அது மரணம் எனும் இலக்கு நோக்கிய ஓட்டமாகும். அது மரணத்தில் தான் முடிவுறும். கடந்து போன பாதை கடந்ததாகவே இருக்கும். அப்பாதையில் திரும்பவும் பயணிக்க முடியாது.

இளமை நிரந்தரமாக இருக்கவேண்டும் அல்லது அது திரும்பக் கிடைக்க வேண்டும் என்று விரும்பாதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஆனால் எல்லாரும் எல்லாப் பொழுதும் மரணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவனுக்கு பதினாறு வயதாகும் போது பதினைந்த வயதானவன் மரணிக்கிறான். குழந்தை வளரும் போது மழலை பிரிந்து போகிறது. விடலைப் பருவம் பூக்கும் போது சிறார் பருவம் உதிருகிறது. இளமைப் பருவம் பிறக்கும் போது விடலைப் பருவம் இறந்து போகிறது. முதுமை வரும்போது சிறார் இளமை விடை பெற்றுச்செல்கிறது. இதுவெல்லாம் கூட மரணம்தான். ஆயுள் ஒவ்வொரு நிமிடம் அதிகமாகும் போது அதே அளவுக்கு மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.



இது குறித்து மிகச் சிலர் தான் சித்திக்கின்றனர். அவர்கள் நேரத்தின் வலிமையையும் ஆயுளின் மதிப்பையும் உணர்கின்றனர். ஏனெனில் கடந்து போன நேரத்தை மீண்டும் பெறமுடியாது. உலக வாழ்க்கை மிக அற்பமானது. அதனை நபி (ஸல்) அவர்கள், 'நகர்ந்து போகின்ற நிழலையும் வழிப்போகன் கொஞ்ச நேரம் தங்கி ஓய்வெடுப்பதையும் இந்த உலக வாழ்வுக்கு உவமையாகக் கூறினார்கள்.

(அல் ஹதீஸ்)

ஒரு மனிதன் அறுபது ஆண்டுகள் வாழ்கிறான் எனில் அதில் பாதியை இரவு தன் வசம் எடுத்துக் கொள்கிறது. கால்பகுதி எதற்கும் உதவாத செயல்களில் வீணாகிப் போகிறது. மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு பொருள் சேர்க்கவும் குடும்பத்திற்காகவும் செலவாகிறது. எஞ்சிய காலம் முதுமைக்கும் நோய்க்கும் ஆட்பட்டு இந்த உலகத்துக்கு விடைகொடுக்கும் கவலையுடன் கழிக்கப்படுகிறது.

'அல்லாஹ் அவர்களை ஒன்று திரட்டும் நாளில் (இவ்வுலக வாழ்க்கை எவ்வாறு தோன்றுமெனில்) தமக்கிடையே ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்வதற்காகப் பகலின் சொற்ப நேரமே தவிர (உலகில்) தாங்கள் தங்கியிருக்கவில்லை என்பது போல் தோன்றும்! (அல் குர்ஆன் 10:45)

நேரம் அல்லாஹ்வுக்குரியதாகும். அல்லாஹ் நமக்கு அருளிய மாபெரும் அருட்கொடை அது. அதனால் தான் நாம் அதனை எவ்வாறு பயன்படுத்தினோம் என்பது குறித்து ஒவ்வொருவரிடமும் கேள்வி கேட்கப்படும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், (மறுமை நாளில்) மனிதனிடம் ஐந்து விஷயங்கள் குறித்து விசாரணை நடத்தப்படாத வரையில் அவன் அந்த இடத்தை விட்டுக் கொஞ்சமும் நகர முடியாது. தனது ஆயுளை எந்தச் செயல்களில் அவன் கழித்தான்? தனது இளமை ஆற்றல்களை எவ்வாறு பயன்படுத்தினான்? செல்வத்தை எவ்வாறு சம்பாதித்தான்? அதனை எவ்வாறு செலவழித்தான்? கல்வியை எவ்வாறு பயன்படுத்தினான்?' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

பிறரின் பொருளை அபகரிப்பது, நஷ்டத்தை ஏற்படுத்துவது ஆகியவற்றைக் காட்டிலும் அவர்களின் நேரத்தை அபகரிப்பதும் வீணாக்குவதும் பெரும் குற்றமாகும். எவ்வளவு முயன்றாலும் திரும்பப்பெற முடியாத விலைமதிப்பற்ற ஒன்றையே தன்னுடைய நேர முகாமைத்துவம் இன்மையால் மற்றவர்களிடமிருந்து அபகரிக்கின்றோம் என்பதை பெரும்பாலானோர் உணர்வதில்லை. இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகள் நேர முகாமையை முறையாகப் பின்பற்றுவதற்கான பயிற்சியாகவே அமைந்திருக்கின்றன.

'ஐவேளைத் தொழுகை குறிப்பிட்ட நேரங்களில் கடைபிடிக்கப்படுகின்றன. ஜூம்ஆவும் அதே போன்றுதான். நோன்பு குறிப்பிட்ட மாதத்தில் நோற்கப்படுகிறது. நோன்பு காலத்தில் உண்ணுவதும் பருகுவதும் குறிப்பிட்ட நேரம் முதல் தடை செய்யப்பட்டுள்ளது. நோன்பு துறப்பதும் மிகச் சரியான நேரத்திலாகும். ஸகாத் கொடுப்பது வருடத்திற்கு ஒருமுறை. ஹஜ்ஜூக்கு குறிப்பிட்ட மாதமும் நாளும் நேரமும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி எல்லா வணக்க வழிபாடுகளையும் நேரம் தவறாமல் கடைபிடிக்கவும் நேரத்தை வீண்விரயம் செய்யாமலும் நேர முகாமையைப் பேணவும் கட்டளையிடுகிறது இஸ்லாம்.

நேரத்தின் மதிப்பை உணர்ந்து அதை முறையாகப் பயன்படுத்த நம்பிக்கையாளர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று மற்றவர்களின் நேரத்தை வீணாக்குவதும், அதன் மூலம் அவர்களை துன்பத்தில் ஆழ்த்துவதும் கொடூரமான குற்றம் என்பதை மறக்கலாகாது. நேரம் தவறாமையும் நேரக் கட்டுப்பாடும் நம்பிக்கையின் முதன்மைக் கூறுகள் என்பது அடிப்படையாகும்.

தொகுப்பு:
முஆத் அப்துல் காதிர்...

## ஆசியான் அங்கத்துவத்துடன்... 03ஆம் பக்கத் தொடர்

பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய 10 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்பு இது. ஆசியான் உறுப்பு நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 08 ஆம் திகதி "ஆசியான் தினத்தை" கொண்டாடுகின்றன.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, 'ஆசியான்' அமைப்பில் நுழைவதற்கான முன்மொழிவு நிராகரிக்கப்பட்டதாகவும், அதன் அங்கத்துவம் கிடைக்காததால், அதற்கு மாற்றீடாக, பிராந்திய பரந்த பொருளாதாரக் கூட்டிணைவில் இணைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல்ல, விதுர விக்கிரமநாயக்க, நசீர் அஹமட், ஜீவன் தொண்டமான், நளின் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உட்பட, இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் டீவி குஸ்டினா டோபிங், மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் எடம், தாய்லாந்து தூதுவர் போஜ் ஹர்ன்பொல், வியட்நாம் தூதுவர் ஹோ தி தன் ட்ரக், மியான்மார் தூதுவர் யூ ஹன் து உள்ளிட்ட தூதுவர்கள் இதில் பங்கேற்றனர்.தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் முப்படைகளின் தளபதிகள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இலங்கை சாரணர்கள் குழு... 03ஆம் பக்கத் தொடர்

சாரணர்கள், சிறந்த ஆரோக்கியத்துடன் உள்ளனர். சில செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை அவர்கள் தமது புதிய இடத்திலிருந்து தொடரவுள்ளனர். ஜம்போரியில் பங்கேற்கும் அனைத்து இலங்கை சாரணர்களினதும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் நலனையும் உறுதி செய்வதற்காக, தென் கொரியாவிலுள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை சாரணர் குழுவின் நிர்வாகத்துடனும், சம்பந்தப்பட்ட தென் கொரிய அதிகாரிகளுடனும் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருவதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

## குருந்தூர்மலை பொங்கல்... 03ஆம் பக்கத் தொடர்

எனினும், எந்தவொரு கோயிலுக்கும் சென்று புத்தர் சிலையை வைத்து, பிரித் ஓதி பௌத்தர்கள் வழிபடுவதில்லை. ஆனால், முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

இந்து அடிப்படைவாதிகளுக்கு நீதிபதி இவ்வாறு தொடர்ந்தும் அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறார். விகாராதிபதியையும் நீதிமன்றத்துக்கு அழைக்காமல் இவ்வாறான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இது பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் செயற்பாடாகும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நாம்தானா இனவாத மதவாத பிரச்சினைகளுக்கு காரணம்?

அல்லது பௌத்த வழிபாட்டுத்தலம் ஒன்றில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதி வழங்கிய சட்டத்தரணி உள்ளிட்ட நீதிபதியா காரணம் ? எனக் கேட்க விரும்புகிறேன். இந்த செயற்பாடு தொடர்பாக கவனம் செலுத்தி, உடனடியாக இந்தநிகழ்வை நிறுத்த வேண்டுமென்று ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கில், பௌத்த சின்னங்களை அழிக்கும் பல செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன. காணி அதிகாரம் இல்லாமலேயே இவ்வாறு இடம்பெறுகிறதென்றால், காணி அதிகாரம் கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்?

இந்த பௌத்தச் சின்னங்கள் பௌத்தர்களுக்கு மட்டுமன்றி, நாட்டிலுள்ள அனைவருக்கும் உரித்தானதென்று நினைக்காத அடிப்படைவாத அரசியல்வாதிகள் இருக்கும் வரை, 13 தொடர்பாக நாம் கதைக்கக்கூட தயாரில்லை" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அங்கஜன் எம்பிக்கு பாராளுமன்ற... 03ஆம் பக்கத் தொடர்

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாததால் புதன்கிழமை ஐந்து முறை இந்த சபையில் ''கோரம்'' கேட்க வேண்டியேற்பட்டது. பாராளுமன்றத்தின் சபை விவகாரக் குழுவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் தொடர்பில் இருப்பவர்களுக்கு அவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதனால் எதிர்க்கட்சியில் அரசியல் செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க எமக்கான வாய்ப்புகள் எமக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இது தொடர்பில் அப்போது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ அது தொடர்பில் நாளை (இன்று) சபை அலுவல்கள் குழுவில் பேசுவோம் என்றார். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க , பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பாராளுமன்றத்துக்கு வந்திருந்தார். அவர் மேற்படி குழுவில் உள்ளார். அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஆளும் கட்சியில் அமர்ந்துள்ள அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கும் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் எதிர்க்கட்சியின் பிரதிநிதித்துவம் இடம்பெறவில்லை என்றால், அது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் பேசி பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வறிய குழந்தைகளுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவரொருவருக்கு முன்னாள் அமைச்சர் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க பரிசில் வழங்கினார்.

## அனைத்து சவால்களுக்கும்... 03ஆம் பக்கத் தொடர்

மேற்கொள்வதற்காக, அதிநவீன தொழில்நுட்ப வசதிகளின் கூடிய இந்த ஆய்வு மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்,

" நாட்டுக்கு புதியவற்றை சேர்க்க முயலும் தொழில் முனைவோருக்கு நாமும் பலமாக இருக்க வேண்டும். மாறிவரும் உலகில் அதற்கேற்ப மாறாவிட்டால் ஒரு நாடாக நம்மால் எதிர்கால சந்ததியினருக்காக நல்ல முடிவுகளை எடுக்க முடியாது. தொழினுட்ப உலகில் எழும் சவால்களை சிந்திப்பதை விட சிந்தித்து புதிய உற்பத்திகளை உருவாக்குதல் மூலம் சவால்களை எதிர்கொள்ள முடியும். நமது நாட்டில் மனித வளம்தான் அதிகம் பயன்படுத்தப்படாத வளமென, நான் நம்புகிறேன். இதற்கு நாட்டில் காணப்பட்ட கல்வி முறையும் காரணமாகவுள்ளது. தொழில் சார்ந்த திறமை கொண்ட பிள்ளைகளின் தலைமுறையை உருவாக்காததன் விளைவாக சிங்கப்பூர், சீனா, இந்தியா போன்ற நாடுகளை நாம் கடந்து செல்லும் போது வாங்கிய கடனை கூட கட்ட முடியாத நாடாக, நம் நாடு மாறிவிட்டது.

நாட்டில் உருவாகும் பட்டதாரிகளில் 51 % மானோர் கலைப்பட்டதாரிகள். அவர்களில் அநேகமானோருக்கு வழங்குவதற்கு நாட்டில் வேலை இல்லை. காணப்படும் வேலைகளுக்கும் தேவையான கற்றவர்கள் இல்லை. அதற்குத் தீர்வாக தொழில்நுட்ப பாட நெறியை உயர்தரத்துக்கு அறிமுகப்படுத்தினேன். தொடக்கத்தில் பலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும் தற்போது இலட்சக் கணக்கான குழந்தைகள் அதன் பலனை அனுபவித்து வருகின்றார்கள். தற்போதைய தலைமுறையினருக்கு விவசாயம் மற்றும் அதன் நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் மூலம் அவர்களை உயர்கல்வி அல்லது அதன் அடிப்படையில் விவசாய தொழில் முனைவோராக மாற்ற வாய்ப்புள்ளது என்றார்.

## மலையக மக்களுக்கு மிக...

தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்க வேண்டும் என ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் அனைவரும் தெரிவித்து வருகின்றனர். அது தொடர்பில் நான் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனினும், அது தொடர்பில் ஏற்கனவே ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளேன். அத்துடன் அமைச்சர்களான ரமேஷ் பதிரண, ஹரீன் பெர்ணான்டோ, மனுஷ நாணயக்கார ஆகியாருடனும் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மிக விரைவாக மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி உரிமை வழங்கப்படும்.

அத்துடன் பலர் வரலாறு தெரியாமல் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

.அத்துடன் எமக்குள் பிரிவினை இருப்பதாக சிலர் தெரிவிக்கின்றனர். நாம் இந்திய வம்சாவளி மக்கள் என எம்மை அடையாளப் படுத்துவதாகவும்

ஏனையவர்கள் இலங்கை தமிழர்கள் என தெரிவிப்பதாவும் குறிப்பிடுகின்றனர்.

எங்களுக்கு நடந்த அநீதி வேறு இலங்கை தமிழர்களுக்கு இடம்பெற்ற அநீதி வேறு. அதனால், நாம் இலங்கை தமிழர்கள் என்றால் எமக்கு ஏற்பட்ட அநீதி மறைக்கப்படும். அதேபோன்று நான் ஒரு சட்ட ரீதியான இந்திய வம்சாவளி தமிழன்.

நான், எனக்கான அமைச்சை பொறுப்பேற்கும் போது 4.000 வீடுகளில் 699 வீடுகளே சகல வசதிகளுடன் பூரணமாக கட்டிமுடிக்கப்பட்டிருந்தன. ஏனைய வீடுகளை பூரணப்படுத்த வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டது. போதுமான நிதி இல்லாமையாமல் எதனையும் செய்ய முடியாமல் போனதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரமிட் திட்டங்களில்...

பிரமிட் திட்டங்கள் தொடர்பில் தொடர்ந்தும் மத்திய வங்கி மக்களுக்கு எச்சரிக்கைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கடும் அறிவித்தல்களையும் மீறி...

நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது பரிதாபகரமானதென, தாமரைக் கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

“இந்த பொதுச்சொத்தை பாதுகாப்பது நமது கடமையாகும். இருப்பினும், தாமரை கோபுரத்தின் சுவர்கள் மற்றும் இரும்பு வேலிகளை சேதப்படுத்தும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது,” என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## நௌபர் மௌலவி உள்ளிட்ட...

குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேலதிக குற்றச்சாட்டுகளை வாசிப்பதற்காக சந்தேக நபர்கள் அனைவரையும் ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# மாத்தளை சோமுவின் படைப்புலகம் பற்றிய கருத்தரங்கம் மதுரையில்



இலங்கை முன்னணி எழுத்தாளர்களின் ஒருவரும், சர்வதேச நாடுகளில் புகழ் பெற்றவருமான மாத்தளை சோமுவின் படைப்புலகம் பற்றிய முழுநாள் கருத்தரங்கம் இன்று வெள்ளிக்கிழமை 11ம் திகதி (11.08.2023) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழியற்புலம், ஆஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் சங்கம் (சிட்னி) ஆகியன இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.

மதுரை காமராசர் பல்கலைக்கழக பேரா. ம. கி;ருஷ்ணன் பதிவாளர் (பொ) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேரா. வை இராமராஜன்பாண்டியன், பேரா. சு. நாகரத்தினம்,ம.மதியழகன்ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மாத்தளை சோமுவின் 'ஒற்றைத்தோடு'என்ற சிறுகதைத்தொகுப்பு, மாத்தளை சோமுவின் படைப்புலகம் ஆகிய நூல்கள் இன்றைய கருத்தரங்கில் வெளியிடப்படவுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக சிரே. பே. சரவணக்குமார், மலையக வாழ்க்கை எனும் தலைப்பிலும், அமெரிக்கன் கல்லூரி கௌரவ விரிவுரையாளர் மு. கிறிஸ்டோபர் 'புலம்பெயர் வாழ்க்கை'எனும் தலைப்பிலும், இக்கருத்தரங்கில் உரைநிகழ்த்துகிறார்கள்.

காந்தி கிராம பல்கலைக்கழக முனைவர் பா. ஆனந்தகுமார் 'கண்டிச் சீமையில்' என்ற நூல் பற்றியும், மன்னார் துரை சிங்கம் கல்லூரி முனைவர் ஆ. பாண்டி 'எல்லைத் தாண்டா அகதிகள்' என்ற நூல் பற்றியும், குமரகுரு கலை அறிவியல் கல்லூரி கௌரவ விரிவுரையாளர் ப. சுடலைமணி 'மூலஸ்தானம்'எனும் நூல் பற்றியும், முனைவர் ந. முருகேசபாண்டியன் 'அய்யனார் ஆடு' எனும் நூல் பற்றியும், குமரகுரு கலை அறிவியல் கல்லூரி முனைவர் சு. வேணுகோபால் 'அவர்களின் தேசம்' எனும் நூல் பற்றியும், நாகநந்தினி மொழிபெயர்ப்பு இலக்கியம், முனைவர் யாழ், சு. சந்திரா 'பயண இலக்கியம்' எனும் நூல் பற்றியும், பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் உ. அலிபாவா 'கட்டுரை இலக்கியம்' எனும் நூல் பற்றியும் கருத்துரை வழங்குவார்கள்;.

மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர். வை இராமராஜன் பாண்டியன், பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் உ. அலிபாவா, காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் பா. ஆனந்தகுமார் ஆகியோர் இக்கருந்தரங்கை ஒருங்கிணைத்துள்ளார்கள்.

**எச்.எச்.விக்கிரமசிங்க**



தமிழக அரசின் புதிய தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்ட ஷிவ்தாஸ் மீனாவை அண்மையில் (08) இலங்கைக்கான சென்னை துணை உயர்ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரன் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பில் இலங்கை தமிழ்நாடு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் பேசப்பட்டது. "ராமாயணப் பாதையை" ஆராய்வது மற்றும் திருவள்ளுவர் சிலையை நிறுவுவது குறித்தும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

## தோட்டத் தொழிலாளர்களின்...

உபயோகப்படுத்தப்படாத காணிகளை, மீண்டும் அரசுடமையாக்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டார். எனினும், பல்வேறு தடைகளினால் அது சாத்தியமற்றுப் போனது. மலையக அரசியல் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் விசேட பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது. இந்நிலையில், பெருந்தோட்ட மக்களுக்கு காணிகளை பெற்றுக்கொள்ளும் கோரிக்கையை மலையக பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மலையக பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில், உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## மலையக மக்களது பிரச்சினைகளை...

குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசும் போது சபையில் அமைச்சர்கள் எவரும் இல்லை என்றும், அவர்களுக்கு மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறை கிடையாது என்றும் நேற்று சபையில் உரையாற்றிய மனோ கணேசன் எம்பி மற்றும் உதயகுமார் எம்பி ஆகியோர் தெரிவித்தனர்.

அது தொடர்பில் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், "மலையக மக்களின் பிரச்சினைகளை பேசும் போது சபையில் அமைச்சர்கள் எவரும் இருக்கவில்லை. இதற்காக, மலையக மக்கள் மீது அவர்களுக்கு அக்கறையில்லை என்பதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. அப்படியானால் மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைத்தார். இதனை நீங்கள் நிராகரிப்பது மலையக மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையில்தானா?" என, தமிழ் முற்போக்கு கூட்டணியினரைப் பார்த்து சபையில் அமைச்சர் கேள்வியெழுப்பினார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் எம்.பி.யான உதயகுமார் உரையாற்றிய போது முனவைத்த குற்றச் சாட்டுக்கே, அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சபையில் விவாதம் நடக்கும் போது சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ ஏனைய அமைச்சர்களோ சபையில் இல்லை என்ற குற்றச்சாட்டை ஏற்கனவே உரையாற்றிய மனோ கணேசன் உள்ளிட்ட எம்.பி.க்களும் முன்வைத்திருந் தனர். இந்நிலையில் உதயகுமார் எம்.பி.யும் அந்தக் கருத்தை முன்வைத்தார்.

அமைச்சரின் கேள்வியையடுத்து கருத்து தெரிவித்த உதயகுமார் எம்.பி, அதற்கும் இதற்கும் முடிச்சுப் போடவேண்டாம். காலையில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மட்டும்தான் இங்கிருந்தார். அதற்கு பின்னர் அவரும் இல்லை. தற்போது நீங்கள் இருக்கின்றீர்கள் என்று தெரிவித்தார்.

அவர் சில விடயங்களை ,தெரியும்தானே...மக்களை தெரியும் தானே ...அரசியல் ரீதியாக அவரின் செயற்பாடுகள் தெரியும்தானே ..தற்போது எனக்குள்ளது குறுகிய நேரம். அதில் நான் இந்த விடயங்களை பேச விரும்பவில்லை ஏனென்றால் மலையக மக்கள் இந்த பிரேரணையை பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் பிரச்சினைகளை நான் வெளிக்கொண்டு வர வேண்டும் எனக்கூறி வேறு சில விடயங்களை பேசி உரையை நிறைவு செய்தார்.

## நாட்டுக்கு நட்டத்தை ஏற்படுத்தும்...

உடன்படிக்கைகள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்: இலங்கைக்கு முதலிடம் என்ற வெளிநாட்டுக் கொள்கையுடனேயே நாம் செயற்படுகிறோம். இந்தியாவுடன் பேசப்பட்ட விடயங்கள், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளன. அவற்றை ஜனாதிபதி, பிரதமரின் அனுமதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

தயாசிறி ஜயசேக்கர எம்பி தமது கேள்வியின் போது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்ட போது சேது சமுத்திரத் திட்டம், திருகோணமலை பொருளாதார வலயம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இரு தரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பப்பட்டுள்ளன. இந்தியா எமது அயல் நட்பு நாடு என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடம் கிடையாது.நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை எமக்கு வழங்கியுள்ளது. எனினும், நாட்டின் தேசிய ஆட்புல ஒருமைப்பாடு, சுயாதீனம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டியது அவசியமாகிறது. ஜனாதிபதியின் இவ்விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்கள் தொடர்பாக இதுவரை முழுமையான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. அந்த ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்த முடியுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இந்தியாவுடனான பேச்சுவார்த்தை இலங்கைக்கு சார்பாகவே உள்ளது. பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா தற்போது ஐந்தாவது இடத்திலுள்ளது. 2030 ஆம் ஆண்டு மூன்றாவது இடத்தை அடையவும் 2050 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்தை அடையவும் இந்தியா நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் இலங்கைக்கு பல வழிமுறைகளில் சாதகமாக அமையும் என்பதை மறந்து விடக்கூடாது. எமது நாட்டைப் பொறுத்தவரை வரலாற்று கைதியாக செயற்பட வேண்டிய அவசியம் இலங்கைக்கு கிடையாது.நாட்டுக்கு பயனளிக்கும் விடயங்கள் தொடர்பிலேயே செயற்படுவோம் என்றார்.

## நாட்டை முன்னேற்ற, வலுவான...

உரையாற்றும்போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

கடந்த வருடம் தொழிற்சங்க அமைப்பின் வருடாந்த மாநாடு நடைபெற்ற போது. நாடு இருண்ட நிலையில் இருந்தது. அப்போது, பலருக்கும் இலங்கையின் எதிர்காலம் குறித்த கேள்விக்குறி இருந்தது. ஆனால் உங்கள் அனைவரின் ஆதரவால், எங்களால் அதை மாற்ற முடிந்தது. அதற்கு, நான் நன்றி தெரிவிக்கிறேன். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், எதிர்காலம் குறித்து நம்பிக்கை வைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒழுங்கான பொருளாதார நிர்வாகத்தை நாம் மேற்கொண்டால், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் திட்டமிட முடியும்.

நாட்டின் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத சவாலை எதிர்கொள்ளும் வரை, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தேடவில்லை. இதனால்தான், பொருளாதாரச் சிக்கல் வளர்ந்தது.

அரசியல் தலைவர்கள் பொருளாதாரம் தொடர்பான சரியான முடிவுகளை எடுக்கத் தயங்கியதால், நிலைமை மேலும் மோசமானது. இப்பொருளாதார நெருக்கடியை மக்கள் கடுமையாக உணர்ந்தனர். அவர்கள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். சில போராட்டங்கள் வேறு கோணத்தில் இருப்பதை போராட்டத்தின் நிறைவில் காண முடிந்தது. இந்நிலையில் தலைமைத்துவ வெற்றிடம் தென்பட்டது. அன்றிருந்த அரசு சுவரில் நசுக்கப்பட்டிருந்தது.இதனால், அப்போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ச தனது பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது. இதன்போது எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து அரசாங்கத்தைக் கையளிக்க ஜனாதிபதி முயற்சித்தார். ஆனால், அந்த சவாலை ஏற்க எதிர்க்கட்சித் தலைவர் தயாராக இருக்கவில்லை. உலகிலேயே முதன்முறையாக ஜனாதிபதி ஒருவர் மற்றொருவருக்கு ஆட்சி அதிகாரம் வழங்க அழைப்பு விடுத்தார். எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு மறுப்பு தெரிவித்தது கூட கின்னஸ் சாதனையாகவே கருதுகிறேன்.

அதன்பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, நாட்டை பொறுப்பேற்க என்னை அழைத்தார். நான் பதவி கேட்கவில்லை. ஆனால் அப்போது நாடு நெருக்கடியில் இருந்தது. நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய பின்னர், நாட்டை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டு வர தேவையான நடவடிக்கைகளை எடுத்தேன். அதன்படி, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு மாதத்திற்குள் குறுகிய கால தீர்வுகளை வழங்க முடிந்தது என்றார்.

## Online மூலமாக நேற்று வரை ...

படிவங்களாக 26,972 பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 6,405 கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணங்களில் குறைகளுடன் விண்ணப்பித்த 14,676 விண்ணப்பங்கள் தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தவறுகள் இல்லாமல் ஆவணங்களை மீளவும் அனுப்பும்படி அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார். விரைவான மூன்று நாள் சேவையின் கீழ் 8,742 விண்ணப்பப்படிவங்கள் கிடைக்க பெற்றுள்ளதுடன் மூன்று நாள் சேவையின் கீழ், கிடைக்கப்பெற்ற 6,521 விண்ணப்பம் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

## நூறு அடி பள்ளத்தில் ...

முச்சக்கரவண்டியில் பயணித்த மூன்று வயது குழந்தை உட்பட நால்வர் படுகாயமடைந்து மஸ்கெலியா பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக டிக்கோயா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த விபத்துநேற்று முன்தினம் (09) பிற்பகல் 03:00 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், மஸ்கெலியா, நோர்டன்பிரிட்ஜ் பிரதான வீதியில் மஸ்கெலியா, ஹபுகஸ்தென்ன பிரதேசத்தில் முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகிச் சென்றுள்ளது.

## இந்திய அரசு போன்று பிரிட்டன்...

எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நவீனத்துவத்தின் அடிமைகளாகவே எமது மக்கள் இன்றும் வாழ்கின்றார்கள்.அனுதாபத்தை அன்றி எமக்கான உரிமைகளையே நியாயமாகக் கோருகின்றோம். இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள 3000 கோடி ரூபாவை அரசாங்கம் பெருந்தோட்ட சமூகத்தின் கல்வி முன்னேற்றத்துக்காக பயன்படுத்த வேண்டும். இந்தியாவைப் போன்று பிரிட்டனும் பெருந்தோட்ட சமூகம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். அது தொடர்பில் பாராளுமன்றத்தின் ஊடாக கொழும்பில் உள்ள பிரிட்டனுக்கான பதில் உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோளை முன்வைக்கின்றேன். பெருந்தோட்ட மக்கள் பின்தள்ளப்பட்ட சமூகமாக இரு நூற்றாண்டு காலமாக வாழ்கின்றார்கள். இதை சர்வதேச மதிப்பாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.அத்துடன் பெருந்தோட் மக்கள் நவீன அடிமைத்துவத்தின் அடையாளமாக வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியாவிலிருந்து தொழிலுக்காக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட பெருந்தோட்ட மக்கள் கடந்த 200 வருடகாலமாக நலிவுற்ற, உரிமையற்ற சமூகமாகவும், பல துயரங்கள் மற்றும் அடக்கு முறைகளை எதிர்கொள்பவர்களாகவுமே வாழ்கின்றார்கள்.

கடந்த 200 வருட காலத்தில் வெள்ளையர்களின் ஆட்சியிலிருந்து, பேரினவாத ஆட்சிக்கு பெருந்தோட்டங்கள் சென்றுள்ளதே தவிர முன்னேற்றகரமான வேறு எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. பெருந்தோட்ட மக்கள் போஷாக்கின்மை,உணவு பாதுகாப்பின்மை, பாலியல் வன்முறைகள்,தொழில் சுரண்டல்கள்,,அதிக சுமை,குறைவான கூலி,காணி உரிமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். காலம், காலமாக எதிர்கொள்ளும் இந்த பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து நாம் அனுதாபத்தை கோரவில்லை, நியாயமான தீர்வினையே கோருகிறோம்.

## இந்தியா, UK முறைமையில் ...

உள்ளிட்ட விடயங்கள்தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினருக்குமிடையில் சந்திப்பு நடைபெற்றது. இக் இக்கலந்துரையாடல் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் (09) பிற்பகல் நடைபெற்றது. இதன்போதே கூட்டமைப்பு எம்பிக்கள் இவ்வாறு விளக்கமளித்தனர். இக்கலந்துரையாடலில், அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் அதிகாரங்களைக் கோருவதற்கான காரணங்களை கூட்டமைப்பினரிடம் கேட்டறிந்தார்.

உலகின் ஏனைய நாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டு அதிகாரப்பரவலாக்கத்தின் அவசியத்தை தமிழ் கூட்டமைப்பினர் விளக்கியதுடன், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினர். பொலிஸ் அதிகாரங்களை வழங்காமல் இப்பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் அமைச்சர் டிரான் கலந்துரையாடினார்.

அண்மையில் இங்கிலாந்து, இந்தியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட அதிகாரப் பகிர்வு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டிய தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள், அங்கு பயன்படுத்தப்படும் முறைகளை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த முடியுமெனவும் விளக்கமளித்தனர்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் டிரான், இங்கிலாந்து மற்றும் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக கலா சாரங்கள் முற்றிலும் வேறுபட்டவை என சுட்டிக்காட்டினார். தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவையென்ன என, அமைச்சர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

மாவட்டக் குழுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நீண்ட தூரம் கடந்து கொழும்பு வர வேண்டியிருப்பதாலும், சில ஆளுநர்களின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் உள்ளதாலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதன்போது தெரிவித்தனர். அத்துடன், பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களில் புதிதாக எதுவும் சேர்க்கப்படவில்லையெனவும், ஆனால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக மாகாண பொலிஸ் ஆணைக்குழுவையும் நியமிக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போது வடக்கில் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாகவும், இளம் பிள்ளைகள் போதைப்பொருளுக்கு அதிகளவில் அடிமையாகி இருப்பதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர். அவ்வாறான விடயங்கள் தொடர்பாக போதைப்பொருள் மற்றும் பாதாள உலக கோஷ்டிகள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் குழுவுக்கு கிடைக்கப்பெறும் தகவல்களை எந்த நேரத்திலும் பெற்றுக்கொடுக்கும்படியும், அவ்வாறான தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படுமெனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்தார்.

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் உரிய விசேட பொலிஸ் குழு செயல்பட்டு வருகிறது. இது தொடர்பான தகவல்களை பிரதிப் பொலிஸ் மாஅதிபருடன் எந் நேரத்திலும் கலந்துரையாட முடியுமெனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

சந்திப்பில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பொலிஸ் மாஅதிபர் சி.டி.விக்கிரமரத்ன, மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் இராசமாணிக்கம், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இரண்டு வாரங்களுக்குள் அடுத்த கலந்துரையாடலை நடத்த இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

# ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் யாழ். விவசாயிகளுக்கு உரமானியம்

## சாவகச்சேரியில் உர விநியோகம் ஆரம்பம்

**சாவகச்சேரி விசேட, யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்**

ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பினூடாக (FAO) சிறு விவசாயிகளுக்கான உரமானியம் வழங்கும் ஆரம்ப நிகழ்வு, சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் நேற்று (10) நடைபெற்றது.

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெய்வநாயகி தலைமையில் 25 விவசாயிகளுக்கு யூரியா உரப்பொதிகளை, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் H.E.MIZUKOSHI Hideaki மற்றும் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வழங்கி வைத்துள்ளனர். ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியில் யாழ். மாவட்டத்துக்கு 25 கிலோகிராம் நிறைகொண்ட 19,973 யூரியா உரப்பொதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில், சாவகச்சேரி கமநலசேவை நிலைய எல்லையைச் சேர்ந்த 2,777 விவசாயிகளுக்கு 3,774 யூரியா உரப்பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உர ஒதுக்கீடு 0 – 30 பரப்புக்கு இடைப்பட்ட வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 25 கிலோகிராம் யூரியாவும் 30 – 60 பரப்புக்கு இடைப்பட்ட வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோகிராம் யூரியாவும் நன்கொடையாக வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில் ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான வதிவிடப் பிரதிநிதி விமலேந்திர சரன், சாவகச்சேரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நல்லூர்க் கந்தன் திருவிழா 21இல்; காளாஞ்சி கையளிப்பு

**பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோாசவத் திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் வைபவம் கல்வியங்காட்டு பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை (10) காலை நடைபெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாண படிப்புடன் பந்தல்கால் நாட்டுதல் நடைபெற்றதை தொடர்ந்து, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபு உடையவர்களுக்கான காளாஞ்சி மற்றும் திருவிழா பத்திரிகையை, ஒற்றை திருக்கை மாட்டுவண்டியில் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு, அவை கலாசார முறைப்படி கையளிக்கப்பட்டன.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இம்மாதம் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொன். சக்தி கலாகேந்திரா மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை



பொன். சக்தி கலாகேந்திரா மாணவிகளான சீனுஜா இராஜேந்திரன் மற்றும் சியானா இராஜேந்திரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை (12) யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் நடனத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளரான சத்தியப்பிரியா கஜேந்திரனின் பெரும் பணிகளால் 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொன். சக்தி கலாகேந்திரா அமைப்பு, நீர்வேலி இராஜ வீதிக்கு அண்மையில் கரந்தன் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

இந்த அமைப்பை வழி நடத்தும் சத்தியப்பிரியா கஜேந்திரன், நடனத்துறையில் முதுதத்துவமாணி பட்டத்தை பெற்றுள்ளார். இதேவேளை, இந்த அமைப்பினால் நடனத்துறையில் நூற்றுக்கணக்கான நடனமணிகள் உருவாக்கப்பட்டுள்ளனர். தற்போதுவரை நடனத்துறையில் 15 மாணவிகள் கலைமாணி பட்டத்தை பெற்றுள்ளனர். 8 பேர் கலாவித்தகர் பட்டத்தை பெற்றுள்ளனர்.

இந்த அமைப்பினால் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டதுடன், 10க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் யாழ்ப்பாணத்துக்கு வெளியே பல்வேறு மாவட்டங்களிலும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

நீர்வேலியென்றால் பரதம் என்று சொல்கின்ற புதுமையை காண்பதுடன், நீர்வேலியில் புகழ்பூத்த அமைப்பாக பொன். சக்தி கலாகேந்திரா தடம் பதித்துள்ளது.



ஐசிடி சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த தொழில்நுட்பம் தொடர்பான சட்டகட்டமைப்பு அமர்வு நேற்று முன்தினம் தாஜ் சமுத்திராவில் நடைபெற்றது. நிகழ்வில் சங்கத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்களுடன் பிரதம அதிதியாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கலந்து கொண்டார்.

படங்கள் சுதத் மரவீர



இலங்கையின் முன்னணி மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களில் ஒன்றான மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட், சமீபத்தில் மாத்தளையில் தனது கிளையை பிரமாண்டமாக ஆரம்பித்து வைத்தது.மாத்தளை கிளையானது இலங்கையில் இந்நிறுவனத்தின் 28 ஆவது கிளையாகும்.மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் புதிய கிளை இல. 302, திருகோணமலை வீதி, மாத்தளை என்ற முகவரியில் அமைந்துள்ளது.கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறத் துறைகளுக்கு சேவைகளை வழங்குவதில் தெளிவான கவனம் செலுத்தி, மஹிந்ரா ஐடியல் ஃபினான்ஸ் நிறுவனத்தின் கடன் வழங்கல் துறையில் தங்கக் கடன்கள் முதல் மோட்டார் கார்கள், முச்சக்கர வண்டிகள், விவசாய பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் வணிக பயன்பாட்டு வாகனங்களுக்கான குத்தகை வசதிகள் வரை பல்வேறு வகையான நிதித் தயாரிப்புகள் உள்ளன.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.08.09
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5201 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,500,400.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 9 1 5 7 1 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3443 — சீட்டிழுப்பு திகதி 2023.08.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,990,746.40
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 47 50 54 73 — விசேட எழுத்து W
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 33432

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 510 — சீட்டிழுப்பு திகதி 2023-08-09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,410,250.20
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 16 17 30 52 — விசேட இலக்கினம் கடகம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1549 — 09/08/2023 — 20199 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 403,648,316.00
ஆங்கில எழுத்து B — சுப்பர் இலக்கம் 22 — வெற்றி இலக்கங்கள் 14 16 26 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 — திகதி 09.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0027
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 9 9 2 1 6 3 — L7 இலக்கம் 2 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,743,951.84

தன நிதானய — தேதி 2023/08/09 — சீட்டிழுப்பு இலக்கம் 1231 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,078,165.60
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 10 43 58 73 — விஷேசட ஆங்கில எழுத்து R
Double Chance இலக்கம் 33334



S&S SINCE 1892

இலங்கை பொலிஸ்
மோட்டார் வாகனங்களின்
பிரம்மாண்டமான
மாபெரும் 7 நாள் ஏல விற்பனை

ஏராளமான வாகனக் கழிவுகள் உட்பட
360 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்களும்
மோட்டார் சைக்கிள்களும்
பின்வரும் தினங்களில் குறிப்பிடப்பட்ட இடங்களில் நடைபெறும்.

2023 ஆகஸ்ட் 22 செவ்வாய்க்கிழமை
மாத்தறை, பொலிஸ் கராஜ் வளாகத்தில்
மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும்.
விபரம்:
**ஜீப் வண்டிகள்;** 4 டாட்டா சுமோ, கெப் வண்டி 1 டாட்டா 207 சிங்கிள் கப், **வான்;** 1 நிஸான் கெரவன், **மோட்டார் சைக்கிள்கள்;** 2 சுசூகி GN 250, **வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பெருந்தொகையான கழிவுப் பொருட்கள்.**

2023 ஆகஸ்ட் 29 செவ்வாய்க்கிழமை
அம்பாறை, பொலிஸ் கராஜ் வளாகத்தில்
மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும்.
விபரம்:
**ஜீப் வண்டி;** 1 டொயோட்டா லேன்ட் குரூசர், 1 டாட்டா சுமோ, டிரக் வண்டி 1 அசோக் லேலன்ட் கார்கோ, **மோட்டார் சைக்கிள்கள்;** 1 சுசூகி DR 200, 1 ஹொண்டா CD 200, 1 யமஹா XT 350, 1 டிலக்ஸ் CG 125, **வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பெருந்தொகையான கழிவுப் பொருட்கள்.**

2023 செப்டம்பர் 05 செவ்வாய்க்கிழமை
கண்டி வழியாக குண்டசாலை,
பொலிஸ் கராஜ் வளாகத்தில்
மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும்.
விபரம்:
**ஜீப் வண்டிகள்;** 2 டொயோட்டா லேன்ட் குரூசர், **டிரக் வண்டிகள்;** 2 டாட்டா, **மோட்டார் சைக்கிள்கள்;** 2 சுசூகி GN 250, 1 சுசூகி GSX 450, 2 ஹொண்டா CD 200, 1 யமஹா SR 250, **வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பெருந்தொகையான கழிவுப் பொருட்கள்.**

2023 செப்டம்பர் 12 செவ்வாய்க்கிழமை
வவுனியா, பொலிஸ் கராஜ் வளாகத்தில்
மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும்.
விபரம்:
**ஜீப் வண்டிகள்;** 2 லேன்ட் றோவர், 1 இசுசு ரூபர், 4 டாட்டா சுமோ, **கெப் வண்டிகள்;** 2 பொலேரோ சிங்கிள் கெப், பஸ் வண்டி 1 டாட்டா 609 மினி பஸ், **அம்பியுலன்ஸ்;** 2 டொயோட்டா, **பௌசர்கள்;** 2 அசோக் லேலன்ட், 2 பௌசர் டெய்லர்கள், **டிரக் வண்டிகள்;** 2 அசோக் லேலன்ட் கார்கோ, 2 அசோக் லேலன்ட் கொமட், **டிரக்டர்கள்;** 2 மெஸே பெர்குசன், 1 எஸ்கோர்ட், 1 மஹேந்ரா, 1 கை உழவு இயந்திரம், **மோட்டார் சைக்கிள்கள்;** 2 ஹொண்டா CD 200, 3 சுசூகி DR 200, 3 TVS விக்டர் 110, 2 டிலக்ஸ் GC 125, 1 சுசூகி TS 185 உட்பட **வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பெருந்தொகையான கழிவுப் பொருட்கள்.**

2023 செப்டம்பர் 14 வியாழக்கிழமை
அநுராதபுரம், பொலிஸ் கராஜ் வளாகத்தில்
மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும்.
விபரம்:
**கார்;** 1 நிஸான் சனி, **ஜீப் வண்டிகள்;** 2 இசுசு ரூபர், 2 டொயோட்டா லேன்ட் குரூசர், **டிரக் வண்டிகள்;** 1 அசோக் லேலன்ட் கொமட் சுப்பர், **முச்சக்கர வண்டிகள்;** 1 பஜாஜ், **கை உழவு இயந்திரம்;** 1 லாயுரல், 1 பௌசர் தாங்கி, **மோட்டார் சைக்கிள்கள்;** 3 சுசூகி GN 250, 1 சுசூகி TS 185, 3 யமஹா SR 250, 1 யமஹா DT 200 உட்பட பெருந்தொகையான வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், **73 பரல் கெரோசன் 210 லீற்றர் எரிபொருள் எண்ணெய் மற்றும் பெருந்தொகையான பாவிக்கப்பட்ட ஒயில் பில்டர்கள்.**

2023 செப்டம்பர் 21 வியாழன் மற்றும்
27 புதன்கிழமைகளில்
அஅத்திடிய, பொலிஸ் பயிற்சி நிலையம்
மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும்.
விபரம்:
**கார்கள்;** 4 பேர்ஜோ 406, 2 நிஸான் சனி, 1 மிட்ஷுபிஷி கலன்ட், 1 டொயோட்டா டேர்ஸல், 1 டொயோட்டா சொலுனா, 1 டொயோட்டா கம்ரி, 1 ஹையுண்டி அசென்ட்ரா, 1 சவலட் அவேயோ டுளு, **ஜீப் வண்டிகள்;** 17 டாட்டா சுமோ, 6 டொயோட்டா லேன்ட் குரூசர், 1 இசுசு ரூபர், 1 நிஸான், **வான்;** 1 இசுசு பாகோ, **கெப்;** 1 டாட்டா 207 சிங்கிள் கெப், **அம்பியுலன்ஸ்;** 3 மிரோ, **முச்சக்கர வண்டிகள்;** 3 பஜாஜ், **பௌசர்;** 1 ஹினோ, **பஸ்;** 1 அசோக் லேலன்ட் கொலம்பு ரைடர், **டிரக்குகள்;** 4 டாட்டா, 2 அசோக் லேலன்ட் கார்கோ, 1 அசோக் லேலன்ட் கொமட் சுப்பர், 1 ஹினோ, **கை உழவு இயந்திரங்கள்;** 1 லாயுரல், 1 குபோட்டா, மோட்டார் சைக்கிள்கள் 2 சுசூகி GN 125, 6 சுசூகி GN 250, 1 சுசூகி TS 125, 1 சுசூகி GSX 450, 9 ஹொண்டா CD 200, 1 ஹீரோ ஹொண்டா CD 100, 1 யமஹா SR 250, 1 ஹீரோ ஹொண்டா டௌன், 13 பஜாஜ் கிளிபர், 14 வுஏளு விக்டர் 110, 4 டிலக்ஸ் CG 125, வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பெருந்தொகையான கழிவுப் பொருட்கள், **43 பரல் 210 லீற்றர் எரிபொருள் எண்ணெய் மற்றும் பாவிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள்.**

**விற்பனை நிபந்தனைகள்**
- ஏலம் விடப்படும் தினத்திற்கு முந்திய தினம், காலை 9.30 முதல் மாலை 4.00 மணி வரை வாகனங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.
- ஏலம் நடைபெறும் நாட்களில் கண்டிப்பாக தேசிய அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதிப்படுத்தும் செல்லுபடியான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுவதோடு, ஏலம் நடைபெறும் ஒவ்வொரு தினத்திலும், திருப்பிச் செலுத்தப்படாத ரூபா 1000/- பெறுமதியான நுழைவுச் சீட்டை, ஏல விற்பனையில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் ஏல விற்பனை நடைபெற்ற அதே தினத்தில் பி.ப 4.00 மணிக்கு முன்னர் காசாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், கொள்வனவு செய்யப்பட்ட சகல வாகனங்கள் மற்றும் ஸ்கிரப் பொருட்களும் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.
- கொள்வனவாளர்கள் தாங்கள் கொள்வனவு செய்த வாகனங்களை MW (6) மாதங்களுக்குள் தங்கள் பெயரில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் பொலிஸ் திணைக்களம் அதற்குப் பொறுப்பாகாது. அத்துடன், வாகனங்களை மாற்றுவது தொடர்பான ஆவணங்களை வழங்க மறுக்கும் உரிமையை தொடர்ந்தும் அது கொண்டிருக்கும்.
- எவ்வித முன்னறிவித்தலும் இன்றி எந்தவொரு வாகனத்தையும் மீளப்பெறும் உரிமை, பணிப்பாளர் (பொலிஸ் போக்குவரத்து) மற்றும் ஏலதாரருக்கு உண்டு.
- ஏல விற்பனையின் போது ஏற்படும் எந்தவொரு முறைப்படுகள் சம்பந்தமாகவும், பணிப்பாளர் (பொலிஸ் போக்குவரத்து) மற்றும் ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

மேலதிக விபரங்கள் மற்றும் தகவல்களுக்கு 2023 ஜூலை 21 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையை பார்க்கவும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/ஃபக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

CELEBRATING 125 Years

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671465, 011-2671468
தொலை/ஃபக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

011 2671468
www.sandslanka.com

# கிழக்கின் குரல்



## கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில்

# மட்டக்களப்பில் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைப்பு

### முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் பிரதம அதிதி

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட நாவற்குடா கிழக்கு பகுதியில், கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சினால் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி புனரமைப்புப் பணிகள் புதன்கிழமை (09) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட முதலாம் குறுக்கு சாரதா வீதியானது, கடந்த பல வருடங்களாக வெள்ள அனர்த்தத்தின் போது அங்குள்ள மக்கள் அதிகம் பாதிக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து, பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த அவ் வீதி கொங்கிரீட் வீதியாக அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் போது இராஜாங்க அமைச்சரின் பிரதிநிதியாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அபிவிருத்தித் திட்ட பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், இவ் வீதி 21 மீற்றர் நீளமும் 4 மீற்றர் அகலத்தையும் கொண்டதாக அவ்வீதி புனரமைக்கப்பட உள்ளது. இதுவரை காலமும் இவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மழை காலங்களில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர். இந் நிலையில் வீதி புனரமைப்பு ஆரம்ப நிகழ்வில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பிரதான நிறைவேற்று பொறியியலாளர் ஏ.லிங்கேஸ்வரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் முஸ்லிம் உறுப்பினர்களுடன், கிழக்கு மாகாண ஆளுநர் புதன்கிழமை (09) சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது கந்தளாய்,தம்பலகாமம்,கிண்ணியா,திருகோணமலை, குச்சவெளி ஆகிய சபைகளின், முன்னால் உறுப்பினர்கள், முன்னாள் தவிசாளர்கள் என பலரும் பங்குகொண்டு, ஆளுநருடன் எடுத்துக் கொண்ட படம்.

படம்;கிண்ணியா தினகரன் நிருபர்

## மட்டு. சிறையில் இருந்த பொத்துவில் கைதி மரணம்

மண்டூர் தினகரன் நிருபர்

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறைக் கைதி ஒருவர் திடீர் மரணமடைந்துள்ள சம்பவம் புதன்கிழமை (09) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான ஏ.வி.வீதி பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த மீரா முகைதீன் அப்துல் பரீட் (65) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கே.ஜி போதைப்பொருளை தன்வசம் வைத்து உட்கொண்டமையினால் பொத்துவில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நெஞ்சு வலியினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட போது ,சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி, சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவி பயிற்சி பட்டறை

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

டைடன் ஏசியன் கெம்பஸ் நிறுவனம் ஏற்பாடு செய்த இளைஞர், யுவதிகளுக்கான முதலுதவிப் பயிற்சிப் பட்டறை புனித சென்ஜோன்ஸ் அம்பாறை மாவட்ட காரியாலயத்தில் நடைபெற்றது.

டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தினுடைய இளைஞர் யுவதிகளுக்கு விரிவுரைகளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டதுடன், கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவி சம்பந்தமான எழுத்து மூல மற்றும் செயன்முறை பரீட்சைகளும் படைப் பிரிவினரால் நடாத்தப்பட்டது.

இந் நிகழ்வில், டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் என். கோகுலதாஸ், தலைவர் ஏ.ஆர்.எம். சர்ஜூன், தலைமை நிர்வாக அதிகாரி ஏ.ஏ.ஏ.அப்ரி, அம்பாறை மாவட்ட சென் ஜோன்ஸ் படைப்பிரிவின் ஆணையர் கெப்டன். எம்.ரி. நௌசாத் வபி, மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும், வை.எம்.எம்.ஏ.மாவடிப்பள்ளி கிளையின் தலைவரும், புனித சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் கல்முனை கோட்டத்தின் அத்தியட்சகருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம், சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் சம்மாந்துறை கோட்டத்தின் அத்தியட்சகர் ஹூசைன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சமுர்த்தி வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு



வாச்சிக்குடா விஷேட நிருபர்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் சமுர்த்தி பயனாளிகளின் நன்மை கருதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைவாக சமுர்த்தி சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ், வீடற்றவர்களுக்கான வீடுகளை மக்களின் பங்களிப்போடு அமைத்து கொடுத்து வருகின்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில், கண்ணகி கிராமம் மற்றும் அலிக்கம்பை பிரிவுகளில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு புதன்கிழமை (09) நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் அறிவுறுத்தலுக்கமைய சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் வழிகாட்டலில், இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், கருத்திட்ட முகாமையாளர் கமலப்பிரபா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் கவிதா, சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சுற்றுவட்டத்தை அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கல்முனை பிராந்திய மக்களின் போக்குவரத்து நலன்கருதி நற்பிட்டிமுனை சந்தியில் உடைந்துபோன சுற்றுவட்டத்தை மீளக் கட்டித்தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அம்பாறை சென்ரல்கேம்ப், சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் இருந்து கல்முனை பிராந்தியத்திற்கு பல்வேறு தேவைக்கு வருவோர் இதனால் மிகச் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். நற்பிட்டிமுனை சந்திச் சுற்றுவட்டாரம் கல்முனை, மருதமுனை என இரண்டாகப் பிரிவதால் மட்டக்களப்பு அல்லது கல்முனை வழிசெல்வதற்கு பொதுமக்களின் உதவியை பயணம் செய்வோர் நாடுவதாக குறிப்பிடுகின்றனர்.

இந் நிலையில் மட்டக்களப்பு, கல்முனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் இருந்து அம்பாறை மத்திய முகாம், சம்மாந்துறை பிரதேசங்களுக்கு செல்ல வரும் பிரயாணிகளும் இதனை எதிர்கொள்கின்றனர்.

## 33ஆவது ஸுஹதாக்கள் தினம் நாளை ஏறாவூரில் அனுஷ்டிப்பு

ஏறாவூர் சுழற்சி நிருபர்

1990ஆம் ஆண்டு ஏறாவூரில் படுகொலை செய்யப்பட்ட 121 ஸுஹதாக்களின் 33ஆவது நினைவு நாள் நாளை (12) சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஏறாவூர் ஸுஹதாக்கள் நினைவுப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நினைவு தின பிரதான நிகழ்வுகள், ஏறாவூர் மஸ்ஜிதுல் நூறுஸ்ஸலாம் பள்ளிவாசலில் நடைபெறவுள்ளதாக பேரவையின் தலைவர் எம்.எல்.ஏ. லத்தீப் தெரிவித்தார்.

1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி நள்ளிரவு வேளையில் ஏறாவூர் பிரதேசத்தின் எல்லைக்கிராமங்களான ஏறாவூர் 6, றஹ்மத் நகர், ஹிஜ்ரா நகர், மீராகேணி, ஐயன்கேணி மற்றும் சதாம் ஹுசைன் கிராமம் போன்ற பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பினர் தூக்கத்திலிருந்த அப்பாவி முஸ்லிம்களை துப்பாக்கியால் சுட்டும் வாளால் வெட்டியும் படுகொலை செய்திருந்தார்கள்.

இதில் சுமார் 121 அப்பாவி முஸ்லிம்கள் ஷஹீதாக்கப்பட்ட அந்த துக்ககரமான நாளினை ஒவ்வொரு வருடமும் நினைவு தினமாக பிரகடனப்படுத்தி அவர்களுக்காக பிரார்த்தனையில் ஈடுபடுவது வழக்கமான நடைமுறையாகும்.

இவ்வருடமும் ஏற்பாடகியுள்ள இந்த நினைவு தினத்தில் நாளை சுபஹ் தொழுகையினைத் தொடர்ந்து ஏறாவூர் மஸ்ஜிதுல் நூறுஸ்ஸலாம் பள்ளிவாயலில் கத்தமுல் குர்ஆன் தமாம் வைபவமும் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளதோடு, அவர்களுக்கான துஆ பிரார்த்தனையும் நடைபெறவுள்ளதாக பேரவையின் தலைவர் எம்.எல்.ஏ. லத்தீப் தெரிவித்தார்.

## நீரேந்து பகுதிகளில் மணல் நிரப்புவதற்கு எதிராக நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)



அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தில்லை ஆறு மற்றும் அதனை அண்டிய நீரேந்து பகுதிகளில் சட்ட விரோதமாக மணல் நிரப்புபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். அன்சார் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள நீரேந்து நிலைகள் மற்றும் விவசாய காணிகள், வெள்ள நீர் வடிந்தோடக் கூடிய கால்வாய்கள் போன்றவை அண்மைக் காலமாக சிலர் சட்டவிரோதமாக மணல் நிரப்பும் நடவடிக்கையை தடுக்கும் முகமாக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை (10) நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின் போதே இதனை தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,நீரேந்து நிலைகளில் மணல் நிரப்பப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் பாரிய வெள்ள அனர்த்தத்தை அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதனை தடுக்கும் முகமாக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெள்ள அபாயத்தை குறைக்கும் முகமாக இப் பிரதேசங்களில் மண்ணிட்டு நிரப்புவது தடை செய்யப்பட்டுள்ளது.

தில்லை ஆறு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை அடையாளப்படுத்தி தருமாறு அரச நில அளவை திணைக்களத்திடம் அடையாளமிட்டுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.



மட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழும், நாற்பது (40) வயதுக்கு மேற்பட்ட பிறப்பு சான்றிதழ் அற்றவர்களுக்கு அதனை பெற்றுக் கொள்ளும் நடமாடும் சேவை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் புதன்கிழமை (09) மாங்காடு சமுர்த்தி வலயத்தில் இடம்பெற்ற போது.

(படம்: துறைநீலாவணை நிருபர்)



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருந்து, அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றுச் சென்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.பௌஸின் சேவைநலன் கௌரவிப்பு நிகழ்வு, நிந்தவூர் தோட்டத்தில் இடம்பெற்றது. கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் இடம்பெற்ற இக் கௌரவிப்பில் கல்விப் பணிமனை அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்

(படம்: பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

## அக்கரைப்பற்றில் இரத்ததான முகாம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அஹ்லுஸ் ஸுன்னாஹ் ஜூம்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க, இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் இரத்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13) அக்கரைப்பற்று பிரதான வீதியில் உள்ள "அஹ்லுஸ் ஸுன்னாஹ் ஜூம்ஆ பள்ளிவாசலில் மாபெரும் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## குர்ஆன் விளக்க பயிற்சியில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

திராய்க்கேணி தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார பிரிவினால், புனித ரமழான் மாத குர்ஆன் கற்கையும் அதற்கான விளக்கமும் பயிற்சி நெறியில் பங்குபற்றிய மாணவர்கள், வளவாளர்களுக்கு நினைவுச் சின்னமும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் ராசித் எஹியா தலைமையில் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எம். சித்தி பாத்திமா கலந்து கொண்டார்.



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. 
i. நன்றி, தாவரவுண்ணி, காவல்
ii. நன்றி, காவல், அனைத்துமுண்ணி
iii. நன்றி, மாமிசவுண்ணி, காவல்

2. 

i. 5 ii. 7 iii. 9

3. மூன்று தீக்குச்சிகளை மட்டும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய உரோமன் எண் யாது?
i. IV ii. XI iii. IX

4. 9000 - 1 இதன் பெறுமதி?
i. 8999 ii. 8009 iii. 8099


5. ஒரு வருடத்தில் அடுத்தடுத்து 31 நாட்களைக் கொண்ட மாதங்களின் சரியான விடையைக் கொண்ட சோடி எது?
i. மார்ச், ஏப்ரல் ii. யூன், யூலை iii. யூலை, ஆகஸ்ட்

6. வெற்றிடத்தில் வரவேண்டிய எண்கள் எவை?

| | | |
|---|---|---|
| 5 | 8 | A |
| 4 | B | 6 |
| 1 | 6 | 3 |


i. A = 9, B = 2
ii. A= 9, B = 4
iii. A= 9, B = 8

7. ஒரு புகைவண்டியில் எப்போதும் இருப்பது?
i. சாரதி ii. இருக்கைகள் iii. சில்லுகள்

8. அதிக செங்கோணங்களைக் கொண்ட உரு எது?

i. ii. iii.

9. நீளம் அளத்தலின் மிகப்பெரிய அலகு?
i. Km ii. m iii. cm


10. பின்வருவனவற்றுள் லீப் வருடம் எது?
i. 2010 ii. 2022 iii. 2020

11. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றத்துடன் தென்படும் உருவானது?

i. ii. iii.

12. 160 இன் அரைவாசியுடன் 80 இன் கால்வாசியை கூட்டினால் வரும் விடையானது?
i. 100 ii. 120 iii. 140

13. இது மூன்றெழுத்துச் சொல்லாகும். முதலெழுத்து வீதி என்பதில் உண்டு. விதி என்பதில் இல்லை. இரண்டாவது எழுத்து அரம் என்பதில் உண்டு. அறம் என்பதில் இல்லை. மூன்றாவது எழுத்து அம்பு என்பதில் உண்டு அப்பு என்பதில் இல்லை. அச்சொல் யாது?
i. விலை ii. வீரம் iii. வித்து

14. ஒரு பென்சிலின் விலை ரூபாய் 30.00 எனில் ஆறு பென்சில்கள் வாங்கினால் ஒரு பென்சிலுக்கு ரூபாய் 2.00 குறைத்து தருவதாக கடைக்காரர் கூறினார். சபரி 12 பென்சில்கள் வாங்கினான் எனில் அவன் கடைக்காரருக்கு எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?
i. ரூபாய் 320.00 ii. ரூபாய் 340.00 iii. ரூபாய் 336.00

15. 

i. 1 ii. 2 iii. 3

16. காரில் இருவர் பயணம் செய்தனர். ஒருவர் மற்றையவரின் தந்தை ஆவார். ஆனால் மற்றையவர் தந்தையின் மகன் அல்ல. எனின் மற்றையவர் அவருக்கு என்ன உறவு முறை?
i. தம்பி ii. அண்ணா iii. மகள்

17. "நாம் பிராணிகளை துன்புறுத்தக் கூடாது" இக்கூற்றின் உண்மையான கருத்தாவது?
i. பிராணிகள் எமக்கு உதவுகின்றன
ii. உயிர்களை துன்புறுத்துதல் பாவச் செயலாகும்
iii. பிராணிகள் எமக்கு உணவு கொடுக்கின்றன

18. 490, 493, 491 இவ்வெண்களில் எதை மூன்றால் வகுத்தால் மிகுதியாக 2 ஆம் இலக்கம் வரும்?
i. 491 ii. 490 iii. 493


19. சிவப்பு, மஞ்சள், நீலம் என்ற ஒழுங்கில் 31 முத்துக்கள் கோர்க்கப்பட்ட ஒரு மாலையில் நடுவில் வரும் முத்து என்ன நிறம்?
i. சிவப்பு ii. மஞ்சள் iii. நீலம்


20. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எனில் நாளை மறுநாள் என்ன கிழமை?
i. திங்கள் ii. செவ்வாய் iii. புதன்

21. நல்லோர் தீயோர் எனில் வெந்நீர் -
i. தண்ணீர் ii. நன்னீர் iii. உவர்நீர்

22. 
இம்முகம் குறிக்கும் உணர்வானது?
i. மகிழ்ச்சி
ii. பயம்
iii. கவலை

23. 2m நாடாவை 4 சமபங்குகளாக வெட்டினால் ஒரு துண்டின் நீளம் யாது?
i. 30 cm ii. 50 cm iii. 50 m

24. 
இப்படத்தில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்கு?
i. 4/12
ii. 6/12
iii. 3/12

25. 

i. 8 ii. 9 iii. 6

26. மாதமொன்றின் முதலாம் திகதி புதன்கிழமை எனில் அம்மாதத்தின் 30ஆம் திகதி என்ன கிழமை?
i. வியாழக்கிழமை ii. வெள்ளிக்கிழமை iii. சனிக்கிழமை

27. 847, 736, 625, ……….. அடுத்து வரும் எண் யாது?
i. 265 ii. 514 iii. 523

28. ரித்திக்கு 8 வயது இருக்கும் போது ஜனிசாவுக்கு 12 வயது எனில் ரித்திக்கு 12 வயது ஆகும் போது ஜனிசாவின் வயது என்ன?
i. 8 ii. 12 iii. 16

29. சம இடைவெளிகளில் நடப்பட்ட இரண்டு தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் 22 m எனில் 6 தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு?
i. 132 m ii. 110 m iii. 120 m

30. முப்பதாவது ஒற்றை எண் யாது?
i. 31 ii. 57 iii. 59

| H 2 O 6 N I 3 E 5 W 9 X 7 T |
|---|

31. மேலே கூட்டினுள் உள்ள ஆங்கில எழுத்துக்களை மட்டும் வைத்து ஆக்கப்பட்ட சொல்லானது?
i. HOUSE ii. WHITE iii. HORSE

32. மேலே கூட்டினுள் உள்ள ஒற்றை எண்களில் மிகப்பெரிய இலக்கத்தினதும் மிகச்சிறிய இலக்கத்தினதும் கூட்டுத்தொகை?
i. 10 ii. 11 iii. 12


33. மேலே கூட்டினுள் உள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகைக்கும் இரட்டை எண்களின் கூட்டுத்தொகைக்கும் இடையேயான வித்தியாசம் எவ்வளவு?
i. 16 ii. 18 iii. 24

34. சஸ்வின் கடைக்குச் சென்று 3kg சீனியும் 2kg மாவும் வாங்கினான். அவன் செலவு செய்த மொத்த பணம் ரூபாய் 1170.00. அங்கு 1kg மாவின் விலை ரூபாய் 210.00 எனில், அவன் வாங்கிய 3 kg சீனியின் விலை என்ன?
i. ரூபாய் 770.00 ii. ரூபாய் 750.00 iii. ரூபாய் 700.00

35. எதிர் எதிர் பக்கங்கள் மட்டுமே சமமாகவுள்ள முப்பரிமாண பிம்பம் ஒன்றின் பெயர் என்ன?
i. சதுரமுகி ii. செவ்வகம் iii. கனவுரு

36. 5 மனிதர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு 5 மணித்தியாலங்கள் நடந்து 25 km தூரம் சென்றனர். எனவே ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் நடந்த தூரம் எவ்வளவு?
i. 1 km ii. 5 km iii. 25 km

37. 3339 இதனை எண் பெயராக எழுதினால்
i. மூவாயிரத்து முன்னூற்று முப்பத்தொன்பது
ii. மூவாயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது
iii. மூவாயிரத்து முண்ணூற்று முப்பத்தொன்பது

38. 
இத்திண்ம உருவை புள்ளிக் கோட்டின் வழியே வெட்டினால் பெறப்படும் முகத்தின் வடிவம் யாது?
i. அரைவட்டம்
ii. சதுரம்
iii. வட்டம்

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

39.

| | | | |
|---|---|---|---|
| 2 | 36 | 3 | |
| | 4 | 64 | 2 |
| | | 3 | ? | 3 |

i. 9 ii. 81 iii. 27

40. 4040 இனிப்புகளை ஒரு பிள்ளைக்கு 8 வீதம் எத்தனை பிள்ளைகளுக்கு வழங்க முடியும்?

i. 505 ii. 500 iii. 455

## கடந்த வார (04.08.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

**I.**

1. தண்ணீர் குடிக்க
2. குளக்கரை
3. கால்
4. புள்ளிமான் எறும்புக்கு
5. தண்மை + நீர்
6. மான், எறும்பு

**II.**

7. 1. உளி 3. சீமாட்டி 5. கண் 6. களைப்பு 9. அடுப்பு
8. 1. உலகம் 2. ஆடி 4. மாதுளை 7. புதன் 8. உடு

**III.**

9. எனக்கு நல்ல காலம் பிறக்கும்
10. நான் நாளை கண்டி செல்வேன்
11. i. கிணற்று நீர் ii. வானொலி
    iii. புளியங்காய் iv. பூப்பாத்தி
12. i. இலங்கை போக்குவரத்து சபை
    ii. மறு பக்கம் பார்க்க
13. i. இறைவி ii. வீராங்கனை
14. மணி விழா / வைர விழா
15. i. கன்று ii. குஞ்சு
16. i. அலறும் ii. கத்தும்
17. i. பாம்பு / சத்தம்
    ii. நூல் / பனுவல்
18. i. தாழ்வு ii. பகை
19. i. இது எவ்வளவு?
    ii. உங்களிடம் பென்சில் இருக்கிறதா?
20. i. கெசெல்கெடி ii. லேனா

**IV.**

21. 41548, 42548, 61424, 64124
22. i. XII ii. XI
23. 320
24. i. 820 cm ii. 704 cm
25. i. கூம்பு ii. வட்டம்
26. ரூபாய் 550.00
27. 6/12 அல்லது ½ பங்கு
28. 4.45
29. எண்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தெட்டு

**V.**

30. 1
31. 2
32. 1
33. 1
34. 3
35. 2
36. 2
37. 3
38. 2
39. 1
40. 3
41. 1
42. 3
43. 3
44. 3
45. 1
46. 2
47. 1
48. 2
49. 3
50. 3
51. 3
52. 1
53. 3
54. 1
55. 2
56. 2
57. 3
58. 3
59. 1

# நகர்வலம்

பாரம்பரியம் நிகழ்ச்சியில்

## இம்முறை சோனக இஸ்லாமிய கலாசார நிலைய பங்களிப்பு




முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்து புகழ் சேர்த்தோர் வரிசையில் மூத்த உலமாக்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களை அடையாளப்படுத்தி வந்த பாரம்பரியம் தொடர் நிகழ்ச்சி, இம்முறை, அல்ஹாஜ் சேர். ராஸிக் பரீத் அவர்களதும், இன்னும் அவர் ஸ்தாபித்த "சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்" அமைப்பின் ஊடாகவும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் வழங்கிய பங்களிப்புகளின் நினைவுகள் பரிமாறப்பட இருக்கின்றன.

இந்நிகழ்ச்சி எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணிக்கு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகவுள்ளது.

இது பற்றிய தகவல்களை இலங்கை வானொலி அறிவிப்பாளரும், முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட கலைஞரும், வானொலி நாடக எழுத்தாளருமான கலாநிதி எம்.சீ. ரஸ்மின் நேயர்களோடு பகிர்ந்து கொள்கிறார். நிகழ்ச்சியை முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்க, எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்கிறார்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

## நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் புதிய வேலைத்திட்டம் முன்னெடுப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**



அநுராதபுரம் மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மீன் குஞ்சுகள் மற்றும் நன்னீர் இறால் குஞ்சுகளை நீர்த்தேக்கங்களில் விடுவிக்கும் நடவடிக்கைகள் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன. இதற்காக பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன.

அநுராதபுரம் மாவட்டத்தின் 11 பெரிய நீர்த்தேக்கங்களில் மாத்திரம் இவ் ஆண்டு 17 இலட்சத்துக்கும் அதிகமான மீன் குஞ்சுகளும் சுமார் 47 இலட்சம் நன்னீர் இறால் குஞ்சுகளும் அந்த நீர்த்தேக்கங்களில் விடப்பட்டுள்ளன. நடுத்தர அளவிலான நீர்த் தேக்கங்களில் கிட்டத்தட்ட 08 இலட்சம் மீன் குஞ்சுகளும், 03 இலட்சத்துக்கும் அதிகமான நன்னீர் இறால் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன. சிறிய அளவிலான நீர்த்தேக்கங்களில் சுமார் 07 இலட்சம் மீன் குஞ்சுகளும், சுமார் 05 இலட்சம் நன்னீர் இறால் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன. அத்துடன் அநுராதபுர மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தி இவ்வருடம் 6,927 மெற்றிக் தொன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, மாவட்டத்தின் விவசாயத் துறையை மேம்படுத்த பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம், குளங்கள் சீரமைப்பு பணிகள் பற்றியும் அண்மையில் அநுராதபுரத்தில் நடந்த விவசாயக் குழுக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் அநுராதபுரம் மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி சந்தியா அபேசேகர, மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்கள், மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி லலிதா தேனுவர, விவசாய துறை சார்ந்த அனைத்து நிறுவனங்களையும் பிரதி நிதித்துவப் படுத்தும் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் குழுவினரும் இதில் கலந்து கொண்டனர்.

## கர்ப்பமுற்றிருந்த நிலையில் யானை சுட்டுக்கொலை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் பழுகஸ்வெவ பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட பெல்லன்கடவல பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கர்ப்பிணி யானையின் வயிற்றிலிருந்து பெண் யானை குட்டியொன்று பிறக்கும் நிலையில் இறந்து காணப்பட்டதாக கால்நடை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கனேவல்பொல வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகம் வழங்கிய தகவல் ஒன்றிற்கமைய அநுராதபுரம் பண்டுலகம வனவிலங்கு பரிசோதனை கால்நடை வைத்தியர்களான உதேசிகா மதுவந்தி மற்றும் சந்தன ஜயசிங்க உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் (09) மாலை அங்கு விஜயம் செய்து பிரேத பரிசோதனை மேற்கொண்டனர். சுட்டுக்கொல்லப்பட்ட 25 வயதுடைய குறித்த யானை கர்ப்பிணி நிலையை அடைவதற்கிருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## சீனன்கோட்டையில் 'வேர்கள்' நூலின் வெளியீட்டு விழா

பேருவளை நகர சபை முன்னாள் நகரபிதா ஐ.எல்.எம். யூஸுப் பற்றியும் அவர் வாழ்ந்த சீனன் கோட்டை ஊர் பற்றிய வரலாற்று குறிப்புகளையும் உள்ளடக்கி அன்னாரது புதல்வர் அஷ்ரப் யூஸுபினால் எழுதப்பட்டுள்ள "வேர்கள்" எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

நூலின் ஆசிரியர் அஷ்ரப் யூஸுபின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தின் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். முக்தார் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அல்ஹாஜ் ஏ.எம். ஹனபி, பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூலின் அறிமுக உரையை அரும்பு சஞ்சிகையின் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீனும் புத்தக விமர்சன உரையை ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் ( நளீமி, எம்.ஏ) ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

தென் மாகாண இ.போ.ச டிப்போக்களில்

## சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறை; சேவைகள் பாதிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**



தென் மாகாணத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 11 பஸ் டிப்போக்களில் 70 பஸ் சாரதிகள் மற்றும் 80 பஸ் நடத்துனர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக இ.போ. சபை றுகுணு பிரதேச முகாமையாளர் ஆர்.வி. பிரபாத் குமார தெரிவித்தார்.

இதனால் கிராமப்புற வீதிகள் மற்றும் ஏனைய வீதிகளில் குறிப்பிட்ட நேர அட்டவணையின் பிரகாரம் பஸ் வண்டிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்த முடியாமலுள்ளதாகவும் இது விடயமாக பிரதான அலுவலகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்த மேலும் 42 புதிய பஸ் வண்டிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவை கிராமப்புற வீதிகளில் போக்குவரத்துக்காக விடப்படவுள்ளதாகவும் முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

தினமும் 450 பஸ் சேவைகள் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதால், இவர்களின் பற்றாக்குறையால் சபைக்கு கிடைக்கின்ற வருமானமும் இல்லாமல் போவதாக முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

## ஹம்பாந்தோட்டை இக்ராவின் இரு மாணவிகள் தெரிவு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**




ஹம்பாந்தோட்டை வலய அகில இலங்கை ஆங்கில மொழித் தின போட்டியில் (ஆரம்பப் பிரிவில்) கலந்துகொண்ட ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலய மாணவர்களில் இரு மாணவிகள் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளதோடு அவர்கள் இருவரும் தென் மாகாண போட்டியில் கலந்து கொள்வதற்கு தகுதிபெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இவர்களில் கவிதை போட்டியில் தரம் மூன்றில் அலிஸா பின்தி ரிஸ்மி முதலாம் இடத்தினையும் தரம் நான்கில் எம். ஐ. சுஹாமிஸால் மூன்றாவது இடத்தினையும் பெற்றுள்ளனர். கையெழுத்து ஆக்கப் போட்டியில் தரம் நான்கில் எம். ஐ. எப். செஸா இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளார்.

இவர்களில் அலிஸா பின்தி ரிஸ்மி மற்றும் எம். ஐ. எப். செஸா ஆகிய இரு மாணவிகளும் நாளை 12 ஆம் திகதி மாத்தறை புனித தோமஸ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள தென் மாகாண போட்டியில் ஹம்பாந்தோட்டை வலயத்தின் சார்பாக கலந்துகொள்ளவுள்ளமை விசேட அம்சமாகும்.

## கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

பல்வேறுபட்ட பாரிய கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை மஹவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த பல முறைப்பாடுகள் தொடர்பில் பல கோணங்களிலும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய 08 ஆம் திகதி மாலை சந்தேக நபர்கள் களை கைது செய்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள்கள் மூன்றினையும் நீர் இறைக்கும் மின்சார நீர் பம்பிகள் ஏழு வாகன பட்டரிகள் உள்ளிட்ட பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23, 48 வயதுடைய மஹவ, ஹெட்டிபொல, பலல்ல பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## 'ஹிஜ்ரத்' இஸ்லாமிய புதுவருட கவியரங்கம் கொழும்பில்

இஸ்லாமிய புது வருடத்தை முன்னிட்டு நடாத்தப்படும் விசேட கவியரங்கம் "ஹிஜ்ரத்" தேசிய சூரா சபையின் பொதுச் செயலாளர், சிரேஷ்ட சட்டத்தரணி கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி கொழும்பு பிராந்தியம், தாருல் ஈமான் இலக்கிய வட்டத்துடன் இணைந்து நடாத்தும் இச்சிறப்புக் கவியரங்கம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை (15) மாலை 6.45 மணிக்கு, கொழும்பு, தெமட்டகொட "தாருல்ஈமான்" கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மனித வரலாற்றில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்திய 'ஹிஜ்ரத்' நிகழ்வினை நினைவு கூரும் இந்த சிறப்புக் கவியரங்கத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் தலைமையில் தலைநகரிலிருந்து கவிஞர் ரவூப் ஹஸீர், பாணந்துறையிலிருந்து கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், ரஜரட்டையிலிருந்து கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், புத்தளம் மண்ணிலிருந்து கவிஞர் மரிக்கார் ஆகிய பிரபல கவிஞர்கள் கவிமழை பொழியக் காத்திருக்கிறார்கள்.

ஆர்வமுள்ள அனைவரையும் இக்கவியரங்கில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

பாணந்துறை பிரதேச சபையின் பொது நூலக பணியாட்கள் குழாம் நூலக வாசகர் வட்டத்தினரின் ஒத்துழைப்புடன் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி உள்ளிட்ட ஒருதொகை பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

பிரதேச சபையின் ஹிரண நூலக சமூக ஆர்வலர்களான உறுப்பினர்களின் முயற்சியினால் இந்த சிறப்பு சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சக்கர நாற்காலி மற்றும் உபகரணங்கள் நூலக பிரதிநிதிகளினால் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.



# இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு / இலங்கை புகையிரத சேவைகள்**
**புகையிரத வினைத்திறனை மேம்படுத்தல் செயற்றிட்டம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு இயைபான திருத்தம்

கடனிலக்கம் : 3806 SRI
ஒப்பந்த இல. : REIP/ADB/ICB/W/02-2

இரத்மலானை டீசல் வலுசக்தி தொகுதி (Powerset) தொழிற்சாலையை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதற்கான பெறுகை 2023-07-04ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| விபரம் | முன்பு குறிப்பிடப்பட்ட திகதி | திருத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| Section 2<br>ITB 22-1 - விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் | 2023-08-18<br>நேரம் பி.ப. 2.00 | 2023-09-01<br>நேரம் பி.ப. 2.00 |
| ITB 25-1 - தொழில்நுட்ப விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2023-08-18<br>நேரம் பி.ப. 2.00 | 2023-09-01<br>நேரம் பி.ப. 2.00 |

| | பிரதான செயற்பாட்டிற்கான நிர்மாண அனுபவம் (2.4.2) | |
|---|---|---|
| | முன்பு குறிப்பிடப்பட்ட அனுபவம் (ஆறாவது அத்தியாயம்) | திருத்தப்பட்ட அனுபவம் (ஆறாவது அத்தியாயம்) |
| பந்தி இல. 4(iii) அட்டவணை | செயற்றிட்டமொன்றில் ஒத்திசைவு பெனல் (Synchronized Pannel) சகிதம் இரண்டு 200 KVA மின்பிறப்பாக்கி இயந்திரங்களை பொருத்தியிருக்கும் அனுபவம் | செயற்றிட்டமொன்றில் இரண்டு 200 KVA மின்பிறப்பாக்கி இயந்திரங்களை பொருத்தியிருக்கும் அனுபவம் |

* அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளில் எவ்வித திருத்தங்களும் இல்லை.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**பிரதான கணக்காளர் ஊடாக,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ஆம் மாடி, செத்சிறிபாய கட்டம் II,**
**பத்தரமுல்ல, இலங்கை.**
2023-08-11.

### வழக்குத் தொடுத்தல் தொடர்பான அறிவித்தல்

பவிவேகாராம தியான நிலைய நலன்புரிச் சங்கம் மற்றும் அதன் பொறுப்பாளர் சபையின் சார்பில் கல்கிசை விதுரானி சில்மாதாவ, மருத்துவர் திலக் நிஷாந்த செட்டிநாயக்க மற்றும் ருவன் இரேஷ வீரரத்ன என்பவர்களை முறைப்பாட்டாளர்களாகக் கொண்டு அந்த முறைப்பாட்டின் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள காணியை உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. டீ. குணசேக்கர அவர்களின் 2714ஆம் இலக்க காணித்துண்டில் உள்ள ஹேகல்லவத்த எனும் காணி தொடர்பில் ஹொரண மாவட்ட நீதிமன்றத்தில் இல. 4002/ விசேட வழக்கு தொடுக்கப்பட்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவை அதன் பிரதிவாதியாக பெயர் குறிப்பிட்டு நடாத்திக் கொண்டு செல்வதாக அந்தச் சங்கத்தின் சகல அங்கத்தவர்கள் மற்றும் சகல பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**Repeat Your Ad For Better Offers**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு**

**SUPPLY OF FLOATING, HOSES & UNDERBUOY HOSES WITH ACCESSORIES**
**B/21/2023**

Floating Hoses & Underbuoy Hoses துணைப்பாகங்களுடன் வழங்குவதற்காக சர்வதேச நம்பகமான Marine Hose உற்பத்தியாளரின் அல்லது வெளிநாட்டில் அவர்களது அங்கீகாரம் பெற்ற ஏற்றுமதி முகவர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் (MPC) அழைக்கின்றார். ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 50,000.00 (ரூ. 42.417.82 + 2.5% SSCL + 15% VAT) அல்லது அதற்கு சமமான தொகையில் USD அல்லது Euro அல்லது CPC இற்கு GBP ஒவ்வொரு தொகுதிக்கும் செலுத்துவதன் பேரில் மற்றும் ஒரு எழுத்து மூல வேண்டுதல் மூலம் கொழும்பு-09, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, இல. 609, 1ம் மாடி இலங்கைப் பெற்றோலில் கூட்டுத்தாபனம், முகாமையாளர் (களஞ்சியம் மற்றும் பெறுகை) அலுவலகத்திலிருந்து 2023.09.22 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லது CPC இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

http://ceypetco.gov.lk/public-tenders/..

ஆவணங்களை பதிவிறக்கம் செய்த சர்வதேச விலைமனுதாரர்கள் கீழ்க்காணுமாறு ஆவணக்கட்டணங்களை செலுத்துதல் வேண்டும். அத்துடன் விலைமனுவுடன் கட்டண பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

கணக்கின் பெயர் : இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
கணக்கு இலக்கம் : 004-1-001-1-0208633
வங்கி : மக்கள், கோப்பரேட் வங்கிப் பிரிவு, ANCL கட்டிடம், இல. 34, D.R. விஜேவர்தன மாவத்த, கொழும்பு-10. இலங்கை.
வங்கி குறியீடு - 7135
கிளை குறியீடு - 004
Swift Code - PSBKL KL

விலைமனுக்கள் 2023.09.25ம் திகதி 14.00 மணிக்கு மூடப்படும். அத்துடன் கீழே உள்ள முகவரியில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற 1987ம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் உத்தேச விலைமனுதாரர் https://eroc.drc.gov.lk/ இணையதளப் ஊடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்களது விலைமனுவுடன் PCA 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) தொ.பே. இல. 011-5455331 அல்லது மின்னஞ்சல் : supplies@ceypetco.gov.lk இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்)**
**பெறுகை மற்றும் களஞ்சியம் செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த,**
**கொழும்பு-09, இலங்கை.**
**தொ.பே. : 0094-11-5455331**
**பெக்ஸ் : 0094-11-5455424**




## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான**

### பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம் : 302500001416 மற்றும் 302521000133**
**கடனாளியின் முழுப் பெயர் : காரியவசம் தொன் வசந்த வீரசிங்ஹ மற்றும் மெஹெரம்பகே சிவங்கனீ தி சில்வா**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.03.31ஆம் திகதி 2326 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2023.03.31ஆம் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ. கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2023.09.26ஆம் திகதி மு.ப 10.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி காலி கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 2810 ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, தொண்ணூற்று மூன்று இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து நானூற்று அறுபத்து ஒரு ரூபா எழுபத்து ஏழு சதம் (ரூபா 9,326,461.77), 2023.01.31 ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1) **கடன் தொகை 302500001416**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து இருநூற்று அறுபத்து ஆறு ரூபா தொன்னூற்று ஐந்து சதம் (6,727,266.95) 2023.01.31ஆம் திகதி வரையிலான நிலுவையாக பதினாறு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து நாநூற்று எண்பத்து இரண்டு ரூபா எண்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 1,671,482.83) இதன்படி 2023.01.31 மெத்தமாக எண்பத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஒன்பது ரூபா எழுபத்து எட்டு சதத்தியுமைம் (ரூபா 8,398,749.78)

**இரண்டாவது கடன் தொகை 302521000133**

2810 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான எட்டு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டு ரூபா எழுபத்து மூன்று சதத்தினையும் (ரூபா 826,958.73), 2023.01.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள ஒரு இலட்சத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று ரூபா இருபத்து ஆறு சதத்தினையும் (ரூபா 100,753.26) இதன்படி முழுத் தொகையான ஒன்பது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து எழுநூற்று பதின் ஒரு ரூபா தொன்னூற்று ஒன்பது சதத்தினையும் (ரூபா 927,711.99)

2) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து இருநூற்று அறுபத்து ஆறு ரூபா தொன்னூற்று ஐந்து சதத்திற்காக (ரூபா 6,727,266.95) அறவிட வேண்டிய 16.81% வீத வருடாந்த வட்டியினையும் மற்றும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான எட்டு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டு ரூபா எழுபத்து மூன்று சதத்தினையும் (ரூபா 826,958.73) அறவிட வேண்டிய 8.84% வீத வருடாந்த வட்டியினையும் 2023.02.01 ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,

3) 2023.02.01 திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை(அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான பதினைந்து இலட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து இருநூற்று முப்பத்து இரண்டு ரூபா எண்பது சதத்தினையும் ரூபா 1,594,232.80) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,

4) 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 302500001416 மற்றும் 302521000133**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில்,இலக்கம் 119 போபே மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் காலி கடவத்சத்தரயில், காலி கடவத்சத்தர பிரதேச செயலாளர் பிரிவில், மற்றும் காலி நகரசபை எல்லையில், போபே கிராமத்தில் அமைந்துள்ள சேரசிங்ஹவத்த எனப்படும் காணிக்கு 2019 ஆகஸ்ட் 25 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ம.விதானகமச்சி என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2566 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே 11 ஆம் இலக்க காணித்துண்டும் வரிமதிப்பீட்டிலக்கம் 126/11 கிழக்கே 15 ஆம் இலக்க காணித்துண்டும் ( பிரவேச பாதை) தெற்கே 15 ஆம் இலக்க காணித்துண்டும் ( பிரவேச பாதை) மற்றும் 18 ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே 13 ஆம் இலக்க காணித்துண்டும் (பிரவேச பாதை) மற்றும் சேரசிங்ஹவத்த (PPA855/108) அமைந்து காணப்படுகின்றன. காணிவரைபடம் 2566 ன்படி இதன் பரப்பளவு பத்து தசம் இரண்டு ஏழு பேச்சஸ்களாகும். (ஏக்.0 றூட் 0 பேச் 10.27) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஆறு பூச்சியம் (0.0260) ஹெக்டயர்களாகும். இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கும்.

மேற்குறிப்பிட்ட 01ஆம் இலக்க காணித்துண்டு பின்வரும் விதமாக மீள அளந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட போபே கிராமத்தில் அமைந்துள்ள சேரசிங்ஹவத்த என்ற காணி நிலஅளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட ஆரம்ப காணிவரைபடம் GA2871 ல் குறிப்பிடப்பட்டுள்ள 14ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக

வடக்கே 11ஆம் இலக்க காணித்துண்டும் கிழக்கே 15ஆம் இலக்க காணித்துண்டும் தெற்கே 15ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் 18ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே 13ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் சேரசிங்ஹவத்தையும் அமைந்து காணப்படுகின்றன. ஆரம்ப காணிவரைபட இலக்கம் GA 2871 ன்படி இதன் பரப்பளவு பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஆறு பூச்சியம் (0.0260) ஹெக்டயர்களாகும். இக் காணித்துண்டு P.P GA 2871 என்ற காணி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைக்கான உரிமையுடன் காலி மாவட்ட காணிப்பதிவு காரியாலயத்தில் Q.176/140 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**

**இ.வீ.அ.நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர். சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085,**
**கொழும்பு 02.**




## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான**

### பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம் : 702725000071 மற்றும் 702725000104**
**கடனாளியின் முழுப்பெயர் : வீரவர்ண குலசூரியகே சுமுது பிரியந்த குலசூரிய**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2020.11.13 ஆம் திகதி 2202 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக் சோஷலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2020.11.11 ஆம் திகதி "மவ்பிம", "தினக்குரல்" மற்றும் "சிலோன் டுடே" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவரினால் 2023.09.16 ஆம் திகதி பி.ப.12.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி பொலநறுவைக் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 3285 மற்றும் 3476 ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, எழுபத்து இரண்டு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஐந்து ரூபா எட்டு சதம் (ரூபா 7,271,855.08), 2020.09.30 ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**(01) முதலாவது கடன் தொகை 702725000071**

3285 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இருபத்து ஏழு இலட்சத்து பதினைந்தாயிரத்து ஐநூற்று எழுபத்து ஆறு ரூபா ஐம்பது சதத்தினையும் (ரூபா 2,715,576.50), 2020.09.30 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள பதினேழு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து எழுநூற்று எண்பத்து எட்டு ரூபா தொண்ணூற்று ஒரு சதத்தினையும் (ரூபா 1,737,788.91) இதன்படி முழுத் தொகையான நாற்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து ஐந்து ரூபா நாற்பத்து ஒரு சதத்தினையும் (ரூபா 4,453,365.41) அறவீடு செய்வதற்கும்.

**இரண்டாவது கடன் தொகை 702725000104**

**3476 ஆம் இலக்க அடகுப்பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான பதினாறு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எழுநூற்று ஆறு ரூபா நாற்பத்து ஏழு சதத்தினையும் (ரூபா. 1,694,706.47), 2020.09.30ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள பதினொரு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று ரூபா இருபது சதத்தினையும் (ரூபா.1,123,783.20) இதன்படி முழுத் தொகையான இருபத்து எட்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து நாநூற்று எண்பத்து ஒன்பது ரூபா அறுபத்து ஏழு சதத்தினையும் (ரூபா. 2,818,489.67) இதன்படி மொத்த கூட்டுத்தொகையை, எழுபத்து இரண்டு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஐந்து ரூபா எட்டு சதத்தினையும் (ரூபா.7,271,855.08) அறவீடு செய்வதற்கும்,**

**(02) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான இருபத்து ஏழு இலட்சத்து பதினைந்தாயிரத்து ஐநூற்று எழுபத்து ஆறு ரூபா ஐம்பது சதத்திற்காக (ரூபா. 2,715,576.50) அறவிட வேண்டிய 17.50% வீத வருடாந்த வட்டியினையும் மற்றும் இரண்டாவது கடன்தொனையில் மீளச் செலுத்தாத தொகையான பதினாறு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எழுநாற்று ஆறு ரூபா நாற்பத்து ஏழு சதத்திற்காக (ரூபா.1,694,706.47) அறவிட வேண்டிய 17.50% வீத வருடாந்த வட்டியினையும் 2020.10.01ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,**

**(03) 2020.10.01 ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட மொத்த நிலுவைத் தொகையான இருபத்து எட்டு இலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து நூற்று எழுபத்து ஒரு ரூபா தொண்ணூற்று ஒரு சதத்திற்காக (ரூபா. 2,836,171.91) மாதாந்தம் 1.50% வீத தாமத வட்டி ஒன்றினை ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,**

**(04) 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.**

**கடன் இலக்கம்: 702725000071 மற்றும் 702725000104**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

**வடமத்திய மாகாணத்தில், பொலன்நறுவை மாவட்டத்தில், எகொட பத்துவில், வெலிகந்த பிரதேச சபை எல்லையில் மற்றும் வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம்: 262 மஹவெவ கிராம உத்தியோகத்தார் பிரிவில், மஹவெவ கிராமத்தில் அமைந்துள்ள மகாவெவலே எனப்படும் காணிக்கு 2017.02.28ஆம் திகதி, அனுமதி பெற்ற நிள அளவையாளர் டப்ளியூ.டப்ளியூ.எல்.எல்.காமினி என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2365ஆம் இலக்க காணி வரைபடத்தின் படி, 1ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக, வடக்கே: இ.கு.கா.பொ 539 என்ற காணி வரைபடத்தின் படி, 3 மற்றும் 18 ஆம் இலக்க காணித்துண்டுகளும், கிழக்கே: இ.கு.கா.பொ 539 என்ற காணி வரைபடத்தின்படி 18 மற்றும் 07 ஆம் இலக்க காணித்துண்டுகளும், தெற்கே: இ.கு.கா.பொ 539 என்ற காணி வரைபடத்தின்படி 7 மற்றும் 20 ஆம் இலக்க காணித்துண்டுகளும், மேற்கே :இ.கு.கா.பொ 539 என்ற காணி வரைபடத்தின்படி 20 மற்றும் 3 ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இரண்டு ஷரூட் முப்பது தசம் மூன்று ஐந்து பேர்ச்சஸ்களாகும் (ஏக்0- ரூட்2- பேச்30.35) அல்லது பூச்சியம் தசம் இரண்டு ஏழு ஒன்பது ஒன்று ஹெக்டயார் (ஹெக் 0.2791) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்துடன்.**

**மேற்குறிப்பிடப்பட்ட 01ஆம் இலக்க காணித்துண்டு கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சமமானதாகும்.**

**மேற்குறிப்பிடப்பட்ட எல்லையினுள் மஹவெவ கிராமத்தில் அமைந்துள்ள நிளஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவரது பொறுப்பில் உள்ள இலக்கம்: இ.கு.கா.பொ 539/1/1 என்ற காணி வரைபடத்தின்படி 19 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக: வடக்கே: 3 மற்றும் 18 ஆம் இலக்க காணித்துண்டுகளும், கிழக்கே: 18 மற்றும் 07 ஆம் இலக்க காணித்துண்டுகளும், தெற்கே: 7 மற்றும் 20 ஆம் இலக்க காணித்துண்டுகளும், மேற்கே: 20 மற்றும் 3ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பூச்சியம் தசம் இரண்டு ஏழு ஒன்பது ஒன்று ஹெக்டயார்காளகும். (ஹெக் 0.2791) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்துடன் பொலன்நறுவை காணிப்பதிவுசெய்யும் காரியாலயத்தில் LDO/H/21/56 என்ற பின் ரீழ் பருவசெய்யப்பட்டுள்ளது.**

இந்த காணி இலக்கம் 8)/ā/p/9/3169 (@D)a ) என்ற அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (அதிகாரம் 464) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் பாதுகாப்பு ஷ ரத்து மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப வங்கிக்கு அடகு வைப்பதற்காக இலங்கை மகாவலி அதிகாரசபையின் B வலயத்தில் பிரதி வதிவிட வியாபார முகாமையாளரினால்(காணி) முன்அனுமதி அவரது இலக்கம் X/X/3/8/16 என்ற 2017.02.22 ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

**ஒதுக்கல் ஷரத்துக்கள் (வேறாக்கல்)**

1. காணியில் அல்லது அதனகத்தே காணப்படும் அனைத்து கனிய வளங்களின் (இந்தப் பதத்தின் மூலம் இங்குள்ள பெறுமதிமிக்க மாணிக்க கற்களும் உள்ளடக்கப்படும்.) உரிமை, மற்றும் அகழ்வு, தேடுதல், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் அவ்வாறான கனியவழங்கலை வெளியில் எடுத்துச் செல்வதற்குமான உரிமை அரசிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
2. காணிக்கான உரித்து தொடர்பில் காணியின் உரிமையாளர் என்றவகையில் காணப்படும் உரிமையானது இந்த உரிமையுடன் காணி மீதுள்ள அளிப்பு இடம்பெறும் திகதியில் காணி மீது காணப்படும் பாதைக்கான உரிமைகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கும்.

**நிபந்தனைகள்**

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த உப பிரிவுகளாக பிரிக்கப்படும் அலகுகள், அதாவது உயர்நிலம் ஹெக்டயர் 0.100 க்கு அல்லது நீர்ப்பாசன வசதியுள்ள காணிகள் ஹெக்டயர் /ஏக்கர் க்கு குறைவான அளவு கொண்ட இந்த காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட துண்டுகள் / உரிமையாளரினால் விற்பனை செய்யக் கூடாது.
2. இங்கு குறிப்பிடப்பட்ட குறைந்த அளவினைவிட, அதாவது ஹெக்டயர் 0.100 அளவினை விட குறைவாக குறிப்பிட்ட காணி துண்டாடப்பட்டு உரிமையாளரினால் பிறருக்கு வழங்க முடியாது.
3. எந்த ஒருவரும் 1 ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துண்டின் உரிமையாளராக இருக்க முடியாது.
4. எந்த ஒருவரும் 2ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்படாத ஒரு காணித்துன்டின் உரிமையாளராக இருக்க முடியாது.
5. காணிக்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு துண்டிற்கு நீர் வழங்க முடியுமாயின், அல்லது ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் நீர்ப்பாசன நடவடிக்கைக்கான நிர்மாணப்பணி அல்லது நிர்மாணிக்கப்படவுள்ள ஒரு விடயம் காரணமாக நீரினை வழங்க முடியுமாயின் அல்லது அந்த நீர் வழங்கலை மேற்கொள்ள சாத்தியமான பிரதேசம் சம்பந்தமாக உரிமையாளர் (453 ஆவது அத்தியாயம்) நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப செயற்பட வேண்டும்.
6. அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதியுடன் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து உரிமம் பெறாது அந்த காணியின் மீது அல்லது அதன் அகத்தே காணப்படும் எந்த ஒரு கனிய வளங்களையும் அகழ்தல், தேடுதல் அல்லது உபயோகித்தல் போன்ற நடவடிக்கைகள் ஈடுபடுவது அல்லது வேறுவகைகளில் வெளியேற்றுவது உரிமையாளரினால் தவிர்க்கப்பட வேண்டும்.
7. பிரதேச செயலாளரின் முன் அனுமதியினை எழுத்து மூலமாக பெற்றுக் கொள்ளாது காணியினையோ அதில் உள்ள எந்த ஒரு பகுதியினையோ விற்பனை செய்யக்கூடாது

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**

**இ.வீ.அ.நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085,**
**கொழும்பு 02.**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

## மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் அடகுப் பிரதிநிதிகளான வரையறுக்கப்பட்ட பண்டாரவளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கீழ்க்காணும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2021.07.01 முதல் 2022.03.31 வரையான காலத்திற்கு அடகு வைக்கப்பட்டு எனினும் மீட்கப்படாத (அத்தினம் உற்பட) தங்க நகைகள், 2023.08.26, 27ம் திகதிகளில் மு.ப. 9.00 இற்கு நகர கிராமிய வங்கி வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

- பணடாரவளை நகர கிராமிய வங்கி
- அமுனுதோவ கிராமிய வங்கி
- திகனதென்ன கிராமிய வங்கி
- பிந்துனுவெவ கிராமிய வங்கி
- ஹில்ஒய கிராமிய வங்கி
- லியன்த கிராமிய வங்கி
- கும்பல்வெவ கிராமிய வங்கி
- தெமோதர கிராமிய வங்கி
- அம்பதண்டேகம கிராமிய வங்கி
- ஐஸ்லெப் கிராமிய வங்கி
- எல்ல கிராமிய வங்கி
- பல்லகொட்டுவ கிராமிய வங்கி
- கஹத்தேவல கிராமிய வங்கி
- கிணிகம கிராமிய வங்கி
- பூனாகல கிராமிய வங்கி
- நாயபெத்த கிராமிய வங்கி
- ஹெலஹல்பே கிராமிய வங்கி
- பியரபத்தோவ கிராமிய வங்கி
- சுமதுரகம கிராமிய வங்கி
- நுகசெவன கிராமிய வங்கி
- அடகு மற்றும் சேமிப்பு நிலையம்

**பொது முகாமையாளர்.**

2023.11.08ம் திகதி
**வ/ப பண்டாரவளை ப.நோ.கூ. சங்கத்தில்**

Repeat Your Ad For Better Offers

## அறிவித்தல்

மல்லவபிடிய பிரதேச செயலாளர் என்.ஏ.ஏ.எஸ் பிரியங்கர ஆகிய என்னால் 2024ஆம் வருடத்திற்கான மல்லவபிடிய பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 01 கடுபிடிய கள்ளுத் தவறணை வாடகை விற்பனைக்கான விலைமனு 2023.09.12ஆம் தகிதி மு.ப. 10.30 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பிட்ட நிபந்தனைகளுக்காக 2344 ஆம் இலக்க 2023.08.04ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியை பார்க்கவும்.

**என்.ஏ.ஏ.எஸ். பிரியங்கர**
**பிரதேச செயலாளர் - (பதில் கடமை)**
**பிரதேச செயலகம்**
**மல்லவபிடிய**
**2023 ஆகஸ்ட் 08ஆம் தகிதி**
**மல்லவபிடிய பிரதேச செயலகத்தில்.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## போதனா வைத்தியசாலை - களுத்துறை

## கேள்விக்கான அழைப்பு

01. களுத்துறை போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழக்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| கேள்வித் தொடர் இலக்கம் | கேள்வியின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப்பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| THK/AG/Pro 01/2023 | Supply, Delivery, Installation and Commissioning of Air Condition Machines for operation Theater - A | 2,000.00 | 38,000.00 |
| THK/AG/Pro 02/2023 | Supply, Delivery, Installation and Commissioning of Air Condition Machine for cath Lab | 2,000.00 | 12,000.00 |

02. கேள்வி செயற்பாடுகள் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் நடத்தப்படும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை போதனா வைத்தியசாலை, களுத்துறை, கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் கேள்வி ஆவணங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவண கட்டணங்களை களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு செலுத்தி பின்பு 2023.08.11 முதல் 2023.08.31 வரை அலுவலக நாட்களில் மு.ப9.00 முதல் பி.ப.3.00 வரை காலத்திற்குள் கொள்வனவு செய்யலாம்.

04. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, களுத்துறை பெயரில் 2023.12.31 வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியின் பதிவுசெய்த, இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்குச் சமமான கேள்விப் பிணையொன்றைப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. முறையாக பூர்த்தி செய்த கேள்விகள் இரு பிரதிகளுடன், மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு, வேறுவேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி முத்திரையிடப்பட்ட உறைகளில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் கேள்வித் தொடர் இலக்கம் மற்றும் கேள்விப் பெயரைக் குறிப்பிட்டு 2023.09.01 மு.ப.10.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.

06. தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. மேலதிக விபரங்களுக்கு களுத்துறை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், 034-2222261/62, 034-2226619, 034-2221952 ஐ அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை**
**களுத்துறை**

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## பதவி வெற்றிடம்

### தொலைத்தொடர்பு அதிகாரி தரம் II பதவிக்கான திறந்த முறை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) மேற்குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடத்திற்கு நிரந்தர நியமன அடிப்படையிலான பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆட்சேர்ப்புக்கான தகுதிகள் :**

**கல்வி தகமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட NVQ 5 அல்லது SLQF 3 ஆம் நிலைக்கு குறையாத இலத்திரனியல் அல்லது தொலைத்தொடர்பு தொடர்பாக டிப்ளோமா தகமை அல்லது கட்டுபெத்த NDT டிப்ளோமா தகமை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்கல்வி/தொழில்முறைத் தகுதியினை பெற்றிருத்தல்.

மற்றும்

கல்வி / தொழில்முறை தகுதி பெற்ற பிறகு தொலைத்தொடர்பு துறையில் 3 வருட பணி அனுபவம்.

**வயது**

வயது 18 - 45 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை**

பதவிக்கான ஆட்சேர்ப்பு அளவுகோலின் அடிப்படையில் விண்ணப்பதாரியின் திறன்களை மதிப்பிடுவதற்கான எழுத்து பரீட்சையின் பின்னர் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் பதவிக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் தேர்வு செய்யப்படுவார்கள். முதற்கட்ட தேர்வுக்குப் பின்னர், எழுத்து பரீட்சையில் தேர்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள். எழுத்துத் பரீட்சையில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**விண்ணப்பிக்கும் முறை :**

- **www.trc.gov.lk** இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி கல்வி / தொழில்முறைத் தகுதிகள் மற்றும் அனுபவம் தொடர்பான உரிய சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட நகல்களுடன் **toadd@trc.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேணடும். மின்னஞ்சல் முகவரி தலைப்பாக **"Recruitment of TO-Grade II -External"** எனக் குறிப்பிட வேண்டும்.
- விண்ணப்பத்தின் பிரதியை பதிவுத் தபால் மூலம் கீழே உள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் இடது மூலையில் **"தொலைத்தொடர்பு அதிகாரி தரம் II பதவிக்கான ஆட்சேர்ப்பு // திறந்த முறையிலான"** என குறிப்பிடப்பட வேண்டும்.
- தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை நிறுவன தலைவர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் தெளிவாக இருக்க வேண்டும் மற்றும் கோரப்பட்ட தகவலுக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
- தொடர்புடைய தேவைகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.
- மேற்குபிடப்பட்ட பதவி வெற்றிடத்திற்கான, தகுதிகள், தொழில் பற்றிய விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் பற்றிய மேலதிக தகவல்களை தெரிந்துக்கொள்ள **www.trc.gov.lk** எனும் எமது வலைத்தளத்தைப் பார்வையிடவும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2023.08.31** ஆகும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**இல.276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

## இலங்கை இராணுவம்

## வழங்கல் மனுக்கோரல்

### இறுதிச் சடங்குகளுக்கான சேவை வழங்கல் - 2024

1. **2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி** வரையான காலப்பகுதியினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கான இலங்கை இராணுவத்திற்கு இறுதிச் சடங்குகளுக்கான சேவைகளை வழங்குவதற்கு கொழும்பு, ஸ்ரீ யெவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமைகாரியாலயத்தின் வழங்கல் குழு தலைவரினால் வழங்கல்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அவிஸ்ஸாவளை | காலி | மாத்தறை | கிளிநொச்சி |
| அநுராதபுரம் | திருகோணமலை | மாத்தளை | பதுளை |
| அம்பலாந்தோட்டை | தியதலாவை | நீர்கொழும்பு | பண்டாரவளை |
| அம்பாறை | தம்புள்ளை | முல்லைத்தீவு | ஹம்பாந்தோட்டை |
| எம்பிலிபிடிய | நாவுல | மொனராகலை | ஹபரணை |
| கந்தளாய் | நுவரெலியா | யாழ்ப்பாணம் | கொழும்பு |
| களுத்துறை | பனாகொடை | இரத்தினபுரி | கம்பஹா |
| கேகாலை | புத்தளம் | வவுனியா | கண்டி |
| குருநாகல் | பொலன்னறுவை | சிலாபம் | ஹட்டன் |

2. மனு ஆவணங்களை வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல், மனுக்களை திறப்பதற்கான திகதி மற்றும் நேரம் பின்வருமாறு, மேலும் விண்ணப்பதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அச்சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்களை வழங்குவதற்கான ஆரம்பம் | - | 2023.08.14 |
| மனு ஆவணங்கள் வழங்கும் இறுதி மற்றும் நேரம் | - | 2023.09.20 பி.ப. 3.00 மணி வரை |
| மனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி மற்றும் நேரம் | - | 2023.09.21 மு.ப.10.00 மணி வரை |
| மனு திறக்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் | - | 2023.09.21 மு.ப.10.00<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>இராணுவத் தலைமையக வாகனத் தரிப்பிடம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர,<br>கொழும்பு. |

3. வழங்கலுக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள ஒரு முகாமிற்கு மீள் செலுத்தப்படும் **ரூபா.1,500.00** வழங்கல் வைப்பு பணம் மற்றும் மீள் செலுத்தப்படாத **ரூபா.1,000.00** வழங்கல் விண்ணப்ப கட்டணத்தையும் **கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமைகாரியாலயத்தின் பணிப்பாளர் - நிதி இற்கு** செலுத்தப்பட வேண்டும். (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) அக்கட்டணத்தை செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டை **கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் விநியோக மற்றும் போக்குவரத்து பணிப்பகத்திற்கு** வழங்கி வழங்கலுக்கான மனு விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம்.

4. மனுக்களை இடும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இறுதிச்சடங்குகளுக்கான சேவை வழங்கல் இலங்கை இராணுவம் 2024"** எனக்குறிப்பிட்டு முத்திரயிடப்பட்ட வழங்கல் விண்ணப்பங்களை பதிவுத்தபாலின் மூலம் **தலைவர், இராணுவ வழங்கல் சபை, உபகரண பணிப்பாளர் நாயகம் கிளை, இராணுவ தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு** இற்கு அனுப்பி வைக்கவோ முடியும் அல்லது **வழங்கல் குழு, தலைவர், இலங்கை இராணுவத் தலைமையகம், இராணுவத் தலைமையக வாகனத்தரிப்பிடம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு** எனும் விலாசத்திற்கு சமூகமளித்து, அங்கு வைக்கப்பட்டுள்ள தேசிய வழங்கலுக்கு உரித்தான பெட்டியில் இடவேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் மனு விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை முன்வைக்க வேண்டும்.
   அ. வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதி செய்யப்பட்ட நகல்படிவம்)
   ஆ. விண்ணப்பதாரரினால் பராமரிக்கப்படும் வங்கி கணக்கு தொடர்பிலான வங்கி அறிக்கைகள்
   இ. மேற்கொள்ளப்பட்ட இறுதிச்சடங்குகள் தொடர்பான ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்கள்
   ஈ. விண்ணப்பதாரர் அரச அல்லது அரசு தொடர்பிலான எந்த ஒரு தொழிலையும் மேற்கொள்ளவில்லை என்பதற்கான கிராம சேவகரினால் உறுதி செய்யப்பட்ட எழுத்துமூல அறிக்கை முன்வைக்க வேண்டும்.
   உ. விண்ணப்பதாரியின் சொத்துக்கள் மற்றும் நிதி நிலைத்தன்மையை உறுதிசெய்யும் வகையில் மாகாணத்தின் மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளரினால் பரிந்துரைத்த படிவம் (பொது 170) இனால் ஒவ்வொரு இடத்திற்கும் **ரூபா.10,000.00** இற்கு குறையாத சொத்துமதிப்பீட்டு சான்றிதழை முன்னைக்க வேண்டியதுடன், அச்சான்றிதழ் வழங்கலுக்கான மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்கு **30 நாட்களுக்கு** மேற்பட்டதாக இருத்தல் கூடாது.

6. விண்ணப்பதாரரினால் வழங்கல் விண்ணப்பத்தை கோரும் போது சேவைக்கு விண்ணப்பிக்கும் இடங்களைக் குறிப்பிட வேண்டும்.

7. விண்ணப்பதாரர்களினால் வழங்கப்பட வேண்டிய சேவைகளை வழங்குவதற்கு வேறு தரப்பினரை நியமிப்பின் / நியமிக்க திட்டமிட்டிருப்பின் அவர்களின் (துணை ஒப்பந்ததாரர்கள்) தகவல்களும் அந்தந்த விண்ணப்பிக்கும் இடங்களுக்கு ஏற்ப குறிப்பிடப்படல் வேண்டும்.

8. குறித்த தேவைகளை நிவர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். திணைக்களத்தின் வழங்கல் சபைக்கு எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் / நிராகரிக்கும் முழு உரிமையும் உண்டு.

9. ஆர்வமுள்ள மனுதாரர்கள், இலங்கை இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும், மேலும், **2023.08.14** முதல் **2023.09.20** வரை **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** வரை அரசு வேலை நேரங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்தி 10 ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி தொடர்புடைய மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

10. மேல் குறிப்பிடப்பட்ட முகவரி ஆவது.

| | |
|---|---|
| **கவனத்திற்கு** | : பணிப்பாளர் (வழங்கல் மற்றும் போக்குவரத்து) |
| **விலாசம்** | : இலங்கை இராணுவத் தளபதி,<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு. |
| **தொலைபேசி** | : 0112302568, 0112302569 |
| **மின்னஞ்சல்** | : **dtesandt@army.lk / dtesandt0@gmail.com** |

இராணுவத் தளபதி
இலங்கை இராணுவ தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.

The Housewives' companion
Classifieds on
Daily News

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABM-9969 | TVS | 2016 | ராகம |
| ABG-6063 | பஜாஜ் | 2015 | அனுராதபுரம் |
| ABE-1576 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAT-4679 | பஜாஜ் | 2014 | எம்பிலிபிட்டிய |
| AAC-8459 | பஜாஜ் | 2012 | ராகம |
| YX-6827 | பஜாஜ் | 2012 | குருநாகல் |
| AAG-9161 | பஜாஜ் | 2012 | ராகம |
| YW-0909 | பஜாஜ் | 2011 | ராகம |
| YR-0816 | பஜாஜ் | 2011 | அம்பாரா |
| YI-9700 | பஜாஜ் | 2011 | ராகம |
| YR-0676 | பஜாஜ் | 2011 | மாதரா |
| QU-1287 | பஜாஜ் | 2009 | ரத்தினபுரி |
| QQ-1659 | பஜாஜ் | 2008 | ராகம |
| QN-4290 | பஜாஜ் | 2007 | ராகம |
| QJ-3971 | பஜாஜ் | 2007 | கண்டி |
| QM-9131 | பஜாஜ் | 2007 | கண்டி |
| QF-4769 | பஜாஜ் | 2006 | ராகம |
| QH-4694 | பஜாஜ் | 2006 | ராகம |
| QI-4763 | பஜாஜ் | 2006 | ரத்தினபுரி |
| QC-2078 | பஜாஜ் | 2005 | எம்பிலிபிட்டிய |
| QC-5326 | பஜாஜ் | 2005 | ராகம |
| HV-7460 | பஜாஜ் | 2003 | ராகம |

| மோட்டார் வாகன்ம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBJ-6667 | பியூஜியோ் | 2019 | மாதரா |
| CBA-9136 | MG | 2018 | ராகம |
| KO-4757 | டொயோட்டா | 2008 | ராகம |
| KH-7404 | சுசுகி | 2006 | ராகம |
| HI-0604 | மிட்சுபிஷி | 2003 | ராகம |
| GK-7447 | ஹோண்டா | 2001 | ராகம |
| HZ-2522 | KIA | 2001 | ராகம |
| GD-3421 | டொயோட்டா | 1997 | பாணடுரா |
| 65-0203 | தைஹட்சு | 1992 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAG-4777 | டாடா | 2018 | ராகம |
| DAD-0234 | மஹிந்திரா | 2016 | நுவரேலியா |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PX-0268 | மஹிந்திரா | 2013 | ராகம |
| JC-6569 | தைஹட்சு | 1999 | ராகம |
| JF-7361 | தைஹட்சு | 1999 | குருநாகல் |

| மோட்டார் பயிற்சியாளர் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 60-2871 | டொயோட்டா | 1981 | அம்பாரா |
| 29ஸ்ரீ7058 | டொயோட்டா | 1981 | ரத்தினபுரி |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0773 951 796

திருகோணமலை 0769 138 400

ரத்தினபுரி 0774 857 351

கண்டி 0773 972 860

நுவரெலியா 0777 717 562

அனுராதபுரம் 0767 139 916

அம்பாரா 0773 547 556

குருநாகல் 0764 425 205

எம்பிலிபிட்டிய 0773 610 188

பாணடுரா 0775 215 263

மாத்தறை 0743 601 121

சிலாவ் 0770 288 804

## 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D எனும் பிரிவின் கீழான விற்பனை

## மக்கள் வங்கி
## பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை
## கல்நேவ (179) கிளை

**காணித்துண்டம்:**
வடமத்திய மாகாணம் அநுராதபுரம் மாவட்டத்தில் கல்நேவ பிரதேச செயலாளர் பிரிவின் நியாயாதிக்கத்தினுள்ளும் கல்நேவ பிரதேச சபை நியாயாதிகத்தினுள்ளும் வருகின்ற முஸ்நாவ கிராம அலுவலர் பிரிவு துலான இலக்கம் 473 இலுள்ள கல்மெதியாவ F.V.P 956 இல் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமையதிபதியின் காணித்துண்டங்களாகப் பிரிக்கப்படும் வரைபடத்தில் உள்ளதுமான இல. 60 எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்:**
கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஒரு ஏக்கர், ஒரு றூட் மற்றும் பதினைந்து பேர்ச்சுக்கள் (A-1, R-1, P-15) அல்லது 0.544 ஹெக்டேயர்கள். அநுராதபுர காணிப் பதிவகத்தில் LDQ/Q/18/27 மற்றும் LDQ/Q/20/92 ஆகிய பக்க இலக்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ், அதே இடத்தில் 2023 ஆகஸ்ட் 29 ஆந் திகததி மு.ப. 11.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

ஏலவிற்பனையானது. கொவிட்-19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:-**
2021.10.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அத்துடன் 2021.10.29 ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:**
இந்த ஆதனம், கலாவெவ வீதியில் கல்நேவ கிளையிலிருந்து 1 கிலோமீற்றர் தொலைவிலும், ஹந்துங்கம சந்தியின் வலது புறத்தில் கலாவெவ வீதியில் 4.5 கிலோமீற்றர் தொலைவிலும், நேகம்பஹ சந்தியில் வீதியின் இடது புறத்தில் குறித்த வீதியை முன்னோக்கியும் அமைந்துள்ளது. நேகம்பஹ அரசாங்க வைத்தியசாலை மற்றும் பாடசாலை என்பன வீதியின் வலது புறத்தில் அமைந்துள்ளன.

**கொடுப்பனவு செய்யும் முறை**
ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 01% வரி
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுநர் கட்டணம் 1000/-
5. விற்பனையின் மொத்த செலவு செலவுக்கான தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையின் சான்றுபடுத்துவதற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல.75, மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம் எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி: 0252223035, 0252234870, 025-2222498/0252222500 தொலைநகல்: 025 2235855

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் (10%) தொகையை மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்கூறிய முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286**
**072 3207533, 076 9217329**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
**நீதிமன்ற ஆணையாளரும் உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும், மதிப்பீட்டாளர் மற்றும் (அகில இலங்கை சமாதான நீதவான்)**

EDCS

## மாவட்ட அலுவலகங்களுக்கு குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல்

வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கத்தின் பின்வரும் நகரங்களில் கிளைகளை நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான வர்த்தக ரீதியிலான கட்டிடங்களை குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்படும் திறந்த விலைமனுக் கோரல்.

| தொ. இல. | மாவட்ட அலுவலகம் | கட்டிடம் இருக்க வேண்டிய நகரம் | தேவையான சதுர அடி அளவு |
|---|---|---|---|
| 01 | காலி மாவட்ட அலுவலகம் | காலி | 4800-5000 |
| 02 | கேகாலை மாவட்ட அலுவலகம் | கேகாலை | 4000-4500 |
| 03 | திருகோணமலை மாவட்ட அலுவலகம் | திருகோணமலை | 3550-3600 |
| 04 | மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் | மட்டக்களப்பு | 3000-3500 |
| 05 | மாத்தளை மாவட்ட அலுவலகம் | மாத்தளை | 2500-2600 |
| 06 | கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் | கிளிநொச்சி | 2500-2600 |

**கட்டிடம் தொடர்பில் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்:**

- கேள்வி சமர்ப்பிக்கப்படும் கட்டிடமானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களின் பிரதான வீதிக்கு அல்லது கிளை வீதிக்கு முகப்பாக நகரத்திற்கு அண்மித்ததாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்திற்குப் பொருத்தமான வகையில் இருக்க வேண்டும் என்பதுடன் கட்டிடத்தில் தரைக்கு தரையோடு (Tile) பதிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஆகக் குறைந்தது 05 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் இருத்தல் வேண்டும்.
- சிறந்த தரத்துடனான துப்புரவேற்பாட்டு வசதிகள் (ஆகக் குறைந்தது 04 மலசலகூடங்கள்) இருத்தல் வேண்டும்.
- முழுக் கட்டிடமும் வளிச் சீராக்கத்துடன் இருத்தல் வேண்டும் வளிச் சீராக்கம் அற்றவையானால் வளிச் சீராக்கம் செய்து கொடுக்கக் கூடிய விலைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- நீர் மற்றும் மின்சார வசதிகள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும் என்பதுடன் நீரைச் சேமித்து வைப்பதற்காக 2000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் விலைகளுடன் கட்டிடத்தின் திட்ட வரைபடம் மற்றும் உறுதியின் பிரதியொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் மாதாந்த வாடகை போன்று 6 மடங்கு தொகை முற்பணமாக வழங்கப்படும்.

உரித்துடைமையை நிரூபிக்கும் மற்றும் இயைபுடைய சகல ஆவணங்களுடன் உரிமையாளர் அல்லது அட்டோர்ணி அதிகாரம் உள்ளவர்கள் மாத்திரம் விலைமனுக்களை 2023.08.25ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன் சங்கத்தின் பிரதான செயலாளருக்குக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டிட குத்தகைக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**கவனிக்கவும்:** விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரிகளை பிரதான அலுவலகம் அல்லது மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அம்மாதிரிப் படிவங்களிலேயே கேள்விப் படிவங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 2023.08.31 வியாழக்கிழமை பி.ப. 2.30 இற்கு தலைமையகத்தின் நிர்வாக சபை அறையில் திறக்கப்படுவதுடன், அன்றையதினம் உங்களுக்கு சமுகமளிக்க முடியும் எனத் தெரிவிக்கிறேன்.

**பிரதான செயலாளர்,**
**வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கனக் கடனுதவிச் சங்கம்,**
**இல. 294, காலி வீதி, கொழும்பு-03.**
**தொலைபேசி இல. 0112 370067 / 0112 575172**
**தொலைநகல்: 0112 577475**

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்
## மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

**(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் (கொழும்பில் நடைபெறுகின்றது).**

சிலாபம், புத்தளம் வீதி, திம்பில்ல வத்த, இல: 100 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள ஏ.எஸ்.ஏக்கிரி ஸ்போட்ஸ் நிறுவனம் (தனியார்) ஒடுக்குதல் பற்றிய விடயம் தொடர்பானது.

**வழக்கு இலக்கம் :** HC (Civil) / 51/2023/Co
**தன்மை : கம்பனி**
**நடைமுறை : சுருக்கம்**
**பெறுமதி :**

ஒடுக்குதல் சட்டவிதிகள் 1939 உடன் சேர்த்து வாசிக்கக் கூடிய 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி XII ஆம் பிரிவிற்கு ஏற்ப நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான ஒரு விண்ணப்பம் தொடர்பான விடயம்.

**ஏபிஎஸ் லோஜிஸ்டிக்ஸ் இன்டர்நெஷனல் (தனியார்) நிறுவனம்,**
**இல: 77, பார்க் வீதி, கொழும்பு-02**

**மனுதாரர்**

குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் தொடர்பாக கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண, நீதிமன்றத்தினால் 2023.07.12ந் திகதியாகிய மனு, மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்காக, கொழும்பு-02, பார்க் வீதி, இல: 77 என்ற பதிவு காரியாலயத்தில் அமைந்துள்ள ஏபிஎஸ் லோஜிஸ்டிக்ஸ் இன்டர்நெஷனல் (தனியார்) நிறுவனம், இனால் 2023 ஜூலை 13ஆந் திகதி அந்நீதிமன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டதெனவும், அம்மனு 2023 ஒக்டோபர் 23ஆந் திகதி நீதிமன்றத்தில் முன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது எனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும் மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஒப்பம்:**

குமுது ராஜபக்ஷ,
கொன்சிலியம் சட்டத்தரணிகள்,
இல: 1395/5,ஹோகந்தர வீதி,
பன்னிப்பிட்டிய

**குறிப்பு:** அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு.குமுது ராஜபக்ஷ சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் ஆளின் பெயர் மற்றும் முகவரியும் கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஆள் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023 ஒக்டோபர் மாதம் 22ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**குமுது ராஜபக்ஷ,**
**கொன்சிலியம் சட்டத்தரணிகள்,**
**இல: 1395/5,ஹோகந்தர வீதி,**
**பன்னிப்பிட்டிய**

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**1. நிரந்தர மேலதிகப்பற்று தொடர்பு இல. 77459044**

இல.816/2, 6ஆவது ஒழுங்கை, ஜயமாலபுர, கம்பொல, என்னும் முகவரியைச் சேர்ந்த தம்மிக்க ஜயனாத் விஜேசிறிவர்தன என்பவர் (வோட்டர்கேட் இன்டர்நஷனல் பிரைவேற் லிமிட்டெட்) ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2018.10.12ஆம் திகதி 2093ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.10.01ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையாக உள்ள முதல் மற்றும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டி என்பவற்றையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் **இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ** என்னும் முகவரியைச் சேர்ந்த **திருவாளர்கள் T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. டி. கருணாரத்ன அவர்கள்** 2023.09.08ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கம்பளை பதிவுப்பிரிவில் உடபலாத்த கங்க இஹல கோரளையில் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேசசபையில் கம்பொலவல கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 1077ல் கம்பொலவில கிராமத்தில் அமைந்த **"மரியவத்த எஸ்டேற்றின் மரியவத்த பிரிவு"** என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.எம். அபேரத்ன தயாரித்த 07.11.1987. திகதியிட்ட வரைபடம் இல. 57ல் விபரித்த **துண்டு 2** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு **வடக்கில்** கம்பொலவல வரை வீ.சீ. பாதையும், **வடகிழக்கில்** மேற்குறிப்பிட்ட வரைபடம் இல57ல் துண்டு 01ம், **தென்கிழக்கில்** வரைபடம் இல. 57ல் துண்டு 3ம், **மேற்கில்** வரைபடம் இல.1442ல் துண்டு 96ம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 57ன் படி இருபது பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.20) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கம்பொல காணிப்பதிவகத்தில் G21/08ல் பதிவு செய்யப்பட்டது.

ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனம்/ ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் இலங்கை வங்கிக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர்களைத் தொடர்பு கொள்வதன் ஊடாகப் பார்வையிட முடியும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

**திருமதி.ஆர்.எம்.டீ. ரத்ணாயக்க**
**சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடல்) இலங்கை வங்கி**
**புறக்கோட்டை**

**தொடர்புகளுக்கு -011-2452059**

Daily News Classifieds, the Housewives' companion

# தென்கொரிய பௌத்த பிக்குணி தயாரித்துள்ள திரைப்படம்

## பாராட்டு தெரிவித்துள்ள பாப்பரசர்

ஆழமான சமய தத்துவங்களை திரைப்பட வடிவில் தருவதில் வெற்றி பெற்றிருக்கும் 28 வயதான தென்கொரிய பௌத்த பிக்குணி தயாரித்துள்ள 'மலைப் பிரசங்கம்' என்ற புதிய திரைப்படம் விரைவில் நெட்பிளிக்கில் திரையிடப்படவுள்ளது. பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ள இத்திரைப்படம் பாப்பரசரின் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தாய்ஹா சுனிம் என்ற இந்த பௌத்த பிக்குணி, திரைக்கதை வடிவமைப்பு, இயக்கம் மற்றும் தயாரிப்பு நிர்வாகத்தில் ஆர்வம் கொண்டவர் என்றும் 2007ஆம் ஆண்டு முதல் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் அவர், இதுவரை 90க்கும் அதிகமான குறும் படங்களை தயாரித்து வெளியிட்டிருப்பதாகவும் 'பூட்டான் லைவ்' செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

'த லாஸ்ட் வேர்ட் ஒப் சோக்கரடீஸ்', 'வட் இஸ் மை ட்ரூ செல்ஃப்' ஆகிய இவரது இரு குறும்படங்கள் உலக திரைப்பட விழாக்களில் 65 விருதுகளைப் பெற்றுள்ளது. இவர் தயாரித்த சேர்மன் ஒன் த மவுண்ட் (மலைப் பிரசங்கம்) என்ற முதல் முழுநீள திரைப்படம், பௌத்த மற்றும் கிறிஸ்தவ தத்துவ ஞான தளங்களில் காணப்படும் ஒற்றுமைகளை திரை மொழியில் வெற்றிகரமாக கொண்டு வந்திருப்பதாக படத்தைப் பார்த்த விமர்கர்கள் பாராட்டியுள்ளனர்.

மதங்களுக்கு இடையிலான உலக இணக்கப்பாடு வாரத்தின் போது இத்திரைப்படம் ஐ.நா. நியூயோர்க் தலைமையகத்திலும், ரோம் பாப்பரசர் பல்கலைக்கழகத்திலும் திரையிடப்பட்டது. திரைப்படத்தை ரசித்த பாப்பரசர் பிரான்சிஸ் தன் பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தார்.

மலைப் பிரசங்கம் என்பது கிறிஸ்துநாதர் நிகழ்த்திய முக்கியமான போதனைகளாகும். கிறிஸ்தவ தத்துவங்களுக்கு அடிப்படையாகக் காணப்படும் இப் பிரசங்கமும் பௌத்த போதனைகளும் எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதை தத்துவஞான அடிப்படையில் இத்திரைப்படம் அலசுவதாக வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மணிப்பூர் கலவரம் இன ரீதியானது, மதரீதியானது அல்ல

## இந்திய மத்திய அரசு விளக்கம்

இரண்டு மாதங்களுக்கு முன்னர் மணிப்பூரில் ஏற்பட்ட கலவரம் மத ரீதியானது அல்ல என்றும் அது இன ரீதியானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரின் முப்பது லட்சம் மக்கள் தொகையில் அரைவாசியாகக் காணப்படும் 'மேதி' இன சமூகத்துக்கும் மலைவாழ் நாகர் மற்றும் குக்கி சமூகத்தினருக்கும் இடையே, பழங்குடி அந்தஸ்து, காணி உரிமை பறிபோகலாம் என்ற அச்சம் காரணமாகவே முறுகலும் சந்தேகமும் ஏற்பட்டு பெரும் இனக் கலவரமாக உருவானது என்றும் இதில் மதம் சம்பந்தப்படவில்லை என்றும் இந்திய அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த இனக் கலவரத்தால் 130 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 104 முதியவர் முதல் இரண்டு மாத ஆண் குழந்தைவரை பல் வயதினரும் அடங்குவர். 400க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். சுமார் அறுபது ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இக்கலவரத்தில் 349 ஆலயங்கள், பாடசாலைகள், ஏனைய நிறுவனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஜூலை மாதம் வெளியான காணொளியில் இரண்டு குக்கி இனப் பெண்கள் நிர்வாணமாக பாதைவழியே நடத்திச் செல்லப்படும் காட்சி வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக வருத்தம் தெரிவித்த இந்தியப் பிரதமர், இந்தியாவுக்கு தலைகுனிவு ஏற்பட்டிருப்பதாகவும் மணிப்பூர் மகள்மாருக்கு ஏற்பட்டதை ஒருபோது மன்னிக்க முடியாது என்று கூறினார்.

மலைவாழ் மக்கள் மத்தியில் மியன்மார்வாசிகள் வந்தேறு குடிகளாக வசிப்பதாக வெளியான தகவல் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. இதேசமயம் ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை புதுடில்லி நிராகரித்து விட்டது.

# நானுஓயாவில் கத்திக்குத்து; சிகிச்சை பலனின்றி வர்த்தகர் உயிரிழப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)

நானுஓயாவில் கத்திக்குத்துக்கு இலக்காகிய நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த வர்த்தகர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய கருப்பையா ராமசுந்தரம் என தெரியவருகின்றது. நானுஓயா பிரதான நகரில் கடந்த திங்கட்கிழமை (07) காலை இடம்பெற்ற வாக்குவாதம் கைகலப்பாக மாறி இறுதியில் கத்திக்குத்தில் முடிந்தது.

இச்சம்பவத்தில் வர்த்தகர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் வர்த்தகர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (9) உயிரிழந்துள்ளார். வர்த்தக நிலைய வாடகை மற்றும் பண கொடுக்கல் வாங்கல் காரணமாக வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதாக தெரியவருகின்றது. கத்திக்குத்தினால் வர்த்தகரின் உடலில் பல இடங்களில் ஆழமான காயங்கள் ஏற்பட்டு அதிகளவு குருதி வெளியேறியிருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்.

**கடன் தொடர்பு இலக்கம் 86736546 மற்றும் 86736795.**

தலாவ, மொரகொட, 73ஆவது மைல் கல், இல.136 இல் அமைந்த **"ரஜரட்ட பொலிசக் பிரைவேற் லிமிடெட்டின்"** (PV106046) கடன் பொறுப்புகளுக்காக மீகலேவ பொன்கம, இல.283 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு சேமசிங்ஹ பண்டாரலாகே உதய குமார சேமசிங்ஹ என்பவர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.06.16 ஆம் திகதி 2336 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.06.23 ஆம் திகதி தினகரன், தினமின, மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H.T. கருணாரத்ன அவர்கள் 2023 செப்டெம்பர் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற் குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை

வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், தலாவ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நுவரகம் பற்று/கோரளையில் இல. 405, மொரகொட என்ற கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மொரகொட கிராமத்தில் அமைந்துள்ள காணி வடக்கில் ஹேமச்சந்திர விதானகே என்பவரின் காணியையும் கிழக்கில் எம்.ஜி. புஷ்ப வீரரத்ன என்பவரின் காணியையும் தெற்கில் டபிள்யு.எம். ஹீன்மெனிக்கே என்பவரின் காணியையும் மேற்கில் அனுராதபுரம் தலாவ வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் இரண்டு ரூட்கள் (ஏ1 - ரூ2 - பே0) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அனுராதபுர மாவட்டக் காணிப் பதிவகத்தில் LDO/L/18/57 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பி. ஏக்கநாயக்க தயாரித்த 2010.06.01ஆம் திகதி 053ஆம் இலக்க அண்மைய வரைபடத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பி. ஏக்கநாயக்க தயாரித்த 2010.06.01ஆம் திகதி 053ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 01 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி மேற்குறித்தவாறு மொரகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் ஹேமச்சந்திர விதாரனகே என்பவரின் காணியையும் (தற்போது மின்சார இணைப்பும் காணியும் ஈ.எம்.என்.கே. ஏக்கநாயக்க என்பவரால் பயன்படுத்தப்படுகிறது) கிழக்கில் எம்.ஜி. புஷ்ப வீரரத்ன என்பவரின் காணியையும் (தற்போது காணி ஈ.எம்.என்.கே. ஏக்கநாயக்க என்பவரால் பயன்படுத்தப்படுகிறது) தெற்கில் டபிள்யு. எம்.ஹீன்மெனிக்கே என்பவரின் காணியையும் (தற்போது காணி ஈ.எம்.என்.கே. ஏக்கநாயக்க, விக்டர் ஹெட்டிக்கொட, டபிள்யு.எம். ஹீன்மெனிக்கே ஆகியோரால் பயன்படுத்தப்படுகிறது) மேற்கில் டபிள்யு. எம். ஹீன்மெனிக்கே என்பவரின் காணியையும் (தற்போது காணி விக்டர் ஹெட்டிகொட, டபிள்யு. எம். ஹீன்மெனிக்கே ஆகியோரால் பயன்படுத்தப்படுகிறது) வீதி ஒதுக்கத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒரு ஏக்கர் இரண்டு ரூட்கள் (ஏ1-ரூ2-பே0) அல்லது பூச்சியம் தசம் ஆறு பூச்சியம் ஏழு பூச்சியம் ஹெக்டயர் (0.6070) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஏ. பிரேமரத்ன தயாரித்த 2015.09.05ஆம் திகதி 251/15 என்ற இலக்கத்தைக் கொண்ட மிக அண்மைய வரைபடத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது

"மொரகொட கெலே" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஏ. பிரேமரத்ன தயாரித்த 2015.09.05ஆம் திகதிய 251/15 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு இல. A என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி மேற்குறித்தவாறு மொரகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டுகள் 132, 137 என்பவற்றையும் கிழக்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டு 137 மற்றும் காணித்துண்டு 136இன் மீதிப்பாகம் என்பவற்றையும் தெற்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டு 193 மற்றும் காணித்துண்டு 136இன் மீதிப் பாகம் என்பவற்றையும் மேற்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டுகள் 193,135,133 என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒரு ஏக்கர் இரண்டு ரூட்கள் (ஏ1-ரூ2-பே0) அல்லது பூச்சியம் தசம் ஆறு பூச்சியம் ஏழு பூச்சியம் (0.6070) ஹெக்டயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

**ஒதுக்கங்கள்**

1. இக்காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் அனைத்துக் கனிமங்களுக்குமான (இவ்வுறுதியில் பெறுமதிமிக்க கல் எனக் குறிப்பிடப்படும்) உரிமையும் அத்தகைய கனிமங்களை அகழ்வதற்கான, தேடுவதற்கான, அங்கு வேலை செய்வதற்கான, எடுத்துச் செல்வதற்கான உரிமையும் அரசுக்கே உரியது.
2. காணி உரிமையாளருக்குக் காணி மீதுள்ள உரித்தானது இவ்வுறுதியின் திகதியில் இக்காணி மீது தற்போது காணப்படும் எந்தவொரு வழி வாய்க்கால் உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்**

1. உரிமையாளர், 1/4 ஏக்கர்கள் மேட்டுநிலம், 1 1/2 ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி என இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவின் அலகைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது
2. உரிமையாளர், இங்கு 1/4 ஹெக்டயர்/ ஏக்கர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.
3. நிபந்தனை 01இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
4. நிபந்தனை 02இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
5. இக்காணியோ அதன் எந்தவொரு பகுதியோ கட்டுமானக் காலத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட அல்லது இதன்பிறகு கட்டப்படவுள்ள நீர்ப்பாசன வசதியின் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக இருந்தால் அல்லது இதன்பிறகு நீர்ப்பாசனம் மாறினால் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடிய பகுதி தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 453) கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் வரும் எந்தவொரு விதிக்கும் உரிமையாளர் இணங்க வேண்டும்.
6. உரிமையாளர், அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்துமூல அனுமதியையும் உரிய அதிகாரசபையிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாது காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் கனிமங்களை அகழவோ தேடவோ எடுக்கவோ உரிமைகொண்டாடவோ விற்கவோ வேறு விதத்தில் கையுதிர்க்கவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூல முன்னனுமதி இன்றி காணியோ அதன் ஏதேனும் பாகமோ கையுதிர்க்கப்படலாகாது.

இச்சொத்துடன் தொடர்புடைய உரித்தாவணங்களையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் 2023.08.21 தொடக்கம் இலங்கை வங்கி **ரஜின சந்திக் கிளை** கிளை முகாமையாளருடன் தொலைபேசி இல. 0252275057 இல் தொடர்பு கொண்டு ஏலவிலை கோருவோர் இலவசமாக பார்வையிடலாம்.

*இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப் படி,*

**திருமதி DMDD பத்திராஜா,**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி,**
**ரஜின சந்திக் கிளை**
2023.07.25



அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் திகதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்:-

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. ஜோசப் சூசைதாசன்<br>இலக்கம். 158/31A<br>ரோயல் ரேஞ்ச்<br>தொலலந்த கார்ட்ன்ஸ்<br>தலவத்துகொட | அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 2 | திரு. கலாநிதி பி. கே. ஜகத் பெரேரா<br>373B, வெதகே வத்த வீதி<br>மாகம்மன, ஹோமாகம | வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 3 | திரு. பாஷ்வர சேனாங்க குணரத்ன<br>இலக்கம். 10/6, வித்யால மாவத்தை,<br>பன்சலை வீதி, கல்கிசை | அரச மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். |

மேலே நியமிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்ட, 'செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம். இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே' என்ற விலாசத்திற்கு 2023 ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம் பெற்றுள்ளது. (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2023 ஆகஸ்ட் 11ஆம் திகதி**


# டிக்கோயா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருட்டு; சந்தேகத்தில் பூசகர் கைது



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா சஞ்சிமலை மேற்பிரிவு தோட்டத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு கொள்ளை சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் அம்மன் கழுத்திலிருந்த ஒன்றரை பவுண் தங்கத்திலான தாலியுடன் கூடிய சங்கிலி மற்றும் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் என்பன திருடப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தின் கதவு நேற்று (10) காலை உடைக்கப்பட்டிருந்ததை கண்ட ஆலய நிர்வாகம் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்தனர்.

இதனையடுத்து நோர்வூட் பொலிஸார் குறித்த தோட்டப் பகுதிக்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். இதன்போது ஆலய உண்டியல் மற்றும் கத்தி என்பனவற்றை தேயிலை மலையிலிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை ஹற்றனிலிருந்து பெட்டிமா என்ற பொலிஸ் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. பொலிஸ் மோப்ப நாய் உண்டியல் இருந்த தேயிலை மலையிலிருந்து நேரடியாக ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மூலஸ்தானத்துக்கு சென்று அமர்ந்து கொண்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் ஆலய பூசகர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரை சந்திப்பதற்கான வாய்ப்பு இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அண்மையில் கிடைத்தது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படம்: இரத்தினபுரி சுழற்சி நிருபர்)


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

## பெறுகை அறிவித்தல்

### நுவரெலியாவிலுள்ள சுற்றுலா சார்ந்த சுற்றுலா பங்களாவிற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை பழைய அலுவலகக் கட்டிடத்தின் மீள் அபிவிருத்தி – வரைபட ஆலோசகரை நியமித்தல்

**ஒப்பந்த இலக்கம்: PD/UDA/CPC/MEP/N-ELIYA/025/2023**

1. நுவரெலியாவிலுள்ள சுற்றுலா சார்ந்த சுற்றுலா பங்களாவிற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை பழைய அலுவலகக் கட்டிடத்தின் மீள் அபிவிருத்திக்கு வரைபட ஆலோசகரை நியமிப்பதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நகர அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் ஆலோசனை பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.
2. குறிப்பு விதிமுறையில் (TOR) விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், ''நுவரெலியாவிலுள்ள சுற்றுலா சார்ந்த சுற்றுலா பங்களாவிற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை பழைய அலுவலகக் கட்டிடத்தின் மீள் அபிவிருத்தி - வரைபட ஆலோசகரை நியமித்தல்'' என்பதற்கு ஆலோசனைக் கட்டணம் சகிதம் மேற்கூறப்பட்ட சேவைக்கு தரப்பட்டுள்ள வடிவத்தைப் பயன்படுத்தி விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஆகஸ்ட் 14ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 28ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' - படிநிலை I, 07ஆம் தளம், நகர அபிவிருத்தி அதிகார சபை, பெறுகைப் பிரிவு, பெறுகைத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், ஆலோசனை பெறுகைக் குழு (CPC), பெறுகைப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபை, 7ஆம் தளம், செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை, 7ஆம் தளம், பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
5. சகல விலைமனுதாரர்களும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பு விதிமுறையைப் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் ஒருமுறை அறிவிக்கப்பட்டவுடன் உடனடியாக சேவையை ஆரம்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறிப்பு விதிமுறையின் பிரகாரம் சேவையை நிறைவு செய்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023 ஒக்டோபர் 18ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஆலோசனை பெறுகைக் குழு (CPC),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
**''செத்சிறிபாய'' - படிநிலை I,**
**பத்தரமுல்ல.**



நிவ் பவர் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிடெட்

PV00246999

## கடன் கொடுத்தவர்கள் கூட்டத்திற்கான அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கமைய கம்பனியைக் கலைப்பதற்கு கடன் கொடுத்தவர்களுக்கான கூட்டமொன்று 2023 செப்டெம்பர் 15ஆம் திகதி கொழும்பு-03, இல. 01, ஸ்டெம்புல் பிளேஸில் இடம்பெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**சபை பணிப்பாளர்கள்.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைக்கோரலுக்கான அழைப்பு

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| மட்டக்களப்பு, பிள்ளையாரடி, EUSL, சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் உட்புற உள்ளக வீதியின் மிகுதி நிர்மாண வேலைகள் (படிநிலை-04) |
| மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உட்பிரிவுகளுக்கு போக்குவரத்து விளக்கு முறைமையை நிறுவுவதற்கான சிவில் வேலைகள் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-08-11ஆம் திகதி முதல் 2023-08-18ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## போதனா வைத்தியசாலை - கராப்பிட்டிய

## கேள்விகோரல்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் காணப்படும் கீழ்க்காணும் நிர்மாணங்களுக்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோருவதற்கு வைத்தியசாலை பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்மாணத்திற்காக சகல கேள்வி பத்திரங்களும் இரு பிரதிகளுடன் பொறுப்பேற்கப்படும்.

| தொடர் இல | வேலையின் பெயர் | விண்ணப்ப தாரரின் தகைமைகள் | மீளளிக்கப் படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | மதிப்பிடப்பட்ட அடிப்படைச் செலவு (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| 1 | அவசர சிகிச்சை பிரிவின் தீவிர சிகிச்சைப் பிரிவை நீடித்தல் | C6&C8 | 3500.00 | 76000.00 | 7.6 |
| 2 | அவசர சிகிச்சைப் பிரிவின் தரை மாடியை வளிச்சீராக்கல் மேற்கொள்ளல் | EM 5 மற்றும் C5, C6& C7 | 3500.00 | 129,000.000 | 12.9 |

01. இதற்காக அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத பிணை வைப்புத் தொகையைச் செலுத்தி வார நாட்களில் 2023.08.31 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. 2023.09.01 மு.ப.10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அதற்கு முன் கிடைக்குமாறு கேள்விப்பத்திரங்களை பணிப்பாளர் போதனா வைத்தியசாலை, கராப்பிட்டி என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

    கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
04. கேள்விப்பத்திரங்கள் உள்ளிடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் குறித்த வேலையின் பெயரைத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
05. எந்தக் கேள்விப் பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலை பெறுகைக்குழுவிற்கு உரியது.

விபரங்களை - 091-2232250, 091-2232176 தொ.பே.இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை,**
**கராப்பிட்டி காலி,**
**2023.08.11**

## பெறுகை அறிவித்தல்

### இரத்தினபுரி மாநகர சபை - சப்ரகமுவ மாகாண சபை

### இரத்தினபுரி மக்கள் சந்தை மேல்மாடி நிர்மாணம் (இறுதிக்கட்டம்)

கீழக்காணும் வேலை விடயங்களுக்காக இரத்தினபுரி நகர சபையின் மாநகர ஆணையாளரால் 2023.09.05 மு.ப.11.00 வரை கேள்விதாரர்களிடமிருந்து வேறுவேறாக பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல | வேலை விடயம் | பொதுவான மதிப்பீட்டு வேலை பெறுமதி (ரூ.மில்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூ) | மீளளிளக்கப் படும் கேள்வி பிணை முறி ரூ. | ஒப்பந்தப் பதிவு பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | இரத்தினபுரி மக்கள் சந்தை மேல்மாடி நிர்மாணம் (இறுதிக்கட்டம்) | 29.92 | 10,000.00 | 345,000.00 | C6/C5/C4 |

01. இக்கேள்வி கோரல் தேசிய போட்டி பெறுகை செயற்பாட்டின் கீழ் இடம்பெறுவதுடன், அவ்வேலை ரூ.50 மி.இற்கு குறைவாக இருப்பதால் நிதி சுற்றுநிருப இல 04/2006 (II) மற்றும் 04/2016 (III) மற்றும் 04/2016 (iv) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த (CIDA) தரப்படுத்தல் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக கேள்விதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர். அச் சுற்றுநிருபத்துடன் சம்பத்தப்பட்ட பின்னர் வெளியிடப்படும் அரச நிதி சுற்றுநிருபம் 03/2020 மற்றும் 03/2020(i) இல் குறிப்பிடப்படுமாறு சுற்றுநிருபமும் பெறுகை விடயங்களுடன் பொருந்தும்.

02. 2023.08.14 முதல் 2023.09.04 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை மேலே குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணத்தை செலுத்தி, இரத்தினபுரி மாநகரசபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகள் காசாக மேற்கொள்ளல் வேண்டும்.

03. சகல கேள்விதாரர்களும் மேற்படி வேலைக்காக மேற்படி கேள்விப் பிணைமுறி பெறுமதிக்கு குறித்த கேள்வி பிணைமுறியாக இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் 2023.09.05 முதல் 2024.01.02 வரை செல்லுபடியாகுமாறு, “மாநகர ஆணையாளர், மாநகரசபை, இரத்தினபுரி” பயனாளியாக பெயர் குறிப்பிட்டு பெற்றுண்கொண்டு கேள்விப் பிணைமுறியின் மூலம் அல்லது குறித்த வேலையின் பெயரில் கேள்விப் பிணைமுறித்தொகையாக இரத்தினபுரி மாநகர சபையில் குறித்த தொகையை வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை இரத்தினபுரி மாநகர சபைக்கு வருகைதந்து அல்லது தொ. பே.இல : 045-2222275/045-2223502/045-3122714 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவைப்படுவோருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.09.05 மு.ப.11.00 இற்கு அல்லது அதற்கு முன்பு இரத்தினபுரி மாநகர சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம் அல்லது “மாநகர ஆணையாளர், மாநகரசபை, இரத்தினபுரி” என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறு உறைகளில் இடப்பட்டு அப்பிரதிகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2023.09.05 மு.ப.11.30 இற்கு இரத்தினபுரி மாநகர சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை இரத்தினபுரி மாநகர சபை பெறுகைக்குழுவிற்கு உரியது.

08. சகல கேள்விகளும் 2023.12.05ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**இரத்தினபுரி**
**2023.08.11**

## வன பரிபாலனத் திணைக்களம்

## செயற்பாடற்ற சொத்துக்கள் அகற்றுதல் - 2023

## வாகனங்களை விற்பனை செய்வதற்கான திறந்த கேள்வி கோரல்

பத்தரமுல்ல ரஜ மல்வத்த வீதி இல. 82 ‘சம்பத்பாய’ கட்டிடத்தில் அமைந்துள்ள வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான, பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ள கீழே இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்கான திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | வாகன இல | வாகன வகை/ மொடல் | பரீட்சிக்கக்கூடிய இடம் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | 65-1574 | ISUZU UBS69G - ஜீப் | மாவட்ட வன அலுவலகம் - இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 2 | MW-1927 | KINETIC BOSS - மோட்டார் சைக்கிள் | அடவி வன அலுவலகம் - இரத்தினபுரி | |
| 3 | MW-1916 | KINETIC BOSS - மோட்டார் சைக்கிள் | | |
| 4 | 32-3062 | NISSAN PETROL - ஜீப் | அடவி வன அலுவலகம் - அக்குரஸ்ஸ | மாத்தறை |
| 5 | 153-4984 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | | |
| 6 | GX-7049 | JIALING 125CC - மோட்டார் சைக்கிள் | | |
| 7 | 146-2030 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | | |
| 8 | 48-7432 | TATA LPT709/38- OPEN - லொறி | மாவட்ட வன அலுவலகம் - குருநாகல் | குருநாகல் |
| 9 | BAB-5014 | BAJAJ BOXER MB100 - மோட்டார் சைக்கிள் | அடவி வன அலுவலகம் - மன்னார் | மன்னார் |
| 10 | BAB-4974 | BAJAJ BOXER MB100 - மோட்டார் சைக்கிள் | | |
| 11 | 57-8989 | ISUZU TFS54H - கெப் | மாவட்ட வன அலுவலகம் - மாத்தளை | மாத்தளை |
| 12 | 89-8339 | YAMAHA RS125 – மோட்டார் சைக்கிள் | | |
| 13 | JA-2917 | STARLINE CL 100-9 – மோட்டார் சைக்கிள் | | |
| 14 | 120-9728 | HONDA CG125 BK – மோட்டார் சைக்கிள் | | |
| 15 | HJ-1915 | BAJAJ BOXER AR - மோட்டார் சைக்கிள் | | |
| 16 | 56-5903 | MITSUBISHI L200 – கெப் | அடவி வன அலுவலகம் - நாவலப்பிட்டி | கண்டி |
| 17 | 153-4910 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | | |
| 18 | HJ-2578 | BAJAJ BOXER - மோட்டார் சைக்கிள் | | |
| 19 | 132-5241 | HONDA XL125 - மோட்டார் சைக்கிள் | அடவி வன அலுவலகம் – கண்டி | கண்டி |
| 20 | 147-1898 | HONDA XL125 - மோட்டார் சைக்கிள் | | |
| 21 | JS-2126 | BAJAJ PULSAR - மோட்டார் சைக்கிள் | | |
| 22 | MB-5987 | BAJAJ CT100 - மோட்டார் சைக்கிள் | | |
| 23 | JA - 9647 | HERO HONDA AMBITION - மோட்டார் சைக்கிள் | மாவட்ட வன அலுவலகம் - மொனராகலை | மொனராகலை |
| 24 | 120-9457 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | மாவட்ட வன அலுவலகம் – பதுளை | பதுளை |
| 25 | 139-7837 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | | |
| 26 | 106-5261 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | | |
| 27 | 114-0927 | YAMAHA RS125Z – மோட்டார் சைக்கிள் | | |
| 28 | 106-5260 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | | |
| 29 | HJ-3238 | BAJAJ BOXER - மோட்டார் சைக்கிள் | | |
| 30 | 136-9591 | HONDA CG125 - மோட்டார் சைக்கிள் | | |
| 31 | MW-1934 | KINETIC BOSS - மோட்டார் சைக்கிள் | மாவட்ட வன அலுவலகம் - அம்பாறை | அம்பாறை |
| 32 | 153-4981 | HONDA CG125 PKS - மோட்டார் சைக்கிள் | | |
| 33 | LD-7977 | TATA 207DI - லொறி | அடவி வன அலுவலகம் – ஹபரன | பொலன்னறுவை |
| 34 | GX-6939 | JIALING JH125 - மோட்டார் சைக்கிள் | அடவி வன அலுவலகம் - பொலன்னறுவை | |
| 35 | MW-1940 | KINETIC BOSS - மோட்டார் சைக்கிள் | | |
| 36 | 51-3362 | MITSUBISHI L200 – கெப் | அடவி வன அலுவலகம் - புல்லுமலை | மட்டக்களப்பு |
| 37 | 58-0073 | MITSUBISHI L200 - கெப் | | |

**கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல்:**

1. வாகனங்களைப் பரீட்சிப்பதற்காக 2023.08.14 முதல் 2023.09.01 வரை சகல வார நாட்களிலும் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை பரீட்சிக்கக்கூடிய இடங்களில் வசதி வழங்கப்பட்டுள்ளது.
2. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக செலுத்த வேண்டிய தொகை பற்றிய விபரம் கீழ்க்காணுமாறு

| விபரம் | மீளளிக்கப்படாத கேள்வித் தொகை (ரூ) | மீளளிக்கப்படும் கேள்வித் தொகை (ரூ) |
|---|---|---|
| வாகனம் | 5000.00 | 10,000.00 |
| மோட்டார் சைக்கிள் | 500.00 | 2000.00 |

ஒவ்வொரு வாகனம்/ மோட்டார் சைக்கிளுக்காக கேள்வி விண்ணப்பங்கள் வலயக் அலுவலகம் மற்றும் மாவட்ட வன அலுவலகம் மூலம் மீளளிக்கப்படாத கேள்வித் தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் தலைமையகத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள காசாளர் பணிமனையில் மீளளிக்கப்படும் பிணைவைப்பை செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (கேள்விகளை விநியோகிப்பதற்காக பிணை வைப்புச் செய்தல் 2023.08.31 பி.ப. 3.00 இற்கு முடிவுறும்)

3. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2023.09.01 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் அன்றே மு.ப. 10.15 இற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திணைக்கள கேள்வி திறக்கும் சபையினால் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
4. கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் கேள்வியை சமர்ப்பிக்கும் வாகனத்தின் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை முத்திரையிட்டு திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் 2023.09.01 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் உள்ளிடல் வேண்டும்.
6. ஒவ்வொரு வாகனத்திற்கும் வேறுவேறாக பிணை வைப்பு மற்றும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விகள் திறக்கப்பட்ட பின்பு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு கேள்விச் சபையினால் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் வாகனத்தின் பெறுமதியை கேள்விச் சபையினால் தீர்மானிக்கப்படும் தினத்தில் அல்லது அதற்கு முன்பு காசாக செலுத்தி வாகனங்களை அகற்றிக் கொள்ளல் வேண்டும். அதன் பிறகு வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
8. எந்தக் கேள்வியையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உரித்தாவதுடன் கேள்விச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**கலாநிதி கே.எம்.ஏ. பண்டார**
**வன பாதுகாப்பு அதிபதி**

# இலங்கை கால்பந்து தேர்தல் செப். 16இல்



இலங்கை கால்பந்து சம்மேளத்திற்கான தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 16 ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண கால்பந்து தகுதிகாண் போட்டிக்கு இலங்கை பங்கேற்பதற்கான வாய்ப்பை பெறும் முயற்சியாகவே இந்தத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இலங்கை கால்பந்து மீதான சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பிஃபா) தடை கடந்த ஜனவரி தொடக்கம் நீடித்தபோதும் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் இலங்கை பங்கேற்க பீஃபா கண்டிப்பான நிபந்தனையுடன் அனுமதி அளித்திருந்தது.

இந்நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண போட்டிக்கான தகுதிகாண் தொடர் ஒக்டோபர் 12 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்த போட்டி ஆரம்பிப்பதற்கு குறைந்தது 10 நாட்களுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பிஃபா அறிவுறுத்தி இருந்தது.

இதேநேரம் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கான தேர்தலை நடத்துவதற்காக மூன்று பேர் கொண்ட குழுவை விளையாட்டுத் துறை அமைச்சார் ரொஷான் ரணசிங்க கடந்த ஜூலை 25 ஆம் திகதி நியமித்திருந்தார். இந்நிலையில் இந்தத் தேர்தல் பிஃபா மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படவுள்ளது.

மூன்றாம் தரப்பின் தடையீட்டை காரணம் காட்டியே இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் மீது சர்வதேச கால்பந்து சம்மேளனம் மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனம் தடை விதித்தது. இதனால் இலங்கைக்கான பிஃபா நிதிகள் தடைப்பட்டதோடு சர்வதேச போட்டிகளிலும் இலங்கையால் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற சாப் சம்பியன்சிப் கால்பந்து போட்டியிலும் இலங்கையால் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாபர் அசாம் தலைமையில்

# ஆசிய கிண்ணத்திற்கான பாக். குழாம் அறிவிப்பு



இலங்கையில் நடைபெறவுள்ள ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் ஆசிய கிண்ண போட்டிக்கான பாகிஸ்தான் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒருநாள் அணியின் உப தலைவராக கடந்த ஜனவரி மாதம் நியமிக்கப்பட்ட ஷான் மசூத் நீக்கப்பட்டிருப்பதோடு இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் பஹீம் அஷ்ரப் அழைக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் அணியின் புதிய தேர்வுக் குழு தலைவராக நியமிக்கப்பட்ட இன்ஸமாமுல் ஹக்கின் தலைமையில் முதல் முறை தேர்வு செய்யப்பட்டிருக்கும் இந்த அணியில் வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெறவில்லை.

இதில் இளையோர் ஆசியக் கிண்ணத் தொடரில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்த தய்யப் தாஹிருக்கு முதன் முறையாக பாகிஸ்தான் அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்–பாகிஸ்தான் அணிகள் இடையிலான ஒருநாள் தொடர் இம்மாதம் 22ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே நேரம் ஒருநாள் ஆசியக் கிண்ணத் தொடர் இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகிறது.

***பாகிஸ்தான் குழாம்:***

***பாபர் அசாம் (தலைவர்), மொஹமட் ரிஸ்வான், மொஹமட் ஹரிஸ், இமாம் உல் ஹக், பகார் சமான், இப்திக்கார் அஹ்மட், அப்துல்லா சபீக், சௌத் சகீல், தய்யப் தாஹிர், சல்மான் அலி, பஹீம் அஷ்ரப், சதாப் கான், மொஹமட் நவாஸ், நஷீம் சாஹ், சஹீன் அப்ரிடி, ஹரிஸ் ரவுப், உசாமா மிர், மொஹமட் வசீம் ஜூனியர்.***

# உலகக் கிண்ணத்தில் 9 போட்டிகளில் மாற்றம்




அஹமதாபத்தில் நடைபெறவுள்ள இந்தியா–பாகிஸ்தான் இடையிலான போட்டி உட்பட எதிர்வரும் ஒருநாள் உலகக் கிண்ண தொடரின் ஒன்பது போட்டிகளி போட்டித் திகதி மற்றும் போட்டி ஆரம்பிக்கும் நேரத்தில் மாற்றங்கள் கொண்டு வந்திருப்பதை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் உறுதி செய்துள்ளது.

இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போட்டி ஒக்டோபர் 15 ஆம் திகதி பதில் ஒக்டோபர் 14 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இந்த அட்டவணை மாற்றத்தால் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் பாகிஸ்தானின் மூன்று போட்டிகளும் பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்தின் தலா இரண்டு போட்டிகளிலும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. தவிர ஒக்டோபர் 1 ஆம் திகதிய போட்டி பகலிரவு ஆட்டமாக இருந்த நிலையில் பகல் போட்டியாக மாற்றப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போட்டி அட்டவணை மாற்றப்பட்டதால் ஹைதராபாத்தில் இலங்கைக்கு எதிரான பாகிஸ்தானின் போட்டி ஒக்டோபர் 12 ஆம் திகதியில் இருந்து 10 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தியாவுக்கு எதிரான போட்டிக்கு முன் பாக். அணிக்கு போதுமான கால இடைவெளி அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உலகக் கிண்ண லீக் போட்டிகள் நவம்பர் 11 ஆம் திகதிக்கு பதில் நவம்பர் 12 ஆம் திகதி பெங்களூரில் இந்தியா மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியுடன் நிறைவடையவுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டி ஒக்டோபர் 5ஆம் திகதி நடப்புச் சம்பியன் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையே அஹமதாபத்தில் நடைபெறும் போட்டியுடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் உலகக் கிண்ண போட்டிக்கான டிக்கெட் விற்பனை ஓகஸ்ட் 25 ஆம் திகதி ஆரம்பிக்கும் என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி பைடனை அச்சுறுத்தியவர் சுட்டுக் கொலை



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் மற்ற அதிகாரிகளுக்கு எதிராக இணையத்தில் அச்சுறுத்தல்களை பதிவு செய்த நபர் ஒருவர் எப்.பி.ஐ பொலிஸாரின் சுற்றிவளைப்பின்போது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பைடன் உட்டா மாநிலத்திற்கு பயணிக்க சில மணி நேரத்திற்கு முன்னதாக கிரேக் ரொபட்ஸன் என்ற அந்த நபரை கைது செய்வதற்கு பொலிஸார் அந்த மாநிலத்தில் இருக்கும் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

ஜோ பைடன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் டிரம்ப் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகளை சுமத்தியிருக்கும் அரச வழக்கறிஞர் ஒருவருக்கு எதிராக ரொபட்ஸன் பேஸ்புக்கில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

பைடன் உட்டாவுக்கு வருவதை அறிந்து மாறுவேடத்தில் செல்லவும், எம்24 ரகத் துப்பாக்கியை சுத்தப்படுத்தவிருப்பதாகவும் ரொபட்ஸன் திங்கட்கிழமை இணையத்தில் பதிவிட்டிருந்தார்.

இது மட்டுமன்றி அவரது முகநூல் கணக்கில் பலவகை துப்பாக்கிகளையும் அவர் பதிவிட்டிருந்தார்.


இது தொடர்பில் மேலதிக தகவல்களை அளிக்க எப்.பி.ஐ மறுத்துள்ளது.

இந்நிலையில் கடந்த புதன் (09) காலை ஆறேகால் மணியளவில் சிறப்பு அதிகாரிகள் ரொபட்ஸனின் வீட்டில் பிடியாணையைக் கொடுக்க முயன்றபோது துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது.

அமெரிக்காவை மீண்டும் பெருமைக்குரியதாக மாற்றுவோம் என பொருள்படும் முழக்கத்தை டொனல்ட் டிரம்ப் பயன்படுத்தி வருகிறார். இந்த முழக்கத்தை ஆதரிப்பவராகவும், தன்னை ஒரு டிரம்ப் விசுவாசியாகவும் அறிவித்து கொண்டவர் கிரேக் ரொபட்ஸன் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## பாக். பாராளுமன்றம் கலைப்பு



பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் அல்வி அந்நாட்டு பாராளுமன்றத்தைக் கலைக்க உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் அரசியல், பொருளாதார நெருக்கடி மோசமடைந்து வரும் சூழலில் அடுத்த பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. பிரதமர் ஷெபாஸ் ஷரீஃப் கடந்த புதனன்று (9) ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

வரும் சனிக்கிழமை (12), பாராளுமன்றத்தின் ஐந்தாண்டு காலத் தவணை நிறைவடைவதை அவர் அதில் சுட்டிக்காட்டி இருந்தார்.

பாகிஸ்தானில், 3 மாதங்களுக்குள் அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், அடுத்த ஆண்டு ஆரம்பம் வரை வாக்கெடுப்பு தள்ளிப்போடப்படலாம் என்று தெரிகிறது.

புதிய மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு ஏற்ப, நூற்றுக்கணக்கான தொகுதி எல்லைகளை மறுவரையறை செய்யவிருப்பதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஒத்திவைக்கப்படுவதால் மக்களின் கோபம் அதிகரிக்கலாம். அது அரசியல் நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று கவனிப்பாளர்கள் கூறுகின்றனர்.

இன்னும் 3 நாட்களில் அரசாங்கம் இடைக்காலப் பிரதமரைத் தெரிவு செய்ய வேண்டும். அவர் பாகிஸ்தான் பொதுத் தேர்தல் ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவார்.

## ஹவாய் காட்டுத் தீ: 36 பேர் உயிரிழப்பு



அமெரிக்காவின் தீவுப் பகுதியான ஹவாயின் மவுயி தீவில் வேகமாக பரவிய காட்டுத் தீயில் குறைந்தது 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொலைதூர சூறாவளியால் தீவிரம் அடைந்திருக்கும் காட்டுத் தீயினால் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் சேதம் அடைந்திருப்பதோடு சில பகுதிகள் தீயால் கருகி தரைமட்டமாகியுள்ளன.

ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்ட நிலையில் அவசர நிலையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிலர் காணாமல்போன நிலையில் பாரிய தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து போராடி வருவதோடு ஹெலிகொப்டரில் இருந்த தீயை அணைக்க நீர் ஊற்றப்பட்டு வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பித்த இந்தத் தீ வேகமாக பரவியதை அடுத்து உயிரைக் காக்க குடியிருப்பாளர்கள் கடலில் குதிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

உலக அளவில் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம், அதீத வெப்பம், அதிக காற்று, குறைந்த ஈரப்பதம் மற்றும் உலர்ந்த தாவரங்கள் போன்றவை காட்டுத் தீயின் பரவலுக்கு காரணமாக கூறப்படுகிறது.

# அரிசி விலை உச்சம்



ஆசியாவில் அரிசி விலை வேகமாக அதிகரித்துள்ளது. 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவே மிக அதிக விலையேற்றமாகும்.

உலக நாடுகளுக்கு மிக அதிகமாக அரிசி ஏற்றுமதி செய்யும் இந்தியாவும் தாய்லாந்தும் அவற்றின் ஏற்றுமதி அளவைக் குறைத்துள்ளன. வறட்சியால் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆசியான் சந்தையில் ஒருவகை தாய்லாந்து அரிசியின் விலை தொன்னுக்கு கிட்டத்தட்ட 650 டொலரைத் தொட்டதாகத் தாய்லாந்து அரிசி ஏற்றுமதிச் சங்கம் கூறியது. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பில்லியன் கணக்கான மக்களின் அடிப்படை உணவு அரிசியாக உள்ளது.

அரிசி விலை ஏற்றம் ஏற்கனவே உள்ள பணவீக்கத்தின் பாதிப்பை மோசமாக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அரிசி விநியோகம் குறித்த கவலையும் அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் இந்தியா பாஸ்மதி அல்லாத மற்ற வெள்ளை அரிசி வகைகளின் ஏற்றுமதிக்குத் தடை விதித்தது. வறட்சியைச் சமாளிக்கக் குறைந்த அளவு தண்ணீரில் விளையும் வேறு பயிர்களை வளர்க்கும்படி விவசாயிகளிடம் தாய்லாந்து வலியுறுத்தியுள்ளது.

# ஈக்வடோர் நாட்டு ஜனாதிபதி வேட்பாளர் சுட்டுக் கொலை



ஈக்வடோரில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஊழல் மற்றும் குற்ற கும்பல்களுக்கு எதிராக தீவிர பிரசாரம் நடத்தி வந்த ஜனாதிபதி வேட்பாளர் பெர்னாண்டோ விலாவிசன்சியோ பிரசார கூட்டத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராக உள்ள விலாவிசன்சியோ கடந்த புதன்கிழமை (09) தலைநகர் குயிடோவில் நிகழ்ச்சி ஒன்றுக்கு சென்றபோது தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

ஈக்வடோரில் அரச அதிகாரிகளுக்கும் திட்டமிட்ட குற்றங்களுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டை முன்வைத்த ஒருசில வேட்பாளர்களில் விலாவிசன்சியோவும் ஒருவராவார்.

இந்த படுகொலையை அடுத்து அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்காவில் ஒப்பீட்டளவில் பாதுகாப்பான மற்றும் அமைதியான நாடாக ஈக்வடோர் கருதப்பட்டு வந்தபோதும் அண்மைக் காலங்களில் அங்கு வன்முறைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக போதைக்கடத்தல் கும்பல்களின் வன்முறை அதிகரித்திருக்கும் நிலையில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் இது பிரதானமாகியுள்ளது. முன்னாள் ஊடகவியலாளரான விலாவிசன்சியோ மீது மூன்று முறைகள் துப்பக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர். அவர் கார் வண்டியில் ஏறியபோது முன்னால் வந்த நபர் ஒருவர் அவர் தலை மீது சுட்டதாக அவரது பிரசாரக் குழுவின் தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் துப்பாக்கிதாரி காயம் அடைந்து பின்னர் உயிரிழந்ததாக கூறப்பட்டுள்ளது.

ஈக்வடோரில் முதல் சுற்று ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் போட்டியிடும் எட்டு வேட்பாளர்களில் ஒருவராக இருக்கும் விலாவிசன்சியோ முன்னணி வேட்பாளராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் மிகப்பெரிய கொக்கெயின் உற்பத்தி நாடுகளான கொலம்பியா மற்றும் பெரு நாடுகளுக்கு இடையே இருக்கும் ஈக்வடோர், வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்கு சட்டவிரோத போதைப்பொருட்களை கடத்துவதற்கான பாதையாக பயன்படுத்தப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.